www.padippakam.com



**மும்பை, குஜராத்: தலைவிரித்தாடும் இந்து மதவெறி பயங்கரவாதம்**




**மரண ஓலத்தில் ஈழம் மௌனத்தில் தமிழகம்**

1 - 15 செப்டம்பர்

ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்

## காவிரி: மீண்டும் வஞ்சகம்




படிப்பகம்

www.padippakam.com

# ஏ.வி.டி.: வாலறுந்த நரியின் ஊளை

கடந்த 1-15 ஜூலை இதழில் "ஏ.வி.டி பிரிமியம் டீ"யின் அடக்கு முறைச் சுரண்டல் எனும் தலைப்பில் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டிருந்தோம். அதில் கேரளாவின் இடுக்கி மாவட்டத்திலுள்ள ஏ.வி.டி. நிறுவனத்தின் தேயிலை எஸ்டேட்டுகளில் தொழிலாளர்கள் கொடூரமான சுரண்டல் - அடக்குமுறையில் சிக்கித் தவிப்பதைச் சுருக்கமாகக் கூறியிருந்தோம்.

இதைக் கண்டு அரண்டு போயுள்ள ஏ.வி.டி. நிறுவனத்தின் அர்ணக்கல் எஸ்டேட்டின் மேலாளரான டி.பி. கிங் என்பவரின் சார்பாக, பீர்மேடு வட்டம் கல்லா குளத்தைச் சேர்ந்த இந்நிறுவனத்தின் வழக்கறிஞர் கே.ஜே. தாமஸ் என்பவர், நமது புதிய ஜனநாயகம் இதழுக்கு 24.7.'98 தேதியிட்டு வக்கீல் நோட்டீசு அனுப்பியுள்ளார்.

புதிய ஜனநாயகம் இதழில் வெளியான செய்தியால், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரபலமான ஏ.வி.டி. நிறுவனத்தின் நற்பெயரையும் மதிப்பையும் தரம் தாழ்த்தும் கீழ்த்தரமான செயலை நாம் செய்துள்ளோமாம்! நமது இதழில் வந்த செய்தி, உண்மைக்குப் புறம்பான, ஆதாரமற்ற செய்தியாம்! தொழிலாளர்கள் கொடூரமாகச் சுரண்டப்பட்டு அடிமைகளைப் போல நடத்தப்படுகிறார்கள் என்று அவதூறு செய்து, இந்நிறுவனத்தின் நற்பெயருக்குத் தீங்கு இழைத்துள்ளோமாம்! இதனால் அர்ணக்கல் எஸ்டேட்டின் மேலாளர் டி.பி. கிங் அவர்களுக்கு மிகுந்த மன வேதனை ஏற்பட்டுள்ளதாம்!

எனவே, பு.ஜ. வெளியிட்ட இத்தவறான செய்திக்கு மறுப்பும் வருத்தமும் தெரிவித்து, இதழின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் மன்னிப்பு கோரி அடுத்த இதழிலேயே வெளியிட வேண்டும்; இல்லையேல், ரூ. 5 லட்சம் மான நட்ட ஈடு கோரி புதிய ஜனநாயகம் மீது குற்றவியல் - உரிமையியல் வழக்கு தொடரப்படும் என வழக்கறிஞர் தனது நோட்டீசில் எச்சரித்துள்ளார்.

ஏ.வி.டி. நிறுவனத்தின் சுரண்டல் - அடக்குமுறை பற்றி செய்தி வெளியிட்டதற்காக புதிய ஜனநாயகம் வருத்தமோ, மன்னிப்போ, மறுப்போ ஒருக்காலும் தெரிவிக்காது. அந்நிறுவனத்தின் 'மான இழப்புக்கு' நட்ட ஈடாக ஒரு சல்லிக்காசு கூடத் தரவும் முடியாது. ஏனெனில், புதிய ஜனநாயகம் வெளியிட்டுள்ள செய்தி ஏ.வி.டி. நிறுவனத்துக்கு எதிரான அவதூறு அல்ல; உண்மைச் செய்தி! இதை வெளியிட்டு, ஆயிரக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை விழித்தெழச் செய்வது புதிய ஜனநாயகத்தின் பொறுப்பும் கடமையுமாகும். அப்பணியைத்தான் நாங்கள் செய்துள்ளோம்.

வண்டிப் பெரியாறு பகுதியில் ஏ.வி.டி. நிறுவனத்தின் சுரண்டல் - அடக்குமுறை பற்றிய செய்தி அடங்கிய புதிய ஜனநாயகம் இதழின் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிகள், தொழிலாளர்களிடம் ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே பரபரப்பாக விற்பனையாகியுள்ளது. இதுவொன்றே போதும், இச்செய்தியின் உண்மையை நிரூபித்துக் காட்டுவதற்கு!

இன்னும், எவ்வித அடிப்படை வசதியுமின்றி, வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டு இற்றுவிழும் நிலையிலுள்ள மாட்டுக் கொட்டகை போன்ற வீடுகளில் தொழிலாளர் குடும்பங்கள் வேதனைப்படுவதையும், மாதம் ரூ. 5 வீதம் தொழிற்சங்க சந்தாவாக நிர்வாகமே தொழிலாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்வதையும், மூக்குப் பொடி - புகையிலை - வேப்பெண்ணெய் கலவையை முட்டுக்கால் வரை தேய்த்துக் கொண்டு, நடுங்கும் குளிரில், ரத்தம் குடிக்கும் அட்டைகளுடன் போராடி, அற்பக் கூலிக்குத் தொழிலாளர்கள் தேயிலை பறிக்கும் அவலமும், சட்டப் படியான 14 கிலோ தேயிலை பறிப்புக்கு மாறாக, 40 முதல் 50 கிலோ வரை பறிக்கத் தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்படுவதையும், தொழிலாளர் குடும்பங்கள் மாடு வளர்த்தால் கூட, அதற்காக மாதம் ரூ. 20-ஐ நிர்வாகம் பறிக்கும் கொடுமையையும், மேலாளர்கள், கங்காணிகள் செய்யும் ஊழல் - மோசடியை எதிர்த்துக் கேட்கும் தொழிலாளியை, நடுங்கும் குளிரில் சேற்று நிலத்தில் குழி வெட்டச் சொல்லி, முழங்கால் அளவு தண்ணீரில் நிறுத்தி வதைப்பதையும், மர்மமான சாவுகளையும் பட்டியல் போட்டால் பக்கங்கள் போதாது.

இவையும், இன்னும் பிற விபரங்களையும் மக்கள் மன்றத்தில் மட்டுமல்ல, அவசியமானால், வழக்கு மன்றத்தில் வைக்கவும் தயாராகவே உள்ளோம். எவ்வாறாயினும், இந்த விவகாரத்தின் மூலம் ஏ.வி.டி. நிறுவனம் மேலும் அம்பலப்படுவதோடு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை விழிப்புறச் செய்து, போராட்டத்திற்கு அணிதிரட்ட உதவும் என்பதில் பெரிதும் மகிழ்ச்சியே அடைகிறோம். எமது புரட்சிகர - கம்யூனிச மரபின்படி அஞ்சிடவோ, பின்வாங்கிடவோ மாட்டோம் என்று உறுதியளிக்கிறோம்.

— ஆசிரியர் குழு
புதிய ஜனநாயகம்

குறிப்பு: *அர்ணக்கல் எஸ்டேட் மேலாளர் நமக்கு வக்கீல் நோட்டீசு அனுப்பியுள்ள செய்தியை அறிந்து கொதித்துப் போயுள்ள தொழிலாளர்கள், ஏ.வி.டி. நிறுவனத்தின் அடக்குமுறை - சுரண்டல் கொடுமைகளைப் பற்றி புதிய ஆதாரங்களுடன் நமக்கு செய்தி அனுப்பி வருகின்றனர். அவை அடுத்த இதழில் வெளிவரும்.*

# "பொடா" சட்டத்தை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழக அரசின் பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் "பொடா"வை உடனடியாகத் திரும்பப் பெறக் கோரி, மக்கள் கலை இலக்கியக் கழகமும், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும் இணைந்து திருச்சி நகரில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. கடந்த ஜூலை 14-ந் தேதியன்று நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ம.க.இ.க. திருச்சி கிளைச் செயலர் தோழர் முத்து தலைமை தாங்கினார். ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்ள இந்து வெறியர்களிடம் சரணடைந்துவிட்ட கருணாநிதியின் துரோகத்தையும், பழைய "தடா" சட்டத்தின் மறுபதிப்பு தான் "பொடா" சட்டம் என்றும், இசுலாமியர்கள் மட்டுமின்றி அனைத்து உழைக்கும் மக்களின் மீதும் ஏவிவிடப்படுவதற்காக இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும், அடிப்படை மனித உரிமைக்கும் இயற்கை நீதிக்கும் எதிரான இக்கொடிய சட்டத்துக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் சேகர், மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சில் வழக்கறிஞர் போஜகுமார் ஆகியோர் உரையாற்றினர். 45 பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், ஆயிரக்கணக்கான மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது.

"பொடா"வைத் திரும்ப பெறக் கோரி திருச்சியில் நடந்த ஆர்ப்பாட்டம்



— ம.க.இ.க.,
பு.மா.இ.மு.,
திருச்சி.

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 13

இதழ்: 17 - 20

16 ஜூலை'98 - 15 செப்.'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## ஜெயின், சிறீகிருஷ்ணா கமிஷன் அறிக்கைகள்: பாரதீய ஜனதாவின் பழிவாங்கும் வெறியும் பாசிசத் திமிரும்

**ரா**ஜீவ் கொலை பற்றி விசாரித்து வந்த ஜெயின் கமிசனின் இறுதி அறிக்கையும், பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து மும்பையில் இந்துவெறியர்கள் நடத்திய பயங்கர வாத வெறியாட்டம் - அதன் எதிர் விளைவாக முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்திய குண்டு வெடிப்புப் பயங்கரம் பற்றி விசாரித்து வந்த சிறீகிருஷ்ணா கமிசன் அறிக்கையும் அடுத்த டுத்து அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

அயோத்தியில் மசூதி இடிப்பைத் தொடர்ந்து, மும்பையில் இந்துவெறியர்கள் கட்ட விழ்த்துவிட்ட நரவேட்டையும் பயங்கரவாத வெறியாட்டங்களும் நாட்டின் மிகப் பெரிய அவமானக் கறை. அதனாலேயே, இரத்தக் கறையுடன் மகாராஷ்டிராவில் ஆட்சிக்கு வந்தவுடனேயே சிறீகிருஷ்ணா கமிஷனைக் கலைத்துவிட முயற்சித்து, பின்னர் பொது மக்களின் நிர்பந்தம், ஜனநாயக உரிமைக்கான அமைப்புகளின் போராட்டம் காரணமாக இக்கமிசன் விசாரணையைத் தொடர இந்துவெறி ஆட்சியாளர்கள் அனுமதித்தனர். கடந்த பிப்ரவரியில் இக்கமிசனின் அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அதை வெளியிடாமல் முடக்கி வைத்து, ஆறு மாதங்களுக்குப் பிறகு இப்போது வெளி யிட்டுள்ளனர்.

சிறீகிருஷ்ணா கமிசன் அறிக்கையில், சிவசேனா தலைவர் பால்தாக்கரே, அக்கட்சி யைச் சேர்ந்த மகாராட்டிர மாநில முதலமைச்சர் ஜோஷி, நாடாளுமன்ற உறுப்பினர் மதுகர் சப்ரோதார் மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரத் தைத் தூண்டி, தலைமையேற்று வழிநடத்தியதாகப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்டுள் ளனர். ''பால் தாக்கரே ஒரு தேர்ந்த படைத் தளபதியைப் போல இருந்து இக்கலவரத்தைத் திட்டமிட்டு வழி நடத்தினார். தாக்கரேயின் வெறியூட்டும் கட்டுரைகளுடன் ''சாம்னா'', ''நவகால்'' ஆகிய பத்திரிகைகள் முஸ்லிம்களுக்கு எதிரான அவதூறு - வதந்திகளைப் பரப்பிக் கலவரத்தைத் தூண்டி விட்டன. சிவசேனா - பாரதீய ஜனதா கட்சியின் குண்டர் கள் முஸ்லிம்களுக்கு எதிரான படுகொலை வெறியாட்டத்திலும் நாசகாரித் தனத்திலும் இறங்கினர். கலவரம், கத்திக்குத்து, அரிவாள் வெட்டு, கைத்துப்பாக்கிச் சூடு, உயிருடன் எரிப்பு ஆகிய வன்செயல்களால் 900 பேர் கொல்லப்பட்டனர். 2036 பேர் படுகாயமடைந் தனர். போலீசார் இந்துவெறியர்களுக்கு ஆதரவாக நின்று முஸ்லிம்களைத் தாக்கினர். முஸ்லிம்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவித்த னரே தவிர, எந்தவொரு முஸ்லிம் தலைவரோ - அமைப்போ கலவரத்தைத் தூண்ட வில்லை. அதே சமயம், சில முஸ்லிம் கிரிமினல்கள் வன்முறையிலும் சூறையாடலிலும் ஈடுபட்டனர். இக்கலவரத்தின் எதிர் விளைவாகவே, முஸ்லிம் தீவிரவாதிகளின் குண்டு வெடிப்புப் பயங்கரம் நடந்துள்ளது'' என்று இந்துவெறி குற்றவாளிகளை கமிசன் அறிக்கை பட்டியல் போட்டுக் காட்டுகிறது.

இத்தனைக்கும் பிறகும், சிறீகிருஷ்ணா கமிசன் அறிக்கை கபடத்தனமானது; மோசடி யானது; இந்துக்களுக்கு எதிரானது என்று சாடும் இந்துவெறி ஆட்சியாளர்கள், அறிக் கையை ஏற்க மறுத்து நிராகரித்துள்ளனர். ''இந்த அறிக்கையை ஏற்பதற்கு ஜோஷி பாகிஸ்தான் முதல்வர் அல்ல'' என்று கொக்கரிக்கிறார் தாக்கரே. ''நீதிபதி சிறீகிருஷ்ணா ஒன்றும் பகவான் சிறீகிருஷ்ணன் அல்ல'' என்று சீறுகிறார் சப்ரோதார். 502 சாட்சியங்க ளைக் கொண்ட விசாரணை அறிக்கை இந்துவெறியர்களின் கோர முகத்தைப் படம் பிடித்துக் காட்டிய பின்னரும், ''நீதிபதி சிறீகிருஷ்ணா முஸ்லிம்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளார்'' என்று இந்துவெறியர்கள் எகிறிக் குதிக்கின்றனர். இக்கமிசன் அறிக் கையை அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டு, மகாராஷ்டிர பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணி அரசைக் கலைக்கக் கோரி எதிர்க் கட்சிகள் சூரத்தனம் காட்டுகின்றன. தமது ஆட்சியைக் கலைக்கும் முயற்சிகள் நடந்தால் ''இந்துக்களைத் திரட்டிப் போராட்டம் (அதாவது, கலவரம்) செய்வோம்'' என்று வெளிப்படையாக எச்சரிக்கிறது, இந்துவெறி கும்பல்.

தமது பயங்கரவாத கோர முகத்தைத் தோலுரித்துக் காட்டும் சீறிகிருஷ்ணா கமிசன் அறிக்கையை நிராகரித்துக் குப்பைக் கூடையில் வீசியுள்ள இந்துவெறியர்கள், ராஜீவ் கொலை பற்றி விசாரித்து வந்த ஜெயின் கமிசனின் இறுதி அறிக்கையை ஏற்றுள்ளதோடு, மேல் நடவடிக்கையும் விசாரணையும் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து, மையப் புலனாய்வுத் துறையில் (சி.பி.ஐ.) சிறப் புப் புலனாய்வுக் குழு நிறுவப்பட்டு, மூன்று மாதங்களுக்குள்ளாகவே விசாரணை முடிக் கப்பட்டது. குற்றவாளிகளாகக் கருதப்படுவோரும் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், விசாரணையை அவ்வளவு எளிதாக முடித்துவிடாமல், ஏதோ உலகமகா சதி உள்ளதாகக் காட்டுவதற்காக, காங்கிரசு கயவாளிகளின் அரசியல் சதியில் அவதாரம் எடுத்தது தான் ஜெயின் கமிஷன். அந்த நோக்கத்தைக்கூட ஈடேற்ற முடியாமல், கோமா ளித்தனமான - பைத்தியக்காரத்தனமான வாதங்களுடன் மசாலா சினிமாப் படம் போலவே ஜெயின் கமிஷன் விசாரணை நடந்தது.

www.padippakam.com

சோனியா கும்பலின் விருப்பப்படியே, அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் நோக்கத்துடனும், தமிழினத்தையே குற்றவாளியாக்கி இன ஒடுக்குமுறையை ஏவிவிடும் நோக்கத்தோடும் கடந்த ஆண்டு இறுதியில் கமிஷன் தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதை வைத்து ஐ.மு. அரசில் அதிகாரம் பெற முயற்சித்த காங்கிரசுக் கயவாளிகள், அது முடியாமல் போகவே, ஐ.மு. ஆட்சியைக் கலைத்து, பதவி வெறியர்களாக அம்பலப்பட்டு நிர்வாணமாக நின்றனர்.

இப்போது வெளியாகியுள்ள ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கை மூலம் காங்கிரசு கும்பல் அரசியல் ஆதாயம் பெறுவதற்கான வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஏனெனில், ஜெயின் அறிக்கை அரசியல் எதிரிகள் யாரையும் குற்றவாளியாகக் காட்டவில்லை. சந்தேகப்படுவோர் மீது நடவடிக்கையும் கோரவில்லை. ராஜீவ் கொலையில் அந்நிய சதிக்கான முகாந்திரம் உள்ளதா என்பதைப் பற்றி இன்னும் விசாரிக்க வேண்டும் என்கிறது.

ஆனால், ஆளும் இந்துவெறியர்களின் கூட்டணியோ, இப்பழைய கதைக்கு புதிய வில்லன்களை உருவாக்கி, அரசியல் எதிரிகளைப் பழிவாங்கக் கிளம்பியுள்ளது. கமிஷன் அறிக்கையின் மீதான, அமைச்சரவையின் மேல் நடவடிக்கைக்கான அறிக்கையில் அரசியல் தரகன் சு. சாமி, இரகசிய உலக சாமியார் சந்திரா சாமி ஆகியோரோடு, தமது அரசியல் எதிரியான தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பெயரையும் சேர்த்து விசாரிக்க வேண்டுமென இந்துவெறியர்கள் குறிப்பிட்டுள்ளனர். ராஜீவ் கொலை பற்றித் தொடர்ந்து விசாரணை நடத்தப் போவதாகவும், சி.பி.ஐ.யின் பல்துறை கண்காணிப்புக் குழுவின் மூலம் விசாரணை நடைபெறும் என்றும் அறிவித்துள்ளனர்.

தமது கூட்டாளியான பாசிச ஜெயா கும்பலைத் திருப்திபடுத்தவும், சோனியா கும்பலுடன் தி.மு.க. தேர்தல் கூட்டு ஏற்படுவதைத் தடுக்கவும் திட்டமிட்டே கருணாநிதி மீது பழிதூற்றும் கீழ்த்தரமான சதியைச் செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து, ''கருணாநிதி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, குற்றவாளியான அவரைக் கைது செய்து சிறையிட வேண்டும்'' என்று பாசிச ஜெயா கும்பல் பெருங்கூச்சல் போட்டு, தமது இந்துவெறிக் கூட்டாளிகளுடன் பங்காளிச் சண்டை நடத்துகிறது.

சோனியா கும்பலோ, ஆட்சியாளர்களின் ஏவல் நாயான சி.பி.ஐ. தலைமையில் விசாரணை நடந்தால், அது தமக்குச் சாதகமாக அமையாது என்பதால், நீதித்துறையின் விசாரணையைக் கோருகிறது. இந்துவெறிக் கூட்டணி ஆட்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள கருணாநிதி, தற்காப்பு - சரணாகதி அரசியல் நடத்திக் கொண்டு சவடால் அடிக்கிறாரே தவிர, புலிகள் உட்பட ஈழப் போராளிகளை ஆதரிப்பது தமிழர்களின் உரிமை என்று ஜெயின் கமிசனின் மோசடிகளை எதிர்த்துப் போராடவில்லை.

உளவுப் படைகளை ஏவி, ஈழ விவகாரத்தில் தலையிட்டு, விடுதலைப் போரைச் சீர்குலைத்து, ஈழத்தை ஆக்கிரமித்து, போர்க் குற்றங்கள் புரிந்ததற்காகவே ராஜீவ் கொல்லப்பட்டார். இந்த அரசியல் கொலைக்காக எவரையும் தண்டிக்க, எந்தவித நியாயவுரிமையும் இல்லாத இந்திய அரசு, ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறி, 26 பேருக்குத் தூக்கு தண்டனை விதித்துப் பழிவாங்குகிறது. புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட இன்னும் 21 பேரைக் கைது செய்து தண்டிக்கத் துடிக்கிறது. ஈழ விடுதலைப் போரை ஆதரிக்கும் தமிழக மக்களையும், தமிழின அமைப்புகளையும், புரட்சிகர அமைப்புகளையும் குற்றவாளிகளாக அவமானப்படுத்தி அடக்கி ஒடுக்கத் துடிக்கிறது.




அதே சமயம், மசூதி இடிப்பைத் தொடர்ந்து மும்பையிலும், நாடெங்கும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை நரவேட்டையாடி பயங்கரவாத அட்டூழியங்களில் ஈடுபட்ட இந்துவெறிக் குண்டர்களுக்கோ எந்தத் தண்டனையுமில்லை.

''எங்கள் மீது கை வைத்தால், இன்னும், இதைவிடக் கொடூரமான அட்டூழியங்களைக் கட்டவிழ்த்து விடுவோம்'' என்று அதிகார போதையில் பாசிசத் திமிரோடு பவனி வருகிறது, இந்துவெறிக் கும்பல். கமிசன் அறிக்கையைக் காட்டி, மகாராஷ்டிர இந்துவெறிக் கூட்டணி ஆட்சியைப் பதவியிலிருந்து விலக்குவது என்ற வரம்பைத் தாண்டி போராடவும் எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை. அமைப்பு ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும் பாசிச குண்டர் படையாகத் திரண்டுள்ள இந்துவெறியர்களின் பலம் சட்டமன்ற - நாடாளுமன்றத்துக்கு வெளியில்தான் உள்ளது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமன்ற பதவி பறிப்புகள் - ஆட்சிக் கலைப்புகள் மூலம் இந்து வெறியர்களை முறியடித்து விடவும் முடியாது.

✦ எனவே, பாசிச பயங்கரவாத வாதிகளாக சிறீகிருஷ்ணா கமிஷன் மூலம் மீண்டும் அம்பலமாகியுள்ள இந்துவெறி அமைப்புகள் அனைத்தையும் தடை செய்து, எவ்வித அரசியல் - பொருளாதார - ஜனநாயக உரிமைகளும் அளிக்காமல் இக்குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்.

✦ ஈழத்தை ஆக்கிரமித்து, போர்க் குற்றங்கள் பல புரிந்த பாசிச ராஜீவ் கும்பலையும், உளவுப்படை ''ரா''-வையும் இதற்குத் துணை நின்றவர்களையும் தண்டிக்க வேண்டும்.

✦ ஈழ விவகாரம் மட்டுமின்றி, அணுகுண்டு வெடிப்பு உட்பட ஆக்கிரமிப்பு - அகண்ட பாரதக் கனவுடன் போர் வெறியும், தெற்காசிய பிராந்திய மேலாதிக்க வெறியும் கொண்டுள்ள இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையை வகுத்துச் செயல்படுத்தும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் மீது விசாரணை நடத்தித் தண்டிக்க வேண்டும்.

✦ தமிழர்களை இழிவுபடுத்தி ஒடுக்கவும், அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவும் நிறுவப்பட்ட ஜெயின் கமிசன் அறிக்கையை குப்பைக் கூடையில் வீசுவதோடு, மேல் நடவடிக்கை - விசாரணைகள் ரத்து செய்யப்பட வேண்டும். அரசியல் கொலைக்காகப் பழிவாங்கப்படும் 26 பேரின் தூக்குத் தண்டனையை ரத்துசெய்ய வேண்டும்.

— இவற்றுக்காக உழைக்கும் மக்கள் போராட வேண்டியது இன்று அவசியமானதும் நியாயமானதும் ஆகும்.

www.padippakam.com

# மரண ஓலத்தில் ஈழம் மௌனத்தில் தமிழகம்

இலங்கை - யாழ்ப்பாணத்தில் 1996 அக்டோபரில், 18 வயது கிருசாந்தி குமார சாமி என்ற ஈழத் தமிழ்ப் பெண் பள்ளியிலிருந்து திரும்பும் வழியில், 6 இராணுவ வீரர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கொல்லப்பட்டார். அவரைத் தேடிச் சென்ற அவரது தாய், சகோதரன், உறவினர் இவர்களைக் கொன்று, நால்வரையும் புதைத்து விட்டன அந்த மிருகங்கள்.

இச்செய்தி மெல்லக் கசிந்து, அப்பாவி தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் நரவேட்டையாடப்படுவதை உலகம் முழுதும் அம்பலப்படுத்தியது. தம்மை யோக்கிய சிகாமணிகளாகக் காட்டிக் கொள்ள, சிங்கள இனவெறி அரசு கொழும்பு உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்க, நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

4 பேரைக் கொன்ற தமக்கு மரண தண்டனை என்றவுடன், அதில் ஒருவன், உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் 400 அப்பாவித் தமிழர்களைக் கொன்று, ஒரே குழியில் புதைத்ததை நீதிபதி முன்பே கொட்டிவிட்டான். செம்மணி என்ற பகுதியிலுள்ள அந்த மரணக் குழியை காட்டவும் தயார் என்றான்.

ஆட்சியாளர்களோ, உண்மையைப் போட்டு உடைத்து விட்டானே என கோபாவேசமடைந்தனர். மனித உரிமை அமைப்புகள் அதிர்ச்சியில் உறைந்தன. யாழ்ப்பாணத்தில் திட்டமிட்ட இனப் படுகொலை அரங்கேறி வருவதை இது தெட்டத் தெளிவாக அம்பலப்படுத்தியது. பிள்ளையார் பிடிக்க குரங்கு முளைத்த கதையாக, தன்னை யோக்கியவனாகக் காட்ட நாடகமாடிய சிங்கள இனவெறி அரசு, தனது இனப்படு கொலைகள் சந்திக்கு வந்ததை மூடி மறைக்க முயல்கிறது; மௌனம் சாதிக்கிறது; 'குற்றச்சாட்டு, பழிவாங்கும் உணர்வில் கூறப்பட்ட பொய்யாயிருக்கலாம் என மழுப்புகிறது.

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள வார இதழான 'யுக்தியா', இதை மேலும் அம்பலப்படுத்தி, சிங்கள அரசுக்கு, சந்திரிகாவிற்கு சவால் விட்டுள்ளது.

செம்மணிப் பகுதியில் மட்டுமல்ல, தமிழீழப் பகுதி முழுவதுமே இப்படிப்பட்ட மரணப் புதைகுழிகள் இருப்பது தமிழர்களுக்குப் புதிதல்ல.

இப்படிப்பட்ட படுகொலைகள் தொடர் கதைகளாவதால் தான், தமது அற்ப சொற்ப உடமைகளைக் கூட விட்டு விட்டு, உயிர் பிழைத்தால் போதும் என தமிழகம் நோக்கி அகதிகளாக ஓடி வருகின்றனர் ஈழத் தமிழர்கள். இதில் சிங்கள இராணுவத்திடம் சிக்கி மடியவும் நேரும்.

சமீபத்தில் நமது இரத்தத்தை உறைய வைக்கும் ஒரு விபத்து இராமேசுவரம் அருகே நடந்துள்ளது. அகதிகளாக வருபவர்கள் இலங்கை கடற்பகுதயிலிருந்து இரவில் புறப்பட்டு, 6 மணி நேரம் படகில் பயணித்து, தனுஷ்கோடி அருகே அரிச்சமுனையில் இறங்கி, தமிழகத்தை தஞ்சமடைவர்.

கடந்த 27.7.'98-இல் இலங்கை இலுப்பைக் கடலில் 50 பேர் படகில் ஏறினர். படகோட்டிகளாக இருவர். படகில் 25 பேர் தான் செல்ல முடியும். படகோ காயலான் கடைக்கு அனுப்பும் நிலையிலிருந்தது. இராமேசுவரம் கோயில் கோபுர விளக்கு வெளிச்சம் கண்ணில் தெரியும் தொலைவில் வந்த போது, படகில் ஓட்டை விழுந்து, கடல் நீர் குபுகுபுவென உள்ளே புகுந்தது. ஏற்கனவே நீர் பல இடங்களில் கசிந்து கொண்டுதானிருந்தது. ஒரு மணி நேரம் ஓட்டை விழாமலிருந்தால், 50 பேரும் பத்திரமாக கரையிறங்க, இரண்டு படகோட்டிகள் திரும்பியிருப்பர்.

கடல் நீரை வாரியிறைத்து மாளவில்லை. பயந்து போன பயணிகள் படகின் ஒரு பக்கம் குவிந்தனர். பரவலாக பிரிந்து சமமாக நிற்க படகோட்டிகள் எடுத்த முயற்சி தோற்றது. ஒரு பகுதியில் எடை கூடவே முற்றாக படகு கவிழ்ந்து அனைவரும் கடலில் மூழ்கினர். இதில் 4 பேர் விளக்கை நோக்கி நீந்தி, 6 மணி நேரமாகப் போராடி, கரை சேர்ந்தனர். மேலும் 4 பேர் மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர்.

இவர்கள் இவ்விபத்துபற்றி அதிகாலையே இராமேசுவரம் காவல் நிலையத்தில் முறையிட்டும், காவல் துறை 9 மணிக்கு தான் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, பின்னர் தேடும் பணி தொடங்கியுள்ளது.

ஏற்கனவே சிங்கள இராணுவ குண்டு வீச்சுக்கு தனது ஒரு காலை பறிகொடுத்த வேலாயுதம் தனது மனைவி, குழந்தையை கடலில் பலி கொடுத்து விட்டார். இவர் கடலில் நீந்தி போராடிக் கொண்டிருந்த போது, தமிழக மீனவர்களால் கரை சேர்க்கப்பட்டார். இதே போல 13 வயது வசந்தன், இவரது 11 வயது மைத்துனர் காண்டீபன் ஆகியோரும் மீனவர்களால் கரை சேர்க்கப்பட்டனர். காண்டீபனின் தந்தை உயிர் பிழைத்தாரா எனத் தெரியவில்லை.

52 பேரில் 8 பேர்தான் கரை சேர்ந்தனர். இரவில் கடல் நீரோட்டம் இலங்கையை நோக்கி இருந்ததால், இறந்தவர்கள் உடல் கூட கிடைக்கவில்லை.


ஈழத் தமிழன் வாழக் கூட வழியின்றி உள்ளது. சிங்கள இனவெறி இராணுவம் ஈழத் தமிழரை சுட்டுக் கொன்று மரணக் குழிகளை உருவாக்குகிறது. அதிலிருந்து தப்பி உயிர் பிழைத்தால் போதும் எனத் துணிந்தால் கடலில் சமாதி கட்டப்படுகின்றனர்.

இன்று ஈழத் தமிழர் உயிர் பிழைக்க எங்கு செல்வார்கள்? யார் ஆதரவு தருவார்கள்? தமிழ் மண்ணில் இவர்களின் அகதி வாழ்வோ சிறைக் கூடமாகத்தான் உள்ளது. இவர்களை தமிழக அரசும், இந்திய அரசும் குற்றவாளிகளாகத்தான் பார்க்கிறது.

இப்படிப்பட்ட கொடூரத்தை உருவாக்கிய பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல், இன்று ஈழத் தமிழருக்குக் குரல் கொடுப்பதாக நாடகமாடுகிறது. இந்தத் தடா நாயகியின் வாலாக இராமதாசு, வை.கோ. கும்பல் சீரழிந்துள்ளது. பவள விழா காணும் தமிழினத் தலைவரோ, ஈழத் தமிழரை பார்க்கக் கூடத் தயாராயில்லை.

அன்று ஈழத்தில் செத்து மடிந்த தமிழனுக்காக, தமிழகமே பொங்கி எழுந்தது. இன்றோ ஈழத் தமிழனின் சாவு சாதாரண செய்தியாக அடுத்த நிமிடம் மறக்கப்படுகிறது. இந்த அவலம் நீடிப்பது மனிதத் தன்மையற்றது.

• வேலன்



இராமேசுவரம் அருகே கடலில் மூழ்கி இறந்து போன ஈழ அகதிகளுள் ஒருவர்.


படிப்பகம்

www.padippakam.com

கடந்த 30 ஆண்டுகளாக காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சினையில் பாதிக்கப்பட்டு வருவது தமிழகம் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்து கிடையாது. ஒப்பந்த விதிகளை மீறி, காவிரியின் குறுக்கே பெரிய அணைகளைக் கட்டி, நீரைத் தேக்கி, நீரை விட மறுத்து தமிழக நெற்களஞ்சியப் பகுதியைப் பாலையாக்கி வருவது கர்நாடகம்.

இன்று சுமுகமான ஒப்பந்தம் கையெழுத்தாகி, பிரச்சினை தீர்ந்து விட்டது என பெரும்பாலான ஓட்டுக் கட்சிகளும் பத்திரிகைகளும் நம்மை நம்பச் சொல்கின்றன. இதைப் பரிசீலிக்கும் முன் காவிரி நீர் பிரச்சினை பற்றி சுருக்கமாக, தொகுப்பாகப் பார்ப்போம்.

1921-லேயே காவிரி நீர்ப் பங்கீட்டில் பிரச்சினை ஏற்பட்டு, 1924-இல் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் 1974-இல் காலாவதியாகுமுன்னே 1964-இல் கர்நாடகம் ஒப்பந்த விதிகளை மீறி, ஹாரங்கி அணை திட்டத்தைத் தொடங்கியது. தமிழகம் எதிர்த்தது. மத்தியிலும் இரு மாநிலங்களிலுமே ஆட்சியிலிருந்த காங்கிரசு பிரச்சினையைத் தீர்க்கவில்லை.

# காவிரி: மீண்டும் வஞ்சனை

**கர்நாடகாவுக்குச் சாதகமாக உருவாக்கப்பட்டுள்ள புதிய வரைவுத் திட்டத்தில், இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் அடிப்படையே கிடையாது.**

1967-இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின், 1968-இல் முதல் முறையாக கர்நாடக முதல்வரும், தமிழக பொதுப் பணித்துறை அமைச்சரும் காவிரி பிரச்சினையைத் தீர்க்க பேச்சு வார்த்தை நடத்தினர். அதன் பின் 25 முறை பேச்சு வார்த்தைகள் பல மட்டங்களில் நடந்தும், தீர்வு எட்டப்படவில்லை. கர்நாடகம் தண்ணீர் விட மறுப்பதற்கு அடிநாதமாக இருப்பது, 'இங்கு உற்பத்தியாகும் நீரை எமது தேவைக்குப் போகத்தான் தமிழகத்திற்குத் தருவோம்' என்பதுதான்.

அனைத்துலக நதிநீர்ப் பங்கீடு சட்டப்படியும், ஐ.நா. சபையின் ஹெல்சிங்கி தீர்மானத்தின் படியும் இது முற்றிலும் தவறு. நதிநீர் உற்பத்தியாகும் பகுதியை விட, கடைமடை பகுதிக்குதான் கூடுதல் உரிமை உண்டு. தவிர, கர்நாடகத்தில் காவிரி நதி பாயும் தூரத்தைவிட சுமார் 100 கி.மீ. தூரம் தமிழகத்தில் அதிகமாகப் பாய்கிறது. அந்த வகையில் காவிரிப் படுகையின் மொத்த வடிகால் பரப்பில் தமிழகத்தின் நிலப்பரப்பு கர்நாடகத்தை விட 12 சதவீதம் அதிகம். எனவே 'எனக்குப் போக மீதி இருப்பதைத் தான் உனக்குத் தருவேன்' என்பது கர்நாடகத்தின் அடாவடித்தனமே.

தமிழகத்தில் சுமார் 1½ கோடி மக்கள் காவிரிப் பாசனத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். வரலாற்று ரீதியாகவும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்தே காவிரியில் நீரைத் தேக்கி, கால்வாய்கள் வெட்டி, நீர்ப்பாசனம் செய்து வருகின்றனர் தமிழர்கள். அதனால்தான், காவிரி தமிழக மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. அதில் நீரில்லை எனில் விவசாயமும் மக்களும் பாதிப்படைந்து, நெருக்கடி உருவாகிறது.

1971-இல் நடுவர் மன்றம் வேண்டும் என உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்த கருணாநிதி, இந்திராவுடனான கூட்டணி உறவுக்காக 1972-இல் வழக்கை திரும்பப் பெற்று, தமிழக நலனுக்கு முதலில் துரோகமிழைத்தார்.

அதன்பின், எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் காவிரி முற்றாக வறண்டு பாலையானது. காவிரிப் பிரச்சினையைத் தீர்க்காமல் அவரும் துரோகமிழைத்தார். எதிர்க் கட்சித் தலைவராயிருந்த கருணாநிதியும், எம்.ஜி.ஆருக்கு காவிரி நீர்ச் சிக்கலைத் தீர்த்த பெருமை போய் விடக் கூடாது என்றுதான் அரசியல் நடத்தி வந்தார். 1986-இல் தஞ்சை விவசாயிகள் சங்க செயலர் ரங்கநாதன், நடுவர் மன்றம் கோரி உச்சநீதி மன்றத்தில் முறையிட்டார். 1989-இல் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது நடுவர் மன்றம் வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. 1989 வரையும் நடுவர் மன்றம் தேவையில்லை என்று கூறி வந்த கருணாநிதி, நடுவர் மன்றம் வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தினார். 1990-இல் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு வரும் முன் தமிழக விவசாயம் மிகவும் பாதிப்படையும்; எனவே இடைக்காலத் தீர்வு வேண்டும் என தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் முறையிட்டது.

1991 ஜூன் 25-இல் கர்நாடகம், தமிழகத்திற்கு (205 டிஎம்சி) 20,500 கோடி கன அடி நீர் வழங்க வேண்டும் என நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்வை வழங்கியது. எந்தெந்த மாதங்களில் எவ்வளவு தர வேண்டும் எனக் குறிப்பாகவும் கூறியது.

கர்நாடக அரசோ இடைக்காலத் தீர்ப்பை ஏற்க மறுத்துவிட்டது. சட்டமன்றத்தில் தமது பாசனப் பகுதியைப் பாதுகாக்க அவசரச் சட்டம் இயற்றியது. உச்சநீதி மன்றம் இந்த அவசரச் சட்டம் செல்லாது என அறிவித்தது. இடைக்காலத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்ததையும் நிராகரித்தது.

மத்திய அரசு இடைக்காலத் தீர்ப்பை டிசம்பரில் அரசிதழில் வெளியிட்டது. அரசிதழில் வெளியிட்ட உடனே, கர்நாடகாவில் ஆட்சியிலிருந்த காங்கிரசு உட்பட எல்லாக் கட்சிகளும் அம்மாநில மக்களிடையே குறுகிய இன வெறியைத் தூண்டி விட்டு கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டன. கர்நாடகத்திலிருந்த தமிழர்களின் உயிரும், உடமைகளும் சூறையாடப்பட்டன. சொந்த நாட்டிலேயே தமிழர்கள் அகதிகளாக உயிர் பிழைக்க ஓடி வந்தனர். இங்கு ஆட்சியிலிருந்த பார்ப்பன பாசிச ஜெயா வேடிக்கை பார்த்தாரே தவிர, பிரச்சினை தீர நடவடிக்கை எடுக்கவில்லை. அகதிகளும் "அம்போ" எனக் கைவிடப்பட்டனர்.

தமிழர்கள் மீதான தாக்குதலை 'தேசிய'க் கட்சிகள்தான் முன்னின்று நடத்தின. அன்றைய கர்நாடக மாநில பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எச்.என். நஞ்சே கவுடா டிசம்பர் 23-இல் இடைக்காலத் தீர்வை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதே கட்சியின் இன்றைய பிரதமர் வாஜ்பாயி, இடைக்காலத் தீர்வை நடைமுறைப்படுத்தப் போவதாகக் கதையளக்கிறார்.

பாரம்பரிய தேசியக் கட்சியான காங்கிரசு இடைக்காலத் தீர்ப்பை நடைமுறைப் படுத்தவேயில்லை. அதனுடன் கூட்டணி கண்ட அ.தி.மு.க.வின் ஜெயா, உண்ணாவிரத நாடகமாடினார். இடைக்காலத் தீர்வு வந்த பின், 5 ஆண்டுகள் ஆண்ட ஜெயலலிதா அரசு, உச்சநீதி மன்றத்தில் வழக்குப் போட்டது தவிர வேறு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

மாநிலங்களிடையிலான நதி நீர்த் தகராறு 1956 சட்டப்படியும், 1924 ஒப்பந்தப் படியும் நீர் பங்கீட்டில் பிரச்சினை வந்தால் நடுவர் மன்றம் அமைத்து, அதன் தீர்வுப்படி தீர்க்க கர்நாடகம், தமிழ்நாடு இரண்டுமே ஏற்றுக் கொண்டுள்ளன. ஒப்பந்த விதிகளை மீறிய கர்நாடகம் நடுவர் மன்றம் கோரவில்லை. பாதிக்கப்பட்ட தமிழ்நாடுதான் உச்சநீதி மன்றத்தில் நடுவர் மன்றம் கோரி முறையிட்டது. நடுவர் மன்றத்

www.padippakam.com

தீர்வை ஏற்க மறுத்து, நீர் விடவும் இன்று வரை கர்நாடகம் மறுத்து அடாவடித்தனம் செய்கிறது.

நடுவர் நீதிமன்ற இடைக்காலத் தீர்ப்புக்குப் பின், இந்த எட்டு ஆண்டுகளில் ஜூன், ஜூலை குறுவை நடவின் போதும், நவம்பர், டிசம்பர் சம்பா பயிரின் போதும் நீர் விட மறுத்து, பயிர்கள் கருகி, தமிழக விவசாயிகள் பெரும் பாதிப்படைந்தனர். ஆனால், மழை பெய்து அணைகள் நிரம்பி, கூடுதலான நீரை வேறு காலங்களில் திறந்து, வீணாகக் கடலில் கலக்க வைத்தது கர்நாடகம். புள்ளி விவரத்தைப் பார்த்தால் 20,500 கோடி கன அடிக்கு அதிகமாக நீர் விட்டதாகத் தெரியும். ஒவ்வொரு முறை பயிர் வாடும் போதும் நீர் விடக் கோரி தமிழகம் முறையிடுவதும், கர்நாடகம் மறுத்து, பயிர் கருகுவதும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடக்கும் தொடர் அவலம்.

மத்திய அரசு இப்பிரச்சினையைத் தீர்க்காமல், கர்நாடகத்தின் அடாவடித்தனங்களை அனுமதிக்கிறது. உச்சநீதி மன்ற ஆலோசனைப்படி ஜெயலலிதா ஒரு முறையும், கருணாநிதி 5 முறை பேசியும் முடிவில்லை. 'நடுவர் மன்றத் தீர்வை செயல்படுத்த, வரைவுத் திட்டத்தை உருவாக்குமாறு' உச்சநீதி மன்றம் 1997 ஏப்ரல் 9-இல் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியது.

ஐ.மு. கூட்டணியிலான மத்திய அரசு வகுத்த வரைவுத் திட்டத்தையும் கர்நாடகம் முற்றாக நிராகரித்து விட்டது. அப்போது தி.மு.க., த.மா.கா. மந்திரிகள் 9 பேர் மத்திய அமைச்சரவையிலிருந்தும், தமிழக நலனுக்குப் போராடவில்லை. அதன்பின் மத்திய அரசு உச்சநீதி மன்றத்திடம் எட்டு முறை வாய்தா வாங்கியது.

கடந்த ஜூலை 21 அன்று நடந்த திரும்ப விசாரணையின் போது, மத்திய அரசு 6 மாத வாய்தா கேட்டது. உச்சநீதி மன்றம் 3 வார அவகாசம் கொடுத்து, தீர்க்கக் கெடு வைத்தது. உடனே, பிரதமர் வாஜ்பாய் தலைமையில் 4 முதல்வர்கள் ஆகஸ்ட் 6, 7 தேதிகளில் தில்லியில் அவசரமாகக் கூடினர். பேச்சு வார்த்தை சுமுகமாக முடிந்ததாக அறிவித்தனர்.

• ஐ.மு. ஆட்சியில் வகுத்த வரைவுத் திட்டத்தின்படி இடைக்காலத் தீர்வை நடைமுறைப்படுத்த அதிகாரிகளைக் கொண்ட காவிரி ஆணையம் செயல்படும். கர்நாடகம் நீர்விட மறுத்தால், அணைகளை ஆணையமே தனது கட்டுப்பாட்டில் எடுத்து, உரிய நீர் விட அதிகாரம் இருந்தது: கர்நாடகம் தனது விருப்பப்படி, காவிரி நீரைத் தடுக்க முடியாது. அதனாலேயே கர்நாடகம் இதை முற்றாக மறுத்தது.

இந்தப் பிரச்சினை இப்போதைய புதிய வரைவுத் திட்டத்தில் தீர்க்கப்படவில்லை. சுமுக தீர்வு என்பது அப்பட்டமான மோசடியே.

இப்போதைய புதிய வரைவுத் திட்டத்தின்படி பிரதமரைத் தலைவராகவும், நான்கு மாநில முதல்வர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட புதிய ஆணையம், அனைவரின் ஒப்புதலின் பேரில் இடைக்காலத் தீர்வை நடைமுறைப்படுத்தும். யார் ஒருவர் எதிர்த்தாலும் நீர்விட முடியாது. கர்நாடகம் வழமை போல் நீர்விட மறுத்தால், ஆணையம் ஏதும் செய்ய முடியாது. பிறகு, பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்தது என்பது மோசடி தவிர வேறென்ன?

• காவிரி ஆணையத்தின் கீழ் அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு, நீர் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆணையத்திற்கு வழங்கும். பிரச்சினை வரும்போது புள்ளி விவரங்களிலிருந்து பேசித் தீர்க்கவே இந்த ஏற்பாடு.

• நடைமுறை வேலைகளைக் காட்டி முதல்வர்களில் யாராவது பேச்சு வார்த்தைக்கே வர மறுத்தால், ஆணையம் எதுவும் செய்ய முடியாது.

• இறுதித் தீர்வு வந்தபின் ஆணையம், கண்காணிப்புக் குழு இரண்டுமே கூடாது என்ற கர்நாடகத்தின் முடிவு பற்றி இன்னும் பரிசீலித்து முடிவு எடுக்கப்படவில்லை.

• பேச்சு வார்த்தை என இழுத்தடித்து 1971-இல் சுமார் 7 இலட்சம் ஏக்கராயிருந்த பாசனப் பரப்பை, இன்று 25 இலட்சம் ஏக்கர்களாக கர்நாடகம் விரிவுபடுத்தியுள்ளது. இதே காலகட்டத்தில் 28 இலட்சம் ஏக்கரிலிருந்து 20 இலட்சம் ஏக்கர்களுக்கும் கீழாகத் தமிழகப் பாசனப் பரப்பு குறைந்துள்ளது. இது பற்றி பேசப்படவேயில்லை. நீர்த் தேவையை எப்படிக் கணக்கிட்டு முடிவு செய்வது? சட்ட விரோதமாக கர்நாடகம் கட்டியுள்ள அணைகள் பற்றியும் முடிவில்லை.

• இடைக்காலத் தீர்வை 7 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்த மறுத்த கர்நாடகம் இன்று பெயரளவு ஏற்கக் காரணம் இல்லாமலில்லை. முதலில் பருவ மழையால் அணையில் நீர் நிரம்பி வழிகிறது. எனவே கூடுதல் நீரைத் திறந்து விட்டே ஆக வேண்டும். அடுத்து, ஒரு சில மாதங்களில் இறுதித் தீர்வே வந்து விடும் நிலையில், இப்போது இடைக்காலத் தீர்வை ஏற்பதாகச் சொன்னால், நட்டம் ஏதுமில்லை. தேவையின்றி முரண்பாட்டை வளர்க்காமல் விடலாம். தவிர, காவிரி ஆணையம் தம்மை கட்டுப்படுத்தாது என்கிற தெம்புந்தான்.

இன்று, ஐ.மு. ஆட்சியில் வகுத்த வரைவுத் திட்டத்தை வெளியிடாததால், கூட்டணி ஆட்சியிலிருந்து விலகுவது என்ற பார்ப்பன பாசிச 'ஜெ'யின் அதிரடி அறிக்கைகள் நாடகமே. அவரது ஒரே திட்டம் ஊழல், மோசடி வழக்கிலிருந்து விடுபடுவது மட்டுமே.

1972-இல் தமிழக மக்களுக்குத் துரோகமிழைத்த கருணாநிதி, இன்றும் முதல்வராயிருந்து துரோகமிழைத்துள்ளார். 1986-இல் நடுவர் மன்றம் கோரி உச்சநீதி மன்றத்தில் முதலில் வழக்குப் போட்ட தஞ்சை விவசாயிகள் சங்கச் செயலாளர் ரெங்கநாதன், ஒப்பந்தத்தை வரவேற்கும் அதே நேரம், "ஒரு வேளை பிரதமர் மற்றும் நான்கு முதல்வர்கள் அடங்கிய குழுவின் முடிவுகளில் பிரச்சினை வந்து, உரிய நேரத்தில் கர்நாடகம் நீரைத் திறந்து விடுவதில் தாமதம் ஏற்பட்டால், நானே மீண்டும் நீதிமன்றம் மூலமாகப் பரிகாரம் தேடுவேன்" என்று கூறியுள்ளார். ஒப்பந்தத்தின் நம்பகமற்ற தன்மைக்கு இதை விடவா சான்று தேவை?

ஆக, மீண்டும் நீர்விட மறுப்பு, வழக்கு, திரும்ப பேச்சு வார்த்தை என 30 ஆண்டுகளாக நடந்ததை திரும்ப நடத்த 'சுமுக' ஒப்பந்தத்தில் வழி இருக்கிறது. தேசியம் பேசும் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் கர்நாடகத்தின் குறுந்தேசிய வெறிக்கே துணை நிற்கின்றன. சட்டப்படியும் சரி, இயற்கை தீர்வுப்படியும் சரி கர்நாடகம் செய்வது அடாவடித்தனமே. தடி எடுத்தவன் தண்டல்காரன் என்று கர்நாடகம் நடப்பதற்கேற்ப, தி.மு.க. - அ.தி.மு.க. பிளவுபட்டு, தமிழக நலன்களுக்கு துரோகமிழைத்தே வருகின்றன.

• குமரன்



**காவிரியின் மீதான தமிழகத்தின் உரிமையைக் காற்றில் பறக்க விட்ட மகிழ்ச்சியில் பூரித்துப் போகிறார்களோ?**



படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் இட ஒதுக்கீடு:

# ஓநாய்களிடம் நீதி கிடைக்குமா?

நாடாளுமன்றத்திலும் சட்டப்பேரவைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இடங்களை ஒதுக்கச் சட்டம் கொண்டு வருவதை, கொள்கை அளவில் எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றன. ஆனால், சட்டம் மட்டும் நடைமுறைக்கு வரவில்லை. இச்சட்டத்திற்கு முட்டுக்கட்டை போடுவதில், பல்வேறு ஓட்டுக் கட்சிகளைச் சேர்ந்த பெரும்பான்மை எம்.பி.க்கள் ஒற்றுமையாயுள்ளனர். 'இடது'சாரிக் கட்சியினர் உடனே சட்டமாக்க வேண்டும் என்கின்றனர்.

இத்தனை ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த காங்கிரசு இப்படி ஒரு சட்டம் இயற்றவில்லை. இந்திராகாந்தி, கட்சி மற்றும் ஆட்சித் தலைமையில் இருந்த போது கூட, பெண்கள் கட்சிப் பொறுப்புகளிலோ, தேர்தலிலோ பெரிய அளவு பங்கேற்கவில்லை. இன்றைக்கும் கூட, சோனியா தலைமையில் கட்சித் தலைமைக்குப் பெண்கள் நியமனம் செய்யப்படுவதில்லை.

ஜெயலலிதா, மம்தா பானர்ஜி ஆகியோர் தலைமையில் உள்ள கட்சிகளிலும் பெண்களுக்குப் பதவிகளும், பொறுப்புகளும் பெரும்பாலும் தரப்படுவதில்லை. கடந்த தேர்தலில் கூட இரு கட்சிகளிலும் முறையே ஒவ்வொரு பெண் வேட்பாளர் தான் போட்டியிட்டனர். இப்படி ஏறக்குறைய எல்லா கட்சிகளுமே மக்கள் தொகையில் சரிபாதி உள்ள பெண்களைப் புறக்கணிக்கின்றனர்.

இதற்கு என்ன காரணம்? இன்றைய சமுதாயத்தில் இன்னும் பெண் சுதந்திரமானவளாக இல்லை. பெருகி வரும் பொருளாதாரத் தேவைகளுக்காக பெண்கள் வேலைக்குச் செல்வது மட்டுமே உள்ளது. அதுவும் தவிர்க்க இயலாத காரணத்தால் தான். அங்கும் கூட பெரும்பாலும் பெண்களுக்குச் சுதந்திரமில்லை.

அங்கு சுயமாக முடிவெடுத்து செயல்படுபவருக்கு 'அடங்காப்பிடாரி', 'நடத்தை கெட்டவள்' எனப் பட்டங்கள் சூட்டுவது தான் அதிகம். சமீபத்தில் கூட, உச்சநீதி மன்றம், வேலை செய்யுமிடத்தில் பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் பெருகி வருவதையும், அதைக் கட்டுப்படுத்துவதற்கு வழிகாட்டும் நெறிமுறைகளையும் அளித்தது. இதுதான் நிலைமை.

பெண்களை அடிமைகளாகவும், ஒரு போகப் பொருளாகவும் மட்டுமே கருதும் இந்த ஆணாதிக்க சமூகத்தில், பிறகு ஏன் அரசியலில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு?

இன்றைக்கு கள்ளச் சாராயம், பாலியல் வன்முறைத் தாக்குதல் போன்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிராகவும், விலைவாசி உயர்வு போன்ற சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரியும், மேலும் அரசியல் போராட்டங்களிலும் பெண்கள் ஒரு சக்தியாக பங்கெடுத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். உள்ளூர் அளவிலும் தன்னெழுச்சியாகவும் நடக்கும் இப்போராட்டங்களில் பெண்களின் ஆற்றல் வெளிப்படுகிறது. கட்சிகளுக்கு அப்பாற்பட்டும் எழுந்து வரும் பெண்களின் இப்போராட்டங்களை நிறுவனமயமாக்கவும், ஓட்டு வேட்டையாடப் பயன்படுத்திக் கொள்ளும் நரித்தனத் தோடும் தான் இச்சட்டமே கொண்டு வரப் படுகிறது.

இதற்கான முன்னோடியாகத்தான் உள்ளாட்சித் தேர்தல்களில் 33% தொகுதிகளை பெண்களுக்கு ஒதுக்கினர். இது உள்ளூர் அளவிலும் குறுகிய தளங்களிலும் என்பதால் உடனே நடைமுறைப்படுத்தினர். இதில் கூட பாதிக்கப்பட்ட உள்ளூர் கட்சி ஆண்கள் பொறுமினார்கள். அவர்களது உரிமையைப் பறித்து விட்டதாக, கோஷ்டி கட்டிக் கொண்டு, நிர்மாணப் பணிகளைச் சீர்குலைத்து, தனது கட்சிக்காரரே ஆனாலும், பெண் உறுப்பினருக்கு கெட்ட பெயர் உருவாக்க முனைந்தனர்.

இடது சாரி கட்சிகளைத் தவிர, பிற கட்சிகளின் தலைமையும், அக்கட்சிகளின் ஆண் உறுப்பினர்களும், ஆணாதிக்கத்தின் காரணமாகவும், தங்களது தொகுதி இட ஒதுக்கீட்டின் காரணமாகப் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டால், தங்களின் அரசியல் வாழ்வே முடிந்தே போகும் என்ற சுயநலன் காரணமாகவும், பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டமாவதை நரித்தனமாக எதிர்க்கின்றனர்.

பா.ஜ.க., காங்கிரசு உள்ளிட்ட கட்சித் தலைமைகள் முதலில் 33% இட ஒதுக்கீட்டை ஆதரித்தன. லல்லு - முலயம் கட்சியினர் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருக்கு இச்சட்டத்தில் இட ஒதுக்கீடு கோரி, இச்சட்டம் உடனே நடைமுறைக்கு வருவதை எதிர்த்ததும், காங்கிரசு கட்சியும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்றது. பா.ஜ.க.வோ, ஒருமித்த கருத்தின் அடிப்படையில் சட்டமாக்கலாம் எனக் கூறி, நயவஞ்சகமாக சட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது.

சரி, ஒருமித்த கருத்துக்கு ஏதாவது அடிப்படை உண்டா? கிடையாது. லல்லு - முலயம் கட்சியினர் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்கின்றனர். பாரதீய ஜனதா இதை முற்றாக எதிர்க்கிறது என வெளிப்படையாக அறிவித்து விட்டது. பிறகு ஒருமித்த கருத்துக்கு எங்கே இடமிருக்கிறது?

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் மட்டும் ஏன் பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மையினர் இட ஒதுக்கீடு என பிரச்சினையைக் கிளப்புகின்றனர்? ஆண்களுக்கு இப்படி இட ஒதுக்கீடு இல்லையே! மண்டல் கமிஷன் கூட கல்வி - வேலை வாய்ப்புகளில் தான் இட ஒதுக்கீடு எனப் பேசும் போது, தேர்தல்களில் இந்த இட ஒதுக்கீட்டிற்கு என்ன தேவை? நேரடியாக பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை எதிர்த்தால், பெண்கள் ஓட்டு கிடைக்காமற் போகலாம்; மாறாக, பிற்பட்டோர் - சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு கேட்டால் பிரச்சினையாகி நிற்கும்;

33 சதவீத இடஒதுக்கீட்டை உடனே சட்டமாக்கக் கோரி நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தும் மகளிர் அமைப்பினர்.




படிப்பகம்

www.padippakam.com

அதையும் ஏற்று சட்டமாக்கினால், இதை வைத்தே ஓட்டுப் பொறுக்கலாம் என்பதுதான் எதிர்ப்போரின் திட்டம்.

ஏற்கெனவே, மத அடிப்படையில் ஒதுக்கீடு கோரிக்கை இந்திய அரசியல் சட்டம் வரையறுக்கும் போது முன் வைக்கப்பட்டதுதான். சமூகத்தில் இது மத வேற்றுமையை அதிகப்படுத்தும் எனக் கூறி, அன்று நிராகரிக்கப்பட்டது.

மத ரீதியில் ஒதுக்கீடு என்பதற்கான அடிப்படை ஏதும் இல்லை. மேலும் இந்து மதவெறி பா.ஜ.க. அரசு இதை நிச்சயம் ஏற்காது என்று தெரியும்.

எனவே, பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் பிற்பட்டோர் - சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு என்பவர்களின் நோக்கம், அப்பெண்கள் மீதான பெரும் அக்கறையில் எழவில்லை. இச்சட்டத்தை முடக்குவதற்கான ஒரு சாக்குதான். இம்மசோதாவைச் சட்டமாக்க முன்வந்த பா.ஜ.க. கூட, பெண்கள் நலனிலிருந்து, அக்கறையிலிருந்து இச்சட்டத்தைக் கொண்டு வரவில்லை.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பெண்கள் நிலை மிகப் பரிதாபமானது. இராஜஸ்தானில்தான் பெண் சிசுக் கொலை மிக அதிகம். குழந்தைத் திருமணம், சதி என்ற இறந்த கணவனுடன் மனைவியை உடன்கட்டை ஏற்றுவது போன்ற காட்டுமிராண்டித்தனங்களும் அதிகம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ரூப் கன்வர் என்ற இளம் பெண்ணை கட்டாயப்படுத்தி உடன்கட்டை ஏற்றினர் மேல்சாதி வெறியர்கள். அது பெரும் சர்ச்சையைக் கிளப்ப, பா.ஜ.க. தலைவரான விஜயராஜே சிந்தியா உட்பட பலரும் இதை வெளிப்படையாக ஆதரித்தனர்.

பெண்கள் மீதான பாலியல் கொடூரங்கள் இவர்கள் ஆளுகின்ற இராஜஸ்தான், மகாராட்டிரா, குஜராத் மாநிலங்களில் மிக அதிகம். குறிப்பாக இராஜஸ்தான் மாநிலத்தில் குழந்தைத் திருமணத்தை எதிர்த்த மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பன்வாரி தேவி என்ற சமூக சேவகி குஜ்ஜார் மேல் சாதியினரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். நீதிமன்றம் குற்றவாளிகளை விடுதலை செய்தபோது, பா.ஜ.க. கட்சியின் பாஸி தொகுதி எம்.எல்.ஏ. கன்ஹயா லால் மீனா என்பவர் குற்றவாளிகளை மாலையிட்டு, வெற்றி வீரர்களாக்கி ஊர்வலம் வந்தார்.

இன்று, 'போஸ் மாணவர் விடுதி பாலியல் பலாத்காரம்' இராஸ்தான் மாநிலத்தை உலுக்கி வருகிறது. பா.ஜ.க. அரசோ குற்றவாளிகளைப் பாதுகாக்கிறது. இப்படிப்பட்ட பாலியல் வன்முறைகளை பா.ஜ.க. தலைவர்கள் மறைமுகமாக ஆதரிப்பது, குற்றவாளிகளைப் பாதுகாப்பது எனப் பெண்களுக்கு எதிராக நடந்து கொண்டே, மறுபுறம் பெண்கள் முன்னேற்றம் என வாய் கிழியப் பேசுகிறார்கள்.

காங்கிரசுக் கட்சியினர் இவர்களுக்குச் சற்றும் குறைந்தவர்களில்லை. தில்லி நைனா சஹானி படுகொலைச் சம்பவம் ஒன்றே போதும் இவர்களின் யோக்கியதைக்கு.

ஆணாதிக்க வெறிபிடித்த சோ போன்றோரும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை எதிர்த்து, இழிவுபடுத்துகின்றனர். அரசியல் கிரிமினல் மயமாகி வரும் இந்நாளில், அக்கிரிமினல்கள் பெண்களை முன்னிருத்தி தப்பிவிடுவர் என 'நியாயவாதம்' பேசுகின்றனர். பாசிச இந்திராவையும், கிரிமினல் - ஊழல் நாயகி ஜெயாவையும் காட்டி, அரசியலுக்கு வந்துள்ள / வரத் தயாராக உள்ள பெண்களை இழிவுபடுத்துகின்றனர்.

ஜெயாவும், இந்திராவும் விதி விலக்கானவர்கள் தான். அதேபொழுதில், உள்ளூராட்சித் தேர்தல்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட இட ஒதுக்கீட்டின் காரணமாக, மதுரை மாநகர கவுன்சிலர் தேர்தலில் நின்று வென்ற லீலாவதி என்ற பெண் உறுப்பினர் - இவர், 'மார்க்சிஸ்டு' கட்சியைச் சேர்ந்தவர் என்ற போதிலும் - அரசியல் ரவுடிகளை எதிர்த்த போராட்டத்தில் தனது உயிரையும் பறிகொடுத்தார் என்பதை சாதாரணமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

அதிகாரம் ஏதுமற்ற சட்டமன்ற, பாராளுமன்ற அமைப்புகளால் மக்கள் - பிரச்சினை தீரப் போவதில்லை. இதில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு தரப்பட்டாலும், பெண்கள் பிரச்சினை தீரப் போவதில்லை. ஆனாலும், இந்த இட ஒதுக்கீடு மூலம் பெண்கள் அரசியல், சமூகப் பிரச்சினைகளில் இப்போதுள்ளதைவிட, அதிக அளவு பங்கேற்க உதவும் என்ற வகையில் நாம் இதை வரவேற்கிறோம்.

● மாரி



33 சதவீத இடஒதுக்கீட்டை கேவலப்படுத்தி எழுதிய துக்ளக் பத்திரிகையை எரிக்கும் தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பினர்.


## படியுங்கள்!

**தேசியம் எப்பொழுதும், எங்கும் முதலாளித்துவ கோரிக்கையே ஒழிய, பாட்டாளி வர்க்கக் கோரிக்கையல்ல!**

— பி. ரயாகரன்

“குழப்புவதே ஆய்வு என விளம்பும் அ. மார்க்ஸ் கும்பலின் கற்பிதங்களை அம்பலப்படுத்தும் புதிய நூல்.”

விலை : ரூ. 20

பதிவு அஞ்சலில் நூலைப் பெற பணவிடை மூலம் ரூ. 30 அனுப்புக.

நூல் கிடைக்குமிடம்:
கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com

## கண்டதேவி கோயில் தேர் விவகாரம்:

# மனுதர்மமே கருணாநிதியின் சமூகநீதி!

இந்து என்பது பண்பாடு என பார்ப்பன மதவெறி ஆர்.எஸ்.எஸ். கும்பல் திரும்பத் திரும்ப நமது காதில் சுற்றுகிறது. சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அருகிலுள்ள கண்ட தேவி கிராம கோயில் தேர் வடமிழுப்பதில் இந்து என்பது மதப் பண்பாடு என்பதெல்லாம் பம்மாத்து; இந்து என்றாலே சாதிதான் என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆர்.எஸ்.எஸ். கும்பல் தேச ஒற்றுமை பற்றிப் பேசி வரும் போது, தேவகோட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களைக் கொண்ட 14 நாடுகள் இன்னமும் சிவகங்கை சமஸ்தானப் பெருமையில் நீடிக்கின்றன. இந்த 'நாடுகளின்' உள்விவகாரங்களில் ஆதிக்க சாதிகளில் பெரும்பான்மையாக உள்ள 'கள்ளர்'கள் வைத்ததே சட்டம்.

உஞ்சனை நாட்டிலுள்ள கிராமம் கண்ட தேவி. இங்குள்ள கோயில் தேரின் வடமிழுப்பது உஞ்சனை நாடு, செம்பொன்மாரி நாடு, இரவு சேர் நாடு, தென்னிலை நாடு என்கிற நான்கு நாடுகளுக்கு மட்டுமே உள்ள உரிமையாம்! இங்குள்ளவர்கள் நாட்டார்கள் எனப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களை இவர்கள் மனிதர்களாகவே கருதுவதில்லை. எனவே தாழ்த்தப்பட்டவர்கள் நாட்டார்கள் இல்லை; வடமிழுக்கவும் உரிமை இல்லை. காலம் காலமாக இதுதான் நிலைமை.

ஆதிக்க சாதிகள் வடமிழுக்க, தாழ்த்தப்பட்டவர்கள் தேருக்குப் பின்னிருந்து 'கிட்டி போட்டு' தேர்ச் சக்கரத்தைத் தள்ளும் 'சேவை'யைச் செய்துள்ளனர். இதிலும் மனுதர்ம விதி கறாராக கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. கடவுளை நேரடியாக சேவிக்க ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமே உரிமை உண்டு. அதனால்தான் கோவிலுக்குள் நுழையக் கூட தாழ்த்தப்பட்டவருக்கு உரிமை மறுக்கப்பட்டது. அந்த தாழ்த்தப்பட்டவன் கடவுளின் அருட்பார்வையில் வடமிழுப்பது மனுதர்மத்தை மீறுவது என்பதாலேயே பின்னிருந்து 'கடமை'யைச் செய்ய விதிக்கப்பட்டான். கூடவே ஆதிக்க சாதியினருக்கு சமதையாக நின்று தாழ்த்தப்பட்டவர் வடம் இழுப்பதா என்ற கௌரவமும் குறுக்கிடவே வடமிழுக்கும் உரிமை தாழ்த்தப்பட்டவர்களுக்கு முற்றாக மறுக்கப்பட்டது.

1953 இல் மரியாதைமிக்க தாழ்த்தப்பட்டவர் ஒருவர் சட்டை போட்டு 'கிட்டி' போட வந்ததால் ஆதிக்க சாதியினரால் அடித்து விரட்டப்பட்டார். அன்றிலிருந்து தாழ்த்தப்பட்டவர்கள் தமது 'கடமை'யைச் செய்யாமல் நின்று விட்டனர். ஆனாலும் 'குறை'யின்றி தேர் நிற்காமல் ஓடியது.

1998-இல் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி வடிவில் சாமிக்கே சோதனை வந்துவிட்டது. இந்த ஆண்டு திருவிழாவில் தேரின் வடமிழுக்க தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சம உரிமை உண்டு, அதைப் பெற்றே தீருவோம் என ஆறு மாதத்திற்கு முன்பே கிருஷ்ணசாமி அறிவித்ததோடு, உயர்நீதி மன்றத்திலும் வழக்கு தொடுத்தார்.

இது பற்றி 'தமிழன் எக்ஸ்பிரஸ்' வார இதழ், கிருஷ்ணசாமி அறிவிப்பைக் கூறியதையடுத்து 'அப்போதே பதற்றத்திற்குப் பச்சைக் கொடி காட்டப்பட்டது' என்கிறது. தாழ்த்தப்பட்டவர் வடமிழுப்பேன் என்றாலே பதற்றம் வருகிறது என்றால், வன்கொடுமைத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட வேண்டிய ஒரு குற்றம் என எந்தப் பத்திரிக்கையும் செய்தி வெளியிடவில்லை.

மாறாக, 'நாடு'களைப் பற்றி சிலாகிக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் வடம் பிடித்துத் தேர் இழுக்கக் கூடாது என்பதை கட்டுப்பாடு என பெருமை பேசும் ஜூனியர் விகடன் இதழ், தாழ்த்தப்பட்டவர்கள் வடம் பிடிப்போம் என்பதை 'போர்க்கொடி' யாக்குகிறது. தாழ்த்தப்பட்டவர்களும் மனிதர்கள்; ஏன் ஒடுக்கப்பட வேண்டும் எனக் கேள்வி எழுப்பவில்லை.

இன்னும் நயவஞ்சகமாக 1979-இல் நடந்த ஊஞ்சனைப் படுகொலையைக் குறிப்பிட்டு, அதன் பயங்கர விளைவுகளை இரு தரப்பினருமே இன்னும் மறக்கவில்லை எனப் பீதியூட்டுகின்றன. ஜூ.வி. முத்தாய்ப்பாக, தாழ்த்தப்பட்ட சமூகத்திலேயே பழைய கலவரத்தின் உக்கிரத்தை விரும்பாதவர்கள், ''அமைதியா கெடக்குற பூமியை ரத்தக் களறியாக்க வேண்டாம்'' என்றும் சொல்லி வருகிறார்கள்!' எனப் புலனாய்வு செய்து, தாழ்த்தப்பட்டவர்கள் கருத்து இது எனப் பெரிதுபடுத்தி, வடம் இழுக்கும் உரிமை கேட்பவர்களை கலவரக்காரர்களாக்குகிறது.

ஜூ.வி. மட்டுமல்ல, எல்லா இதழ்களும், அரசு - போலீசு - நீதிமன்றம் உட்பட அனைத்துமே 'தேர் வடமிழுப்போம்' எனத் தாழ்த்தப்பட்டவர்கள் கூறுவதைக் கலவரம் என்றே பூதாகரமாக்குகின்றன. கலவரம் செய்ய உள்ள ஆதிக்க சாதியினரைக் கண்டிக்க யாரும் தயாரில்லை என்பதை விட, இவர்கள் அனைவருமே ஆதிக்க சாதியினராகவே நடக்கின்றனர் என்பதுதான் உண்மை.

அத்திபூத்தாற் போல், அபூர்வமாக, இம்முறை நீதிமன்றம் திருவிழாவிற்கு முதல் நாள் கிருஷ்ணசாமி வழக்கில் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியது.

'... மனுதாரரோ, அல்லது பொது மக்களோ, எந்தச் சாதியாக இருந்தாலும், வழக்கமான பூசைகளுக்குப் பின் ஒரு மணி நேரம் கழித்து, நிர்வாகம் தீர்மானிக்கும்படி, நாட்டார்கள் முதலில் தேரை இழுக்க இவர்களும் உடன் தேர் இழுக்க எந்தத் தடையும் இல்லை...' என்பதே தீர்ப்பு.

நீதிமன்றமே நாட்டார்களுக்கு 'முதல் மரியாதை' தந்தும், நாட்டார்கள் 'தமக்குச் சமதையாக தாழ்த்தப்பட்டவர்களா?' என நீதிமன்றத் தீர்ப்பைக் கழிப்பறைக் காகிதமாக்கினர். மாவட்ட ஆட்சியர் தலைமையில் சமாதானப் பேச்சு வார்த்தை நடந்து,


மனு தர்மத்தைக் காப்பாற்ற கண்டதேவியில் குவிக்கப்பட்ட தமிழகப் போலீசார்.


படிப்பகம்

www.padippakam.com

'முதல் ஒரு மணி நேரம் நாட்டார்கள் தேரிழுப்பது, பிறகு தாழ்த்தப் பட்டவர்கள் இழுப்பது' என புதிய 'மனு நீதி'த் தீர்ப்பு வழங்கப்பட்டது. முதலில் ஏமாந்தோ, எப்படியோ, இதை ஏற்ற தாழ்த்தப்பட்ட சாதியினர், பின்னர் விழிப்புற்று, ஏற்க மறுத்தனர். நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வலியுறுத்தினர். மாவட்ட ஆட்சியரோ 144 தடையுத்தரவு போட்டார்.



மேல்சாதி ஆதிக்கம் தொடர வேண்டும் என்பதற்காக ஊர்வலம் நடத்தும் கள்ளர் சாதிப் பெண்கள்.

நீதிமன்றமே, அனைவரும் சமமாக வடம் இழுக்க உத்திரவிடாமல், முதலில் நாட்டார் இழுக்க, பின் அனைவரும் உடனிழுக்க எனச் சமத்துவமின்றி தீர்ப்புக் கூறியது. இதையும் ஆதிக்க சாதியினர் மறுத்து கலவரம் செய்ய முயன்றனர். மாவட்ட ஆட்சியர் கெஞ்சிக், கூத்தாடி கலைந்து போகச் செய்துள்ளார். தனது அதிகாரத்தை இங்கு நடைமுறைப்படுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அடிக்கடி 'எனது மகனுக்கு தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பெண் எடுத்துள்ளேன்' எனக் கூறும் முதல்வர் கருணாநிதி, தாழ்த்தப்பட்டோர் தேர் இழுக்கும் உரிமையைக் கூட மறுத்துவிட்டார். இருக்கும் காவல் துறை பலத்தைக் கொண்டு நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த முடியாதா? ஏன் இதைச் செய்யவில்லை? பிரச்சினை ஆறுமாதத்திற்கு முன்பே எழுப்பப்பட்டது தானே! அரசே கூட, கிருஷ்ணசாமி வழக்குப் போடுவதற்கு முன், 'ஒன்றே குலம்' என நடவடிக்கை எடுத்திருக்க முடியாதோ? மாவட்ட ஆட்சியராகட்டும், முதல்வராகட்டும் அனைவருமே ஆதிக்க சாதியினருக்கு அடிபணிந்துள்ளனர்.

தேரில் ஏற்றிய கடவுளர் சிலைகள் வீதி உலா வராமல், இருநாள் சிறைப்பட்டதாக எல்லா இதழ்களும் வருந்துகின்றன. சாமி முக்கியமா, சாதி ஆதிக்கம் முக்கியமா? என்ற கேள்வி ஆதிக்க சாதியினர் முன் எழுந்தது. சாதி ஆதிக்கம்தான் முக்கியம் என சாமியை வீதியில் அம்போவென விட்டுவிட்டுச் சென்று விட்டனர்.

எல்லோரும் இந்து என, முஸ்லிம்களை நர வேட்டையாட தாழ்த்தப்பட்டவர்களை அணி திரட்டும் இந்து முன்னணி இராமகோபாலய்யர் தேர் ஓடாதா, கலவரம் நடக்காதா என இலவு காத்த கிளியாக காத்திருந்தார். அப்போதுதானே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, ஆட்சியைக் கலை என அறிக்கை விட்டு பார்ப்பன பாசிச ஜெயாவை குளிர்விக்க முடியும். மாவட்ட ஆட்சியர் கெடுத்தார் காரியத்தை.

எல்லோரும் இந்து என்கிற இராம கோபாலய்யர், கலவரச் சூழல் உள்ள கண்டதேவிக்கு சமாதானம் பேச வரவில்லை. சூத்திர மடாதிபதி குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்தான் சமாதானப்படுத்த வந்தார்.

இராமகோபாலய்யர் வந்து பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால், யார் இந்து எனத் தெளிவு கிடைத்திருக்கும். பாரதத்தில் 14 நாடுகள் சேர்வது பற்றி முடிவெடுத்திருக்கலாம். என்ன செய்வது? பொது வாழ்வில் பொன் விழா கொண்டாடி, இலட்சக்கணக்கில் வசூல் செய்யவே நேரமில்லாத போது நாடாவது, தேராவது, வடமாவது?

இப்படிப்பட்ட போராட்டங்களில் ஆதிக்க சாதியினர் புதிய வகை தீண்டாமையை உருவாக்குகின்றனர். கோயிலில் நுழைகிறாயா, இந்தா சாவி என சாமியையும் தீண்டத்தகாதவராக்கி விடுகின்றனர்.

கண்டதேவி கோயில்தேர் இழுக்கும் விவகாரத்தில் தீண்டாமைக்கெதிரான தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் சரியானது, நியாயமானது. ஆதிக்க சாதியில் பிறந்து விட்டாலும் ஜனநாயக உரிமைகளுக்காக நிற்பவர்கள் இப்போராட்டங்களில் பங்கெடுத்து, தீண்டாமைக்கெதிராகப் போராட வேண்டியது கட்டாயம் அவசியம்.

• பாரி

## சீறிரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம்: பொய் வழக்குகள் தூள்! தூள்!!

1992 டிசம்பர் இறுதியில் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிய இந்து மத வெறியர்கள், அந்த நாசச் செயலை, "இந்துக்களின் கௌரவம்" எனப் பிரச்சாரம் செய்தனர்; பாபர் மசூதியை இடிப்பதற்குத் தங்களுடன் தாழ்த்தப்பட்டவர்களையும் "இந்து" என்று சொல்லி அணி திரட்டிக் கொண்டனர். இந்தப் பார்ப்பன அயோக்கியத்தனத்தைத் திரை கிழிக்கவும், இந்து என்பது பிற மதங்களைப் போன்றதில்லை; சாதிய படிநிலையும், தீண்டாமையும்தான் அதன் அடிப்படை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டவும் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி இம்மூன்று புரட்சிகர அமைப்புகளும் இணைந்து, 1993 மே 1-ல், திருச்சி சீறிரங்கம் கோயில் கருவறையில் நுழையும் போராட்டத்தை அறிவித்தன.

பாபர் மசூதியை இடிக்க ஆளனுப்பிய பார்ப்பன பாசிச ஜெயா அரசு, போராட்ட தினத்திற்கு 3 நாட்களுக்கு முன்பே, திருச்சி முழுவதும் 144 தடையுத்தரவு போட்டு, 700-க்கும் மேலான தோழர்களைச் சிறையிலடைத்தது. அரசு அடக்குமுறையை ஏவிவிட்டதன் மூலம் புரட்சியாளர்களின் கருவறை நுழைவுப் போராட்டத்தை முறியடித்துவிட்டதாக பார்ப்பன மதவெறி கும்பல் பூரித்துப் போனது. இதன்பின், மே 24 அன்று முன்னறிவிப்பின்றி இம்மூன்று புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 31 பேர், சீறிரங்கம் கருவறைக்குள் பெரியார், அம்பேத்கர் படங்களுடன் நுழைந்தனர். பார்ப்பன கும்பல் கொலை வெறி கொண்டு தோழர்களைத் தாக்கி, போலீசில் ஒப்படைத்தது.

கருவறைக்குள் 'சூத்திரர்களும் பஞ்சமர்களும்' நுழைந்ததால் தீட்டுப் பட்டதாகக் கூறி, ஆகம விதிப்படி 'சம்ப்ரோஷணம்' செய்தனர் பார்ப்பனர்கள். அரசு உயரதிகாரிகள் முன் இது நடந்தது. கிரிமினல் சட்டப்படியும் தீண்டாமைச் சட்டப்படியும் இவர்களைக் கைது செய்யாத போலீசு, ம.க.இ.க. தோழர்களை, கொலை முயற்சி உட்பட பல்வேறு பிரிவுகளில் பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கு விசாரணையின் போது, வீதியில் கொள்கை சவடால் அடித்து விட்டு நீதிமன்றத்தில் பல்டி அடிக்கும் ஓட்டுக் கட்சிகள் போலன்றி, தோழர்கள், 'பார்ப்பன ஆதிக்கத்தை முறியடிக்க கருவறையில் நுழைந்தது உண்மை; போடப்பட்டுள்ள வழக்குகள் பொய்' என ஆணித்தரமாகக் கூறினர்.

திருச்சி 5-ஆவது நடுவர் நீதிமன்றத்தில் கடந்த 5 ஆண்டுகளாக நடந்து வந்த இப்பொய் வழக்கின் தீர்ப்பு ஜூலை 23 அன்று வெளியானது. தோழர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## இந்து வெறியர்களுக்கு எதிராக மாணவர்கள் போர்க்கோலம்

மே.வங்கத் தலைநகர் கல்கத்தாவிலுள்ள பிரசிடென்சி கல்லூரி மாணவர்கள், தமது கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்ட திடீர் சிவன் கோயிலை இடித்து, இந்து வெறியர்களுக்குப் புரியும் மொழியில் பாடம் புகட்டியுள்ளனர்.

கல்கத்தாவிலுள்ள பிரசிடென்சி கல்லூரி, நூற்றாண்டு விழா கண்ட தொன்மை வாய்ந்த கல்லூரியாகும். 1855-இல் இந்துக் கல்லூரி எனப் பெயரிடப்பட்டிருந்த இக்கல்லூரி, இந்து மதத்தவருக்கு மட்டுமேயான கல்லூரி என்றாகி விடக்கூடாது என்பதால், ஒரு நூற்றாண்டுக்கு முன்பே, பிரசிடென்சி கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கடந்த ஜூன் மாத இறுதியில், அக்கல்லூரி வளாகத்தில் ஒரு சிறுகோயில் கட்டப்பட்டு, அதனுள்ளே இந்துக் கடவுள் சிவன் படமும் வைக்கப்பட்டது. கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களின் நெடுநாளைய விருப்பப்படி, அவர்களது வழிபாட்டுக்காக இக்கோயில் கட்டப்பட்டுள்ளதாக விசுவ இந்து பரிஷத் எனும் இந்துவெறி அமைப்பினர் காதில் பூச்சுற்றினர். பிரசிடென்சி கல்லூரியை மீண்டும் இந்துக் கல்லூரியாக மாற்றும் நோக்கத்துடனேயே அவர்கள் இச்சதிச் செயலில் இறங்கினர்.

இத்திடீர்க் கோயில் மாணவர்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. கல்லூரியின் மாணவர் சங்கக் கூட்டத்தில் விவாதித்து, மதச்சார்பின்மை பாரம்பரியத்தைக் கொண்ட இக்கல்லூரியின் வளாகத்திலிருந்து 48 மணி நேரத்திற்குள் இத்திடீர்க் கோயில் அகற்றப்பட வேண்டும்; இல்லையேல் நாங்களே அதை இடித்துத் தள்ளுவோம்'' என்று ஜூலை 6-ந் தேதி கல்லூரி நிர்வாகத்துக்கு எச்சரிக்கை விடுத்தனர். ஆனாலும், இக்கோயிலை நிர்வாகம் அகற்றவில்லை.



திடீர் சிவன் கோயிலை இடித்து நொறுக்கி இந்துவெறியர்களுக்குப் பாடம் புகட்டிய கல்கத்தா பிரசிடென்சி கல்லூரி மாணவர்கள்.

மாணவர்கள் தாங்கள் விதித்த கெடு முடிந்ததும், ஜூலை 8-ந் தேதியன்று மாணவர் சங்கப் பொதுக் குழுவைக் கூட்டினர். அதே சமயம் கல்லூரிக்கு வெளியே பெருமளவு போலீசு குவிக்கப்பட்டது. பொதுக் குழுவில் இத்திடீர்க் கோயிலை இடித்துத் தள்ளுவது என்று ஏகமனதாக முடிவு செய்த மாணவர்கள், இந்து வெறியர்களுக்கு எதிராக முழங்கியபடியே கல்லூரி வளாகத்தினுள் ஊர்வலமாக வந்தனர். கல்லூரி அருகே ஒரு கட்டிட வேலைக்காக குவிக்கப்பட்டிருந்த மூங்கில் கம்புகள், கடப்பாரை, மண்வெட்டிகளைக் கையிலெடுத்துக் கொண்ட அவர்கள், திடீர்க் கோயிலின் இரும்புக் கதவை உடைத்து, கோயில் சுவர்களை இடித்து சேதப்படுத்தினர். உள்ளே வைக்கப்பட்டிருந்த சிவன் படமும் உடைத்தெறியப்பட்டது.

இச்செயலைக் கண்டு பீதியடைந்த விசுவ இந்து பரிஷத் மற்றும் அகில இந்திய வித்யார்த்தி பரிஷத் எனும் இந்து வெறி மாணவர் அமைப்பும், இக்'கொடுஞ் செயலை'க் கண்டித்து தேசிய அளவில் கிளர்ச்சிகள் நடத்தப் போவதாக சவடால் அடித்துவிட்டு, மாணவர்களின் போர்க் குணத்தைக் கண்டு பின் வாங்கிவிட்டது. அயோத்தியில் மசூதியை இடித்த இக்கயவாளிகள், வழிபாட்டுத் தலத்தை இடித்து, இந்துக்களின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்று இப்போது மாணவர்களுக்கு உபதேசித்து அறிக்கைகள் விடுக்கின்றனர்.

இந்து வெறியர்களுக்கு எதிராக முன்னுதாரணமிக்க போராட்டத்தை நடத்திய பிரசிடென்சி கல்லூரி மாணவர்களின் வழியில், நாடெங்குமுள்ள மாணவர்களும், அரசு ஊழியர்களும் தமது கல்லூரி மற்றும் அலுவலகங்களில் ஊடுருவியுள்ள வழிபாட்டுத் தலங்களை அகற்றிடப் போராடுவதே இன்றைய தேவையாக உள்ளது.

## தென்கொரியாவை உலுக்கும் தொழிலாளர் போராட்டம்

நாணய மதிப்புச் சரிவினால் மஞ்சள் கடுதாசி கொடுத்து திவாலாகும் நிலையிலிருந்த தென்கொரியாவை தற்காலிகமாக நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு, சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்.) 5700 கோடி டாலர் கடன் கொடுத்தது. தொழிலாளர்களில் கணிசமானோரை வேலை நீக்கம் செய்வதோடு, ஊதியத்தையும் குறைக்க வேண்டும்; ஆலைகளை நவீனப்படுத்தி மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்று கடன் கொடுத்த ஐ.எம்.எஃப். கடுமையான நிபந்தனைகளையும் விதித்தது.

இதன் விளைவாக பல நூறு சிறு தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி, தரகுப் பெருமுதலாளிகளின் நிறுவனங்களும் அடுத்தடுத்து மூடப்பட்டு வருகின்றன. கடந்த சில மாதங்களில் கொரியாவின் மிகப் பெரிய மோட்டார் வாகன நிறுவனமான ''கியா மோட்டார்ஸ்'' நிறுவனம் திவாலாகி விட்டதாக அறிவிக்கப்பட்டு, மூடுவிழாவை எதிர் நோக்கியுள்ளது. ஆட்குறைப்பு, ஆலை மூடல்கள் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து வருகிறார்கள். அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்க வக்கற்ற ஆட்சியாளர்கள், ஐ.எம்.எஃப்.-பின் நிபந்தனைப்படி இவ்வாண்டு இறுதிக்குள் 5 லட்சம் பேரை வேலை நீக்கம் செய்யும் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றனர். ஐ.எம்.எஃப்.பின் திட்டப்படி கொரியாவின் பொருளாதாரம் சீரடைவதற்குள் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வேலையிழப்பார்கள் என்று அந்நாட்டுப் பொருளாதாரவாதிகளே எச்சரிக்கின்றனர்.

அடுத்தடுத்து தொடரும் ''லே-ஆப்'', கதவடைப்பு, ஆலை மூடல்களால் வேலையிழந்து வரும் கொரியத் தொழிலாளர்கள், ''நாட்டு நலன் கருதி இச்சுமைகளை ஏற்று தியாகம் செய்ய வேண்டும்'' என்ற ஆட்சியாளர்களின் பசப்பல்களுக்கு மயங்கி விடவில்லை. ''ஐ.எம்.எஃப். கட்டளைக்கு அடி பணியாதே! தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டாதே! ஊதிய வெட்டு, ஆலை மூடல், கதவடைப்பு, வேலை நீக்கம் முதலானவற்றை உடனடியாகத் தடை செய்!'' என்ற கோரிக்கையுடன் ஜூலை இரண்டாம் வாரத்தில் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

கொரிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (KFTU) இப்போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தி வருகிறது. தனியார் மற்றும் அரசுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அன்றாடம் மேலும் பல நிறுவனங்களின் தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இணைந்து வருகின்றன. ஐ.எம்.எஃப்.-பின் விசுவாசிகளான ஆட்சியாளர்கள், போராடும் தொழிலாளர்கள் மீது அடக்குமுறையை ஏவியும், தொழிற்சங்கத் தலைவர்கள் - முன்னணியாளர்களைக் கைது செய்தும் கூட இப்போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. இன்றைய

www.padippakam.com



கேடு கெட்ட தென் கொரிய ஆட்சியாளர்களைத் தூக்கியெறியும் திசையில் அது முன்னேறி வருகிறது.

## பீகார் கால்நடை ஊழல்: சாட்சியங்களின் மரணமும் தொடரும் மர்மமும்

கிரிமினல் அரசியல் கொடிகட்டிப் பறக்கும் பீகாரில் நாளும் தொடரும் படுகொலைகள் புதிய செய்தி அல்ல. அதில் அதிகம் பாதிக்கப்படுவது தாழ்த்தப்பட்டோரும் உழைக்கும் மக்களும்தான். ஆனால் இப்போது அவர்களோடு அரசு ஊழியர்களும் அதிகாரிகளும் தாங்கள் எப்போது கொல்லப்படுவோமா என்ற பயபீதியில் அஞ்சி நடுங்குகின்றனர்.

கடந்த ஜூலை 4-ஆம் தேதியன்று உமா சங்கர் பிரசாத் என்ற அரசு ஊழியர் அலுவலகத்திலிருந்து தனது ''ஸ்கூட்டரில்'' வீடு திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் வாகனம் பழுதடையவே, சாலை ஓரத்தில் நிறுத்தி சோதித்துக் கொண்டிருந்தபோது, திடீரென வேகமாக வந்த ஒரு லாரி, அவர் மீதேறிக் கொன்றுவிட்டு விரைந்து சென்று விட்டது.



ஊழலை அம்பலப்படுத்தியதால் விபத்து என்ற பெயரில் கொல்லப்பட்ட கால்நடைத்துறை ஊழியர் உமா சங்கர் பிரசாத் உருவப்படத்துடன் அவரது மகன்.

இது எதிர்பாராத சாலை விபத்து என்கிறது போலீசு. ஆனால் எதிர்க் கட்சியினரும் அரசு ஊழியர்களும் இது திட்டமிட்ட படுகொலை என்று உறுதியாக நம்புகின்றனர். ஏனெனில் மாண்டு போன உமா சங்கர் பிரசாத் கால்நடைத் துறை ஊழியர். பீகாரின் முன்னாள் முதல்வரும், இன்றைய முதல்வர் ராப்ரி தேவியின் கணவருமான லல்லு பிரசாத் யாதவ் கும்பல் சுருட்டிய ரூ. 950 கோடி கால்நடை ஊழலை விசாரித்து வரும் மையப் புலனாய்வுத் துறைக்குச் சாதகமாகச் செயல்பட்டு வந்தவர். இதனாலேயே அவர் லாரி விபத்து என்ற போர்வையில் கொல்லப்பட்டுள்ளார்.

இது வெறும் ஊகமல்ல என்பதை 1996-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடரும் அடுத்தடுத்த மர்மமான சாவுகளே நிரூபித்துக் காட்டுகின்றன. 1996-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கால்நடைத் துறை துணை இயக்குநரான லாலா மோகன் லாரி மோதி மாண்டு போனார். கால்நடை ஊழலில் சம்பந்தப்பட்டுள்ள பிர்சா ஓரோண் என்பவரது கார் ஓட்டுநரான மனு முண்டா என்பவருக்கு இரகசியங்கள் தெரியும் என்பதால், டிசம்பரில் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். அதே 1996 டிசம்பரில் கால்நடைத் துறை அரசு அதிகாரியான ஜே.என். திவாரி லாரி மோதி கொல்லப்பட்டார். 1997-ஆம் ஆண்டு மே மாதத்தில், ஊழலில் சிக்கிய முக்கிய குற்றவாளியான கண்டேல்வால் என்பவரின் தலையில்லா முண்டம் ரயில் பாதையில் கிடந்தது. அதே மே மாதத்தில் கால் நடைத் துறை மருத்துவரான ராம் ராஜா சிங், தனது மகளோடு சைக்கிள் ரிக்ஷாவில் சென்று கொண்டிருந்த போது, லாரி மோதி கொல்லப்பட்டார். கால்நடை ஊழல் விவகாரத்தை மையப் புலனாய்வுத் துறை விசாரிக்கக் கோரி வழக்கு கொடுத்த சமதா கட்சிப் பிரமுகரான விவேகானந்த சர்மா, இவ்வாண்டு ஜூன் மாதத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவை தவிர, லல்லு பிரசாத் யாதவின் தனி உதவியாளராக இருந்த முகுல் கிஷோர் கபூர் 1997-லிருந்து காணவில்லை. இவர் லல்லுவுடனும், தனியாகவும் அடிக்கடி சிங்கப்பூர் சென்று வந்தவர்.

கால்நடை ஊழலில் சம்பந்தப்பட்டுள்ள முக்கிய சாட்சியங்களைக் கொன்றொழிப்பது; சி.பி.ஐ. விசாரணைக்கு உதவும் ஊழியர்களையும் அதிகாரிகளையும் மர்மமான முறையில் கொலை செய்வது என்கிற திட்டத்துடன் லல்லு கும்பல் செயல்பட்டு வருவதை இவையாவும் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. ''ஊழலுக்கு உடந்தையாக இருங்கள்; விருப்பமில்லாவிட்டால் ஒதுங்கிப் போய் விடுங்கள். காட்டிக் கொடுத்தால் கொல்லப்படுவீர்கள்'' என்பதுதான் லல்லு கும்பலின் இன்றைய 'சமூக நீதி'யாகி விட்டது.

## கொலைகாரர்கள் விடுதலை நீதிமன்றத்தின் வஞ்சகத் தீர்ப்பு

மத்தியப் பிரதேசத்தின் சட்டிஸ்கார் பிராந்திய தொழிலாளர்களும், ஆதிவாசி மக்களும் ஜபல்பூர் உயர்நீதி மன்றம் அளித்த வஞ்சகத் தீர்ப்பை எதிர்த்து நடத்தி வரும் போராட்டத்தால், அப்பிராந்தியமே பதற்ற நிலையில் உள்ளது. நாடெங்குமுள்ள தொழிற்சங்க அமைப்புகளும், ஜனநாயக உரிமைக்கான அமைப்புகளும் அநீதியான இத்தீர்ப்பை எதிர்த்துக் கண்டனங்களை எழுப்பி வருகின்றன.

பிலாய், துர்க், பிலாஸ்பூர் பகுதியில் ஆயிரக்கணக்கான ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களையும், ஆதிவாசி மக்களையும் அணிதிரட்டி, அவர்களது உரிமைக்கும், நல்வாழ்வுக்குமான போராட்டங்களை நடத்தி, அம்மக்களின் அன்புக்குரிய தலைவராக உயர்ந்தவர் சங்கர் குகா நியோகி. ''சட்டிஸ்கார் முக்தி மோர்ச்சா'' எனும் அமைப்பை நிறுவி, போர்க்குணமிக்க பல போராட்டங்கள் மூலம் இப்பிராந்தியத்திலுள்ள பெரு முதலாளிகளுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார் நியோகி. 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் 28-ந் தேதியன்று, அவர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது, முதலாளிகள் ஏவிவிட்ட கூலிக் கொலைகாரனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக்கொடுஞ் செயலுக்கு எதிராகத் தொழிலாளர்கள் நடத்திய தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பிறகு, மையப் புலனாய்வுத் துறை இக்கொலை வழக்கை விசாரித்தது. பிலாயிலுள்ள ''சிம்ப்ளெக்ஸ்'' நிறுவன முதலாளிகளான சந்திரகாந்த் ஷா, மூல்சந்த் ஷா ஆகியோர் கியான் பிரகாஷ் மிஸ்ரா, அபய சிங், அவதேஷ் ரேய் ஆகியோருடன் கூட்டு சேர்ந்து, பால்டன் மல்லா என்ற கூலிக் கொலைகாரனைக் கொண்டு, நியோகியைக் கொன்றனர் என்று நீதிமன்றத்தில் விசாரணை அறிக்கையை சமர்ப்பித்தது. துர்க் மாவட்ட (செசன்சு) நீதிமன்றத்தில் 6 ஆண்டுகளாக நடந்த வழக்கு விசாரணைக்குப் பிறகு, கூலி கொலைகாரன் மல்லாவுக்கு தூக்கு தண்டனையும், ஷா சகோதரர்களுக்கு ஆயுள் தண்டனையோடு ரூ. 10 இலட்சம் அபராதமும், மற்ற மூவருக்கும் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டு, 1997 ஜூன் 23-ந் தேதியன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

சுட்டுக் கொல்லப்பட்ட சட்டிஸ்கர் தொழிலாளர் தலைவர் சங்கர் குகா நியோகி



கொலைகாரர்கள் இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இவ்வழக்கை விசாரித்த ஜபல்பூர் உயர்நீதி மன்றம் போதிய சாட்சியங்களோ தடயங்களோ இல்லை என்று கூறி கொலைகாரர்கள் 6 பேரையும் இப்போது விடுதலை செய்துள்ளது. கடந்த ஜூன் 26-ந் தேதியன்று வெளியான இத்தீர்ப்பை

www.padippakam.com



எதிர்த்து சட்டிஸ்கார் பிராந்திய தொழிலாளர்கள் கடையடைப்பு போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியதோடு, தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்த வஞ்சகத் தீர்ப்பானது நியோகி குடும்பத்துக்கும், சட்டிஸ்கார் பிராந்திய தொழிலாளர்களுக்கும் மட்டுமல்ல; ஒட்டுமொத்த சமூகம் முழுமைக்கு எதிரானது ஆகும். பணத்திற்காக கொலை செய்யும் போக்கு தொடர்ந்தால், எதிர்காலத்தில் யாருமே தெருவில் நடமாட முடியாத நிலை ஏற்படும். இலாப வெறி கொண்ட முதலாளிகளின் கொட்டத்துக்கும், அரசியல் படுகொலைகள் தொடரவுமே இத்தீர்ப்பு அங்கீகாரம் அளித்துள்ளது.

தொழிலாளர்களின் உணர்வுபூர்வமான போராட்ட நிர்பந்தம் காரணமாக ம.பி. அரசு, இத்தீர்ப்பை எதிர்த்து மையப் புலனாய்வுத் துறை மூலம் உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. தொழிற்சங்க - ஜனநாயக உரிமைக்கு வேட்டு வைக்கும் இவ்வஞ்சகத் தீர்ப்புக்கு எதிராக, நாடெங்குமுள்ள வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் குரலெழுப்பி, சட்டிஸ்கார் தொழிலாளர் போராட்டத்துக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

## கல்வியும் கடைச் சரக்கானது!
## கேரள 'இடதுசாரி' அரசின் சாதனை

கேரளத்தை ஆளும் 'இடதுசாரி'களின் கூட்டணி அரசு, நடப்புக் கல்வியாண்டிலிருந்து கல்வியை மேலும் கடைச்சரக்காக்கும் புதிய கொள்கையை அறிவித்துள்ளது. 'இடது சாரி' கட்சிகளின் தலைமையின் கீழுள்ள மாணவர் சங்கங்களே, இக்கேடு கெட்ட கொள்கையை எதிர்த்து, தமது அரசுக்கு எதிரான போராட்டத்தில் இறங்குமளவுக்கு 'இடதுசாரி' அரசின் யோக்கியதை நாறிக் கிடக்கிறது.


'இடதுசாரி' அரசின் கேடுகெட்ட கல்விக் கொள்கையை எதிர்த்து கேரள சட்டமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்யும் 'இடதுசாரி' மாணவர் சங்கத்தினர்.

கேரளாவில் +2 எனும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு இதுவரை கல்லூரி படிப்புடன் இணைக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் 10-ஆம் வகுப்பு தேறிய பின்னர், கல்லூரிகளில் சேர்ந்து தான் +2 படிப்பைத் தொடர முடியும். தற்போது +2 படிப்பைக் கல்லூரிப் படிப்பிலிருந்து துண்டித்து, பள்ளிப் படிப்புடன் இணைப்பதென 'இடதுசாரி' அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி சில அரசுப் பள்ளிகள் மட்டுமின்றி, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளும் +2 படிப்பை தொடங்கலாம் என்று அறிவித்தது.

இதன் விளைவாக தனியார் பள்ளி நிர்வாகங்கள், தாங்கள் புதிதாக நியமிக்கும் +2 ஆசிரியர் பதவிகளை ஏலம் போட்டு விற்பதாக நிலைமை மாறிவிட்டது. ஆசிரியர் வேலைக்கு குறைந்தபட்சம் ரூ. 10 லட்சம் கொடுத்தால்தான் வேலை கிடைக்கும் என்ற சந்தை நிலவரத்தால், வேலையில்லா பட்டதாரி ஆசிரியர்கள் பரிதவிக்கின்றனர். ஒரு பள்ளியில் +2 படிப்பைத் தொடங்குவதற்கு குறைந்தது 15 பட்டதாரி ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்க வேண்டும். இதன்படி ஒரு தனியார் பள்ளி நிர்வாகம் ரூ. 1.5 கோடி வரை கொள்ளையடிப்பது சர்வ சாதாரணமாகி விட்டது.

கல்வியை மேலும் கடைச் சரக்காக்கிவிட்ட 'இடதுசாரி' அரசின் கேடு கெட்ட கொள்கையை எதிர்த்து 'மார்க்சிஸ்டு'களின் இந்திய மாணவர் சங்கமும் (SFI), வலதுகளின் அகில இந்திய மாணவர் சங்கமும் (AISF) நடத்திவரும் போராட்டத்துக்கு, 'மார்க்சிஸ்ட்' கட்சி தலைமையின் கீழுள்ள ஆசிரியர் சங்கக் கூட்டமைப்பும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இவை ஒரு புறமிருக்க, +2 படிப்பைத் தொடங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட 176 தனியார் பள்ளிகளில் 50% பள்ளிகள், கிறித்துவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளவை. ''மாநில மக்கள் தொகையில் 17%-ஆக உள்ள கிறித்துவர்களுக்கு இவ்வளவு ஒதுக்கீடு கூடாது. மக்கள் தொகையில் 22% பேராக உள்ள முஸ்லீம்களின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளுக்கு 6%-ம், பதினைந்து சதவீதமாக உள்ள பிற்பட்ட ஈழவர் சாதியினரின் பள்ளிகளுக்கு 6%-ம் ஒதுக்கீடு செய்வது பாரபட்சமானது'' என்று முஸ்லீம்களும் ஈழவர்களும் தமது பள்ளிகளுக்கு கூடுதல் ஒதுக்கீடு கோரி வருகின்றனர்.

இந்நிலையில் கேரள உயர்நீதி மன்றம் தனியார் பள்ளி நிர்வாகங்கள் ஆசிரியர்களை நியமிக்கும் உரிமைக்குத் தற்காலிகத் தடைவிதித்துள்ளது. இதனால் தற்காலிகமாகத் தப்பித்துக் கொண்ட 'இடதுசாரி' ஆட்சியாளர்கள் மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர். தாங்கள் ஆளும் மாநிலத்தில் தனியார் மய மோகத்தில் கல்வியைக் கடைச்சரக்காக்கிவிட்ட இப்போலி கம்யூனிஸ்டுகள், இதர ஓட்டுக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தொடரும் கல்விக் கொள்ளை - மோசடிகளை எதிர்க்க அருகதை இருக்கிறதா?

## சோனியாவுக்குக் காவடி
## தூக்கும் போலி 'மார்க்சிஸ்டு'கள்

நேற்று வரை காங்கிரசு எதிர்ப்பு அரசியல் நாடகமாடிக் கொண்டிருந்த 'மார்க்சிஸ்டு'கள், இப்போது காங்கிரசு ஆதரவு என்ற புதிய சந்தர்ப்பவாத சகதியை அள்ளிப் பூசிக் கொண்டு, கட்சி அணிகளையும், மக்களையும் ஏய்க்கக் கிளம்பியுள்ளார்கள். ''வகுப்புவாத பாரதீய ஜனதாவை முறியடிக்க, மத்தியில் காங்கிரசு ஆட்சியமைக்க முன்வந்தால், அதைத் தமது கட்சி ஆதரிக்கும்'' என்று மே. வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதி பாசு வெளிப்படையாக அறிவித்துள்ளார். ''இந்துத்துவ பேரபாயத்தை முறியடிக்க, இத்தகைய செயல்தந்திரம் இன்று மிக அவசியமாகியுள்ளது'' என்று பத்திரிகைகளுக்குப் பேட்டியளிக்கிறார், அக்கட்சியின் பொதுச் செயலாளரான சுர்ஜித். ''காங்கிரசு தனது பொருளாதாரக் கொள்கைகளை மாற்றிக் கொண்டால், அதனுடன் கூட்டுச் சேர்ந்து பாரதீய ஜனதாவை முறியடிக்க முயற்சிக்க வேண்டும்'' என்று நடைபெறவுள்ள தமது கட்சியின் 16-ஆவது பேராயத்துக்கான நகல் தீர்மானத்திலும் இதைக் குறிப்பிட்டுள்ளனர்.

அதன் பின்னர், ஜோதிபாசுவும், காங்கிரசின் முன்னாள் நிதியமைச்சருமான மன்மோகன் சிங்கும் தில்லியில் சந்தித்துப் பேசியுள்ளனர். 'மார்க்சிஸ்டு'களுடன் கூட்டணி சேர்வது பற்றி உரிய தருணத்தில் பரிசீலிப்போம் என்று ஜூலை 17-இல் கூடிய காங்கிரசு செயற்குழுவும் அறிவித்துள்ளது.

போலி கம்யூனிஸ்டுகள் பாசிச காங்கிரசுடன் கூட்டணி கட்டுவது புதிய விவகாரம் அல்ல. பாரதீய ஜனதா, காங்கிரசு - இரண்டுமே சமமான எதிரிகள் என்று கூறி வந்த 'மார்க்சிஸ்டு'கள், பின்னர் இவ்விரண்டிலும் பாரதீய ஜனதாதான் முதல் எதிரி என்று வியாக்கியானம் செய்தனர். காங்கிரசோடு சேர்ந்து கொண்டு ஐக்கிய முன்னணி அரசை ஆதரித்தனர். 'இடது சாரி' ஓட்டுக் கட்சிகளுடன் சேர்ந்து 'இடது முன்னணி' கட்டிய போலி கம்யூனிஸ்டுகள், பிறகு, இதர பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து, இடதுசாரி - ஜனநாயக முன்னணியைக் கட்டினர். காங்கிரசு, பாரதீய

www.padippakam.com



ஜனதா கூட்டணிக் கட்சிகள் அல்லாத, இதர எல்லாக் கட்சிகளுடனும் கூட்டணி கட்டிக் கொண்டதாக இந்த முன்னணி இருந்தது. இப்போது அதுவும் தோல்வியடையவே, காங்கிரசுடன் கூட்டுச் சேருவதற்காக ''இடது சாரி - ஜனநாயக - மதச்சார்பற்றி முன்னணி'' அமைக்க முயற்சிக்கின்றனர்.

இன்றைய நிலையில் காங்கிரசு மற்றும் பாரதீய ஜனதாவுக்கு மாற்றாக, போலி கம்யூனிஸ்டுகள் தலைமையில் மூன்றாவது அணியைக் கட்டுவதற்கான வாய்ப்பும் கானல் நீராகிவிட்டது. ஐக்கிய முன்னணி பிளவுபட்டுச் சிதறிப் போனதோடு, லல்லு பிரசாத் யாதவும் முலயம் சிங் யாதவும் சேர்ந்து ஒரு புதிய முன்னணியைத் தொடங்கி, வெளிப்படையாகவே காங்கிரசுடன் கூட்டுச் சேர கிளம்பிவிட்டனர். இந்நிலையில், பாசிச காங்கிரசுடன் கூட்டுச் சேருவதைத் தவிர வேறு வழியில்லாமல், போலி கம்யூனிஸ்டுகள் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுவிட்டனர்.

'60-களில் டாங்கே - ஜோஷி திரிபுவாதக் கும்பல், நேருவை ஏகாதிபத்திய எதிர்ப்பு சோசலிசவாதியாகச் சித்தரித்து காங்கிரசை ஆதரித்தபோது, இதை வால் வாதம், வலதுசாரி சந்தர்ப்பவாதம் என்று சாடி, தனிக் கட்சியாகப் பிரிந்த 'மார்க்சிஸ்டுகள்', இப்போது டாங்கேயின் வாரிசுகளாக மாறி, காங்கிரசுக்கு வால் பிடிக்கக் கிளம்பியுள்ளனர். இதன் மூலம் இருபெரும் போலி கம்யூனிஸ்டு கட்சிகளான 'இடது', 'வலது'களுக்கிடையே அடிப்படையில் வேறுபாடு ஏதுமில்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளனர்.

இன்றைய நாடாளுமன்ற போலி ஜனநாயகம் அராஜகத்திலும் நெருக்கடியிலும் சிக்கி, பாசிசத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இக்கேடு கெட்ட நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை அம்பலப்படுத்தி, நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு, இந்த அரசியலமைப்பைத் தகர்த்தெறிய புரட்சிக்கு அணிதிரட்டுதை விட்டு விட்டு, போலி கம்யூனிஸ்டுகள் காங்கிரசுக்கு வால் பிடிக்கக் கிளம்பிவிட்டனர். ''வலது சாரி - வகுப்புவாத சக்திகளிடமிருந்து நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு ஆபத்து'' என்று கூறிக் கொண்டு, ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் மாறி மாறி கூட்டுச் சேர்ந்து, நாடாளுமன்ற அமைப்பைக் கட்டிக் காக்கும் காவல் நாயாகச் சீரழிந்து கிடக்கிறார்கள். அன்று, இந்திரா அவசர நிலை பாசிசத்தைத் திணித்தபோது அதற்கு ஆதரவாக வலதுகள் காவடி தூக்கினர். இன்று, வலதுகளுக்குப் போட்டியாக, சோனியாவுக்குக் காவடி தூக்க 'இடது'களும் கிளம்பி விட்டனர். நல்ல முன்னேற்றம்தான்!

# சரிகா ஷா கொலை: யார் குற்றவாளி?

பெண்களைக் கேலி கிண்டல் செய்யும் விடலைக் கும்பலின் வக்கிரத்திற்குப் பலியானார் சரிகா ஷா என்ற கல்லூரி மாணவி. இப்படிப் பலியாகின்ற துயரச் சம்பவங்கள் நாளும் அதிகரித்து வருகின்றன.

இப்படுகொலைக்குக் காரணமான கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மட்டும்தான் குற்றவாளிகளா?

நடிகைகளின் அங்கங்களைப் போட்டு, யாருடையது எனக் கண்டுபிடிக்கச் சொல்லி, 'அறிவு'ப் போட்டி நடத்தும் வார இதழ்களின் ஆசிரியர்களை யார் கைது செய்வது?

ஒரு பக்கக் கதை என்ற பெயரில், ஒழுக்கக் கேடுகளை சமூகத்தில் பரப்புகிறவர்களை எந்தச் சட்டத்தில் கைது செய்வது?

புலனாய்வுப் பத்திரிக்கைகள் என்ற பெயரில், இதுவரை சமூகத்தில் பெரிய அளவு தெரிந்திராத பாலியல் சீரழிவுகளை 'சுவைமிக்கதாக' விளக்கப் படங்களுடன் வெளியிடுபவர்களை எப்படிக் கைது செய்வது?



சரிகா ஷா கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட இளைஞர்கள்; (இடது உள்படம்) சரிகா ஷா.

வண்ண வண்ணக் கலரில், வளவளப்பான காகிதங்களில், தோலுரித்துத் தொங்கவிடப்படும் ஆடுகளைப் போல பெண்களை அச்சிட்டு, எங்கும் நீக்கமற நிரப்புகிறார்கள், வார, மாத, நாளிதழ்கள் வரை. இதையே வானொளியும், திரைப்படங்களும் உயிருள்ள பிம்பங்களாக உலவ விட்டு சீரழிக்கின்றன.

தாராளமயம், தனியார்மயம் கொள்கையால், அந்நிய நிறுவனங்கள் ஆபாச சீரழிவை விதைக்கின்றன. 'டேக் இட் ஈஸி பாலிசி', 'ஐ டோன்ட் கேர்' என பிஞ்சு மனங்களிலும் நஞ்சை விதைக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அனுமதிக்கின்ற ஆட்சியாளர்களை எந்தச் சட்டத்தில் கைது செய்வது?

பாலகுமாரன்களும் - சுஜாதாக்களும், பாரதிராஜாகளும் - பாலச்சந்தர்களும், வைரமுத்துகளும் - வாலிகளும் இடையறாது சீரழிவைப் பரப்பும்போது, ஒரு புதிய சட்டத்தைப் போட்டு, பெண்கள் கேலி செய்யப்படுவதைத் தடுத்துவிடுவோம் என ஆட்சியாளர்கள் கூறுவது மோசடித்தனம் நிறைந்ததுதான்!

இச்சட்டத்தைக் காட்டிலும் சகிக்க முடியாத ஏமாற்று வித்தை உண்டென்றால், அது, சரிகா ஷாவின் மரணத்திற்கு கருணாநிதி அனுதாபம் தெரிவித்து மலர் வளையம் வைப்பதும், வைரமுத்து துக்கம் விசாரிப்பதும், ஆபாச சீரழிவைப் பரப்பும் பத்திரிகைகள் அனுதாபக் கட்டுரைகள் வெளியிடுவதும்தான்!

* மும்பையில் வாழும் முசுலீம்கள் நாட்டை விட்டுத் துரத்தப்படுகின்றனர்
* குஜராத்தில் முசுலீம் வீடுகள் இடிப்பு - தீ வைப்பு; கிறித்துவ தேவாலயம் சிதைப்பு - பைபிள் எரிப்பு

# தலைவிரித்தாடுகிறது இந்துவெறி பயங்கரவாதம்

அப்துல் சுக்கூர் - மேற்கு வங்க மாநிலத்தின் ஹூக்ளி மாவட்டத்தைச் சேர்ந்தவர். 80-களில் மும்பை மாநகரில் குடும்பத்துடன் குடியேறிய அவர், புடவைகளில் ஜரிகை வேலைப்பாடுகள் செய்யும் கூலித் தொழிலாளி. மும்பை நகரில் ரியேரோடு பகுதியில், ரயில் பாதையை ஒட்டியுள்ளப் பகுதியில் வாழும் ஏழை இசுலாமியர்.

கடந்த ஜூலை 13-ஆம் தேதியன்று நள்ளிரவில், தனது குடிசையில் தூங்கிக் கொண்டிருந்த அவரை, 'தேசத் துரோகி' என்று குற்றம் சாட்டிய மும்பை போலீஸ் ''உண்மையைச் சொல்! நீ வங்க தேசத்துக் காரனா, அல்லது பாகிஸ்தான் காரனா?'' என்று ஆபாச வசவுகளுடன் அவரைச் சூழ்ந்து கொண்டு அடித்தது. ''நான் பெங்காலிக் காரன்தான்!'' என்று தனது குடும்பத்தினரின் பிறப்புச் சான்றிதழ், ரேஷன் அட்டை ஆகியவற்றைக் காட்டி அவர் வாதிட்டபோது, போலீசு குண்டர்கள் அவற்றைக் கிழித்தெறிந்து, அவரை மிருகத்தனமாகத் தாக்கினர்.

அவரைப் போலவே ''பெங்காலிபுரா'' எனும் அச்சேரிப் பகுதியில் 30-க்கும் மேற்பட்ட ஏழை முஸ்லிம்கள் போலீசாரால் அடித்து இழுத்துச் செல்லப்பட்டனர். அந்நியர்கள், தேசத் துரோகிகள், இந்தியாவில் ஊடுருவியுள்ள பாகிஸ்தானியர்கள், வங்க தேசத்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட அவர்கள், வழக்கு மன்றத்தில் மறுநாள் நிறுத்தப்பட்டனர். அவர்களை வங்க தேச எல்லைக்குக் கொண்டு சென்று விரட்டுமாறு நீதிமன்றம் உத்திரவிட்டது.

பத்து நாட்கள் சிறையிடப்பட்ட அவர்கள், கல்கத்தா செல்லும் குர்லா விரைவு ரயில் வண்டியில் ஏற்றப்பட்டனர். மொத்தம் 34 பேர் கொண்ட அவர்களது கைகள் ஒருவரோடு ஒருவராக இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டன. தப்பியோடி விடாதிருக்க ரயில் பெட்டியின் ஜன்னலோடு அவர்கள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, துப்பாக்கி ஏந்திய போலீசு பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டனர்.

வங்காள முஸ்லிம்களை வெளியேற்றும் இந்துவெறி ஆட்சியாளர்களின் இக்காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டு மேற்கு வங்க மாநில மக்கள் ஆத்திரமடைந்தனர். இதே நேரத்தில், கிரிமினல் குற்றவாளிகளைப் போல இழிவுபடுத்தப்பட்டு, மும்பையில் இருந்து வெளியேற்றப்பட்ட வங்காள முஸ்லிம்கள் மும்பை வந்து கொண்டிருந்தனர். இச்செய்தியை அறிந்ததும், ஜூலை 23-ஆம் நாளன்று நூற்றுக்கும் மேற்பட்ட பார்வர்டு பிளாக் கட்சி ஊழியர்களும், 500-க்கும் மேற்பட்ட பொது மக்களும் கல்கத்தா அருகிலுள்ள உலுபெரியா ரயில் நிலையத்தில் திரண்டு, குர்லா விரைவு ரயில் வண்டியை மறித்தனர். மும்பை போலீசாருடன் போராடி 34 வங்காளிகளையும் மீட்டுச் சென்றனர். காவலுக்கு வந்த மும்பை போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 3 பேர் படுகாயமடைந்த போதிலும், அவர்களின் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. பின்னர் மே. வங்க போலீசு அதிகாரிகள் அவர்களைச் சாந்தப்படுத்தி, மும்பையிலிருந்து விரட்டப் பட்டவர்களை வழக்கு மன்றத்தில் நிறுத்தி பிணையில் விடுவித்தனர்.

மும்பையிலிருந்து வங்காள முஸ்லிம்கள் துரத்தப்படுவது இப்போது முதன்முறையாக நடப்பது அல்ல. இச்சம்பவத்துக்கு இரு நாட்கள் முன்னர் தான் 20 பேர் விரட்டப்பட்டனர். இவ்வாண்டு ஜனவரியிலிருந்து ஜூன் மாதம் முடிய 582 பேர் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அதிலும் மகாராஷ்டிராவில் இந்துவெறியர்கள் ஆட்சிக்கு வந்ததும் இக்காட்டுமிராண்டித்தனம் தீவிரமாகி விட்டது. 1996-இல் 780 பேர் மும்பையிலிருந்து துரத்தப்பட்டுள்ளனர்.

''அண்டை நாடான வங்க தேசத்திலிருந்து இலட்சக்கணக்கானோர் மேற்கு வங்கம், திரிபுரா, அசாம் மாநிலங்களில் குடியேறியுள்ளனர். பின்னர் அவர்கள் இந்தியாவின் பெருநகரங்களுக்குக் குடிபெயர்கின்றனர். இத்தகையவர்களைத் தான் இனங்கண்டு வெளியேற்றுகிறோம்'' என்கிறார் மைய அரசின் உள்துறை அமைச்சரான அத்வானி.

அண்டை நாட்டிலிருந்து குடியேறியவர்களை விரட்டுவது நியாயம் என்றால், முதலில் அத்வானியைத்தான் இந்தியாவிலிருந்து துரத்த வேண்டும். ஏனெனில் அவர் பாகிஸ்தானிலிருந்து வந்தவர். ஆனால் அவர் ஏழை முஸ்லிம் அல்ல!

இதே போல மே. வங்க முதல்வர் ஜோதிபாசு, வங்க தேசத்திலிருந்து வந்தவர். காங்கிரசு தலைவி சோனியா இத்தாலிக்காரர். இப்படிப் பலரைப் பட்டியல் போடலாம்.

பலதலைமுறைக்கு முன்னர் இந்தியாவில் குடியேறி, உழைத்து, பல்கிப் பெருகிய மக்களை விரட்டுவது எவ்வகையிலும் நியாயமானதல்ல. 1947-க்குப் பிறகு குடியுரிமை பெறாமல், சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை இனங்கண்டு, அவர்களை சம்பந்தப்பட்ட நாட்டுத் தூதரகத்தில் ஒப்படைப்பதுதான் இந்தியாவும், உலகநாடுகளும் ஏற்றுக் கொண்ட வழிமுறை. அவர்களை வதைப்பதும் இழிவுபடுத்துவதும் இந்திய சட்டத்துக்கே எதிரான காட்டுமிராண்டித்தனமான செயலெனில், இந்தியக் குடிமக்களான ஏழை முஸ்லிம்களை வதைக்கவும் இழிவுபடுத்தவும் விரட்டவும் இந்துவெறியர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? எனவேதான் இக்கொடுஞ்செயலை மும்பையிலுள்ள அனைத்து சமூகத்தினரும், மனித உரிமை அமைப்புகளும் கடுமையாக எதிர்க்கின்றன. முலாயம் சிங்கின் சமஜ்வாடி கட்சியினர் இந்துவெறி- இனவெறிபிடித்த தாக்கரே, ஜோஷியின் கொடும்பாவிகளை எரித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

மும்பையில் வங்க தேசத்தவர்களை வெளியேற்றுவது என்ற போர்வையில் முஸ்லிம்களைத் துரத்தும் இந்துவெறியர்கள், குஜராத் மாநிலத்தில் வெளிப்படையாகவே சிறுபான்மை முஸ்லிம்களுக்கும்



நரோடா நகரில் இந்துவெறியர்களால் இடித்துச் சிதைக்கப்பட்ட கிறித்துவ தேவாலயம்.

www.padippakam.com

கிறித்துவர்களுக்கும் எதிராக பயங்கரவாத வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுள் ளனர்.

மத்திய குஜராத் தில் ரந்திகாபூர் எனும் சிறுநகரை அடுத்துள்ள சஞ்ஜெலி கிராமத்தில் காந்தா, நந்தா என்ற இரு இந்துப் பெண்கள் அரிப், டினியோ எனும் இரு முஸ்லிம் இளைஞர்களைக் காத லித்து, வீட்டைவிட்டு வெளியேறி திரும ணம் செய்து கொண்டு, மணமக்கள் தலை மறைவாகி விட்டனர். இப்படி காதல் திரும ணங்கள் நடப்பது குஜராத்தில் புதிய விவ காரமல்ல.



இந்துவெறி பயங்கரவாதம்: ரந்திகா பூரில் இடித்துத் தள்ளப்பட்டு தீயிடப்பட்ட முஸ்லிம்களின் வீடுகள்.

''பம்பாய்'' திரைப்படம் போல, இந்து இளைஞர் முஸ்லிம் பெண்ணைக் காதலித்து திருமணம் செய்தால் பிரச்சினை இல்லை. ஆனால் இந்துப் பெண்கள் முஸ் லிம் இளைஞர்களைக் காதலித்து திரும ணம் செய்து கொண்டால் அது இந்துவெறி யர்களின் மனுதர்மப்படி குற்றம்! அன் மைக்காலமாக இத்தகைய 'குற்றங்கள்' பெருகும் போது, இந்துவெறியர்களால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடி யுமா, என்ன? மத்தியிலும் மாநிலத்திலும் இந்து வெறியர்களின் கையில் ஆட்சியதி காரம் உள்ள போது, அவர்கள் கைகட்டி நிற்கமுடியுமா, என்ன?

''இது சாதாரண விஷயமல்ல; நமது இனத்துக்கு ஏற்பட்டுள்ள இழிவு. மேலும், இந்து பெண்களை மணந்து முஸ்லிம் மக் கட் தொகையைப் பெருக்க பாகிஸ்தான் செய்யும் திட்டமிட்ட சதி. இதை ஒருக்கா லும் அனுமதிக்க முடியாது'' என்று வெறி யூட்டிய விசுவ இந்து பரிஷத் குண்டர்கள், ரந்திகாபூர் வட்டாரத்திலுள்ள முஸ்லிம்கள் மீது தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். கடந்த ஜூலை 20-ம் தேதியில் சஞ்ஜெலி கிராமத்தில் 500-க்கும் மேற்பட்ட முஸ்லிம் கள் அடித்து விரட்டப்பட்டு, அவர்களது வீடுகள் இடித்து நொறுக்கப்பட்டு, தீயிடப் பட்டன. உடமைகள் சூறையாடப்பட்டன. பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

இன்று இக் கிராமத்தில் ஒரு முஸ் லிம்கூட இல்லை. 70-வயதான மஜித் பாய் என்ற முதியவர் தனது கால்நடை கள் என்ன ஆயிற்றோ என்ற ஏக்கத்தில் மறுநாள் கிராமத்திற்கு தனியாக வந் தார். தான் பிறந்து வளர்ந்த மண்ணி லேயே அவர் இந்துவெறியர்களால் அடித்து நொறுக்கப்பட்டார். புகார் கொடுக்க போலீஸ் நிலையத்துக்குப் போன அவரை போலீசார் கொட்டடி யில் தள்ளினர். சோறு, தண்ணீர் கூட கொடுக்காமல் காதலனுடன் ஓடிப் போன இந்துப் பெண்கள் எங்கே? என்று கேட்டு 6 நாட்கள் வதைத்தனர்.

அவரைப் போலவே, 20க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் போலீசாரால் அடித்து இழுத் துவரப்பட்டு, கொட்டடியில் வதைக்கப்பட் டனர்.

பின்னர், இந்த விவகாரத்தில் மாவட்ட ஆட்சியர் தலையிட்டு கொட்டடி யில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடு தலை செய்யுமாறும், முஸ்லிம்கள் ஊருக் குத் திரும்பி வாழ்வதற்கு உரிய பாதுகாப்பு தருமாறும் போலீசுக்கு உத்திரவிட்டார். அதன்படி, ஜூலை 27-ஆம் நாளன்று சமூ கத்தின் பெரியவர்கள், பிரமுகர்கள் அடங் கிய 12 முஸ்லிம்கள் மட்டும் தமது கிராமத் துக்கு வந்து கொண்டிருந்தபோது, விசுவ இந்து பரிஷத் குண்டர்கள் சூழ்ந்து கொண்டு அவர்களைத் தாக்கி விரட்டினர். பாதுகாப்புக்கு வந்த 4 போலீசுக்காரர்கள் வேடிக்கை பார்த்ததைத் தவிர வேறொன் றும் செய்யவில்லை.

இந்து வெறியர்களின் இக்காட்டு மிராண்டித் தனத்தை அறிந்து, அக்கிராமத் துக்குச் சென்ற ''எக்ஸ்பிரஸ்'' நாளேட்டின் நிருபரையும், புகைப்படக்காரரையும் விசுவ இந்து பரிஷத் குண்டர்கள் சூழ்ந்து கொண்டு ''கெரோ'' செய்து அடித்து விரட் டினர். இதே போல, முஸ்லிம்களின் வீடு கள் தாக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட் டதை வீடியோ படம் எடுத்த ''குஜராத்தி டுடே'' நாளேட்டுக் குழுவினரும் இந்து வெறியர்களால் தாக்கப்பட்டனர். தப்பி யோடி வந்து புகார் கொடுத்த அவர்களிட மிருந்து வீடியோ படச்சுருளைப் பறிமுதல் செய்த போலீசு, அவர்களைக் கொட்டடி யில் அடைத்தது. இப்படங்களை வெளி யிட்டால் மாநிலத்தில் சட்டம்- ஒழுங்கு பாதிக்கும் என்று தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறது போலீசு. இன்னமும் பாதிக்கப் பட்ட முஸ்லிம்கள் தமது சொந்த கிராமத் துக்குத் திரும்ப முடிய வில்லை.

**தாங்கள் ஆளும் மாநிலங்களில் மதக் கலவரங்களோ, மதச் சிறுபான்மை யினர் மீதான தாக்குதலோ நடப்ப தில்லை என்று இந்து வெறியர்கள் பாசாங்கு செய்து வருவதை, மகாராஷ் டிராவிலும், குஜராத்திலும் நடந்து கொண்டிருக்கும் கலவரங்களும் அட்டூழியங்களுமே அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.**

சிறுபான்மை யினரான முஸ்லிம்க ளுக்கே இந்த கதி என் றால், அவர்களை விட சிறுபான்மையினரான கிறித்துவர்களின் கதியோ மிகவும் வேதனைக்குரியது.

மேற்கு குஜராத்தின் கேதா மாவட் டத்தில் கபத்வன்ஜ் எனும் சிறுநகரில் சாமு வேல் என்ற கிறித்துவ முதியவர் கடந்த ஜூலையில் மாண்டுபோனதும், அவரை அடக்கம் செய்ய சவப்பெட்டியுடன் இடு காட்டுக்குச் சென்ற கிறித்துவர்களை இந்து வெறியர்கள் விரட்டியடித்தனர். ஊருக்குப் பொதுவான இடுகாட்டை வாக்ரி எனும் மேல்சாதி இந்துக்கள் ஆக்கிரமித்துக் கொண்டு, மற்ற சாதி- மதத்தவரைப் புதைக்க அனுமதிக்க மாட்டோம் என்று எச்சரித்தனர். பின்னர், போலீசு பாதுகாப்பு டன் இந்து வெறியர்களின் எதிர்ப்பை மீறி, சாமுவேலின் சடலம் அதே இடுகாட்டில் புதைக்கப்பட்டது.

ஆனால், அடுத்த இரு நாட்களில் இந்து வெறியர்கள் சவக்குழியைத் தோண்டி, சவப்பெட்டியை மாதாகோயில ருகே வீதியில் கொண்டுவந்து போட்டனர். இந்த அட்டூழியத்தை எதிர்த்த கிறித்துவர் களை விசுவ இந்து பரிஷத் குண்டர்கள் மிருகத்தனமாகத் தாக்கினர். பின்னர், போலீசு வந்து அச்சவப்பெட்டியை மாதா கோயிலேயே வைத்திருந்து, பின்னர் பக் கத்து ஊரில் தாழ்த்தப்பட்டோர் இடுகாட் டில் புதைக்க ஏற்பாடு செய்தது. ஆனாலும், எந்தவொரு இந்துவெறிக் குண்டனும் கைது செய்யப்படவில்லை.

மங்கோர்லா சிறுநகரில் உள்ள கிறித் துவப் பள்ளியில், மாணவர்களுக்கு இலவ சமாக ''பைபிள்'' விநியோகிக்கப்பட்டதை எதிர்த்து கலாட்டா செய்த இந்து வெறியர் கள். மாணவர்களிடமிருந்து பைபி ளைப் பறித்து தீயிட்டுக் கொளுத்திய தோடு இன்று அப்பள்ளியையே மூடி விட்டனர். பைபிள் விநியோகிக்கப்பட் டதற்கு வருத்தம் தெரிவித்து, திரும்பப் பெற்றுக் கொள்வதாகப் பள்ளி நிர்வா கம் கூறிய போதிலும், இந்து வெறியர் கள் ஏற்கவில்லை. பள்ளி உள்ள நிலத்தி னைக் குத்தகைக்கு விட்டுள்ளவர் ஓர் இந்து என்பதால், அவரை மிரட்டி குத்த கையை ரத்து செய்வதாக வழக்குப் போடச் செய்தனர். நீதி மன்றமோ மாணவர்களின் எதிர்காலத்தைப் பற் றிக் கவலைப்படாமல், பள்ளியை மூடி

www.padippakam.com

நிலத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்கு மாறு இந்து வெறியர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது. அயோக்கியத்தனமான இந்தத் தீர்ப்பை எதிர்த்தும், பள்ளியை மீண்டும் திறக்கக் கோரியும் பெற்றோர்கள் போராடிய போதிலும் இந்து வெறியர்களின் அரசு அசைந்து கொடுக்கவில்லை.

• குஜராத்தில் இந்து சாதிவெறியர்களால் தீண்டத்தகாதவர்களாக அடக்கி ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்டோரும், பழங்குடியினரும் மதம் மாறி கிறித்துவ மதத்தில் கணிசமாக இணைந்துள்ளனர். இதைத் தடுக்க, "ஆதிவாசி மதமாற்ற எதிர்ப்புக் குழு"வை நிறுவியுள்ள இந்து வெறியர்கள், கிறித்துவர்களின் வழிபாட்டுக் கூட்டங்களில் புகுந்து கலாட்டா செய்வதையும் தாக்குவதையுமே தமது தொழிலாகக் கொண்டுள்ளனர். கடந்த மார்ச் மாதத்தில் பரோடாவில் நடந்த கிறித்தவர்களின் மாநாடு - வழிபாட்டு திருவிழாவை நடத்த விடாமல், கூட்டத்துக்கு வந்த மக்களை இந்து வெறியர்கள் அடித்து விரட்டியதோடு, மாநாட்டுப் பந்தலையும் பிய்த்து எறிந்தனர்.

— இவை மட்டுமின்றி அண்மையில் ராஜ்கோட்டிலுள்ள ஒரு கிறித்துவர் உணவு விடுதியை இந்து வெறியர்கள் தாக்கி இடித்துத் தள்ளியுள்ளனர். நரோடாவிலுள்ள ஒரு கிறித்துவ தேவாலயம் இந்து வெறியர்களால் சிதைக்கப்பட்டுள்ளது.

குஜராத்தில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும், கிறித்துவர்களுக்கும் எதிராக அட்டூழியங்கள் பெருகிவிட்டதாக வேறு வழியின்றி இந்து வெறியர்களின் மைய அரசே ஒப்புக் கொள்கிறது. 1998-ஆம் ஆண்டில் இதுவரை 4 பெரும் அட்டூழியங்கள் நடந்துள்ளதாக சமூக நலத்துறை ராஜாங்க அமைச்சரான மேனகா காந்தி ஒப்புதல் அளித்துள்ளார். உண்மை அறியும் குழுவை குஜராத்துக்கு அனுப்பியுள்ள காங்கிரசு கட்சியினரோ, 21 பெரிய தாக்குதல் சம்பவங்களும், 48 சிறிய அட்டூழியங்களும் நடந்துள்ளதாகப் பட்டியல் போடுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக, குஜராத் மாநில போலீசு தலைமை இயக்குனரே விசுவ இந்து பரிஷத், பஜ்ரங் தளம் ஆகிய அமைப்புகள் சட்டத்தை தமது கையில் எடுத்துக் கொண்டு கும்பல் அட்டூழியங்களில் ஈடுபடுவதாகப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

தாங்கள் ஆளும் மாநிலங்களில் மதக் கலவரங்கள் நடப்பதில்லை என்று இந்து வெறியர்கள் பாசாங்கு செய்து வருவதை, மகாராஷ்டிராவிலும், குஜராத்திலும் நடந்து கொண்டிருக்கும் கலவரங்களும் அட்டூழியங்களுமே அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. இந்து ராஷ்டிரத்தில் தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினருக்கும், சிறுபான்மை முஸ்லிம்கள் - கிறித்துவர்களுக்கும் உயிருக்கு உத்திரவாதமோ வாழ்வதற்கு உரிமையோ இல்லை என்பதையே இந்து வெறியர்கள் தமது அதிக்கிரமங்கள் மூலம் நிரூபித்துக் காட்டி வருகிறார்கள். இனியும் இந்து வெறி ஓநாய்களின் பசப்பல்களை நம்பி உழைக்கும் மக்கள் ஏமாற முடியாது. மும்பையிலும் குஜராத்திலும் தொடரும் அட்டூழியங்கள் நாடு முழுவதும் பரவும் முன்னே, இந்து வெறியர்களை அம்பலப்படுத்தி முறியடிக்காமல், உழைக்கும் மக்களும் சிறுபான்மையினரும் தமது வாழ்வையும் உரிமையையும் தக்க வைத்துக் கொள்ளவும் முடியாது.

• குமார்

# வாசகர் கடிதம்

★ பாரதீய ஜனதா அரசின் அணுகுண்டு வெடிப்பு பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. வேறு எந்த பத்திரிகையும் இவ்வளவு தெளிவாக பாரதீய ஜனதாவை அம்பலப்படுத்தவில்லை. தேசிய நீரோட்டத்தில் கலந்த கருணாநிதியின் சாதனையை மிகச் சரியாகத் தோலுரித்துக் காட்டியது சிறப்பானது. கந்துவட்டி மோசடிக் கும்பலை புரட்சிகர அமைப்புகளால் மட்டுமே முறியடிக்க முடியும் என்பதை தர்மபுரி போராட்டச் செய்தி நிரூபித்துக் காட்டியது.

மற்றபடி, இடதுசாரி இயக்கத்தினர் மட்டுமே படிக்கக் கூடிய இதழாக பு.ஜ. உள்ளது. கட்டுரைகள் மிக நீளமாக உள்ளன. இதழில் எழுத்துக்களைச் சற்று பெரிதாக்கி, அட்டைப்படம் மற்றும் வடிவத்தில் தரம் கூட்டப்பட வேண்டும். தமிழகத்தின் பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகள் பற்றி இதழில் கூடுதலாக பக்கங்களை ஒதுக்க வேண்டும்.

— வாசகர்கள்,
சாத்தூர்

★ மசூதி என்பதும் கோயில் என்பதும், மக்கள் கூடும் ஒரு கட்டிடம்தான். மக்களின் மூட நம்பிக்கைகளை, அறியாமையை மூலதனமாக்கி இலாபமடைவதே அரசியல் வாதிகளின் வழக்கமாகிவிட்டது. இவ்விஷயம் குறித்து அழுத்தமான சுருக்கமான விமர்சனமே போதுமானது. வளவளவென நீண்ட விளக்கம் தேவையில்லை.

— வி.எஸ்.பி. சாமி,
சூரத்

★ தில்லியின் அழகுக்கு தொழிலாளர்களின் வாழ்வு பலியாக்கப்படுவதைப் பற்றிய கட்டுரை எதார்த்த நிலையை படம் பிடித்துக் காட்டியது. அணுகுண்டு வெடிப்பு பற்றிய கட்டுரையில் வறுமை, கல்வியறிவு அற்றோர், வேலையற்றோர் பற்றிய புள்ளி விபரங்களுடன் ஒப்பிட்டு உணர்வு பூர்வமாக எழுதியிருக்கலாம். "பொடா" சட்டம் பற்றிய கட்டுரையில் கருணாநிதியின் துரோகத்தையும் எதிர்க் கட்சிகளின் கையாலாகாத்தனத்தையும் விளக்கியிருக்கலாம். ரசியாவில் நடந்த வேலை நிறுத்தம் பற்றிய செய்தியில், அங்குள்ள புரட்சிகர இயக்கங்கள் பற்றி விளக்கியிருக்க வேண்டும். இதுதான் இன்றைய இந்தியா எதார்த்த நிலையை எடுப்பாகப் படம் பிடித்துக் காட்டியது.

மற்றபடி, இதழில் எழுத்துக்கள் சிறியதாக இருப்பதால் படிக்கும் போது சோர்வு ஏற்படுத்துகிறது. கட்டுரைகள் இன்னும் எளிமையாக வர வேண்டும். தமிழக, உள்ளூர் செய்திகளை இதழில் அதிகப்படுத்த வேண்டும். வாசகர் கடிதம், கேள்வி - பதில் பகுதி தொடர்ந்து வெளிவர வேண்டும். ஜனரஞ்சகப் பகுதிகள் கூடுதலாக இடம் பெற வேண்டும்.

— வாசகர் வட்டம்,
திருச்சி.

★ பத்திரிகைகளுக்கே உரிய போலித்தனம் இல்லாத உங்கள் சஞ்சிகையை அண்மையில் படித்தேன். உண்மையான குடியரசு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும், குடிமக்களின் அடிப்படை உரிமைகள் என்ன, ஆட்சியாளர்களின் பணி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்' போன்ற விடையங்களை இரு தரப்பினருக்குமே உரைக்கும்படி உணர்த்தும் உங்கள் பணி சிறக்க மனமுவந்து வாழ்த்துகிறேன். உண்மைகளை உரைக்கும் ஒரு வானொலி ஒலிபரப்புக்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். தமிழ் சிற்றலை வானொலி வாயிலாக புதிய ஜனநாயகம் அமைக்க அன்புடன் அழைக்கிறேன். இம்முயற்சிக்குத் தோள் கொடுக்கவும் தயாராக உள்ளேன்.

— ஜவஹர் அலி,
ஹாங்காங் (சீனா).

திருச்சி, சாத்தூர் வாசகர்கள் கோரியபடி எழுத்தின் அளவை இவ்விதழில் பெரிதாக்கியுள்ளோம். கட்டுரைகளை சுருக்கமாகவும் எளிமையாகவும் வெளியிட கூடுதல் முயற்சிகளை மேற்கொள்கிறோம். தமிழக செய்திகளை கூடுதலாக வெளியிட முக்கியத்துவம் அளிக்கிறோம். வாசகத் தோழர்களின் கருத்துக்கள் - விமர்சனங்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு இதழை மேலும் செழுமைப்படுத்த உறுதியளிக்கிறோம்.

— ஆசிரியர் குழு


படிப்பகம்

www.padippakam.com

சென்னை, கோவையைத் தொடர்ந்து இப்போது ஓசூர், இராணிப்பேட்டையிலும் கணக்கற்ற சிறு - நடுத்தர தொழில் நிறுவனங்கள் அடுத்தடுத்து மூடப்பட்டு வருகின்றன. போதாக்குறைக்கு மின் கட்டணத்தை அநியாயமாக உயர்த்தி, இம்மூடுவிழாக்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது, மு.க. அரசு. இதுவரை கண்டிராத விண்ணை முட்டும் விலைவாசி ஏற்றத்தாலும், வேலையின்மையாலும் குடிக்கக் கஞ்சியின்றி, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வாழ்விழந்து, தணலில் இட்ட புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இலட்சணத்தில், அனைத்திந்திய அளவில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் மூன்றாவது இடத்துக்கு முன்னேறி விட்டதாகச் 'சாதனைப் பட்டியல்' போடுகிறது. தி.மு.க. அரசு. இந்த வெறி ஆட்சியாளர்களோ, நாட்டை அணு ஆயுத வல்லரசாக்கிய 'பெருமை'யில் பூரித்துப் போகிறார்கள்.

# "மாமா... சீக்கிரமா என்னைக் கூட்டிட்டுப் போ!"



ஓசூர்,
24.8.'98

அன்புள்ள மாமனுக்கு

மருமவன் முத்து எழுதிக் கொண்டது. என்னவென்றால் அப்பா வேலை செஞ்ச கம்பெனியை மூடிட்டாங்க. மூனு மாசமா இன்னும் தொறக்கல. அப்பாவுக்கு வேற எங்கேயும் வேல கெடைக்கல.

பக்கத்து வீட்டு ராமு மாமா வேலை செஞ்ச எஸ்போர்ட் கம்பேனியையும் மூடிட்டாங்க. அந்த மாமா சங்கத்துல சேர்ந்து போராட்டம் செஞ்சப்ப, போலீசுக்காரன் அடிச்சதுல மண்டை ஒடஞ்சு கெடக்குது. என்னோட படிக்குற தமிழ் மணியோட அப்பா வேலை செஞ்ச பேட்டா செருப்புக் கம்பெனியும் மூடிட்டாங்க. அதனால அவன் இந்த வருஷம் இஸ்கூல் வராம நின்னுட்டான். எஸ்டேட்டுல 10 கம்பெனிக்கு மேல மூடிட்டாங்கன்னு அப்பா சொல்லுது.

அப்பா ஒரு வாரமா லேத்து பட்டறை வேலைக்குப் போகுது. அங்கேயும் சரியா கூலி தரலைன்னு அப்பா வருத்தமா இருக்கு. சைக்கிளை வித்துப்புட்டோம். அப்பா நடந்துதான் வேலைக்குப் போகுது. குடக்கூலி கொடுக்கலேன்னு வீட்டுக்காரன் தெனமும் அசிங்கமா திட்டுறான். அடகு வெக்க ஒரு சொம்பு கூட வீட்டுல இல்லை. ஒரு வேளதான் நாங்க கஞ்சி குடிக்கிறோம். பக்கத்து வீட்டு ஆயாகிட்ட ஒரு வாட்டி நானும் பாப்பாவும் வடிச்ச கஞ்சி வாங்கிக் குடிச்சோம். அப்பா வாங்கக் கூடாதுன்னு திட்டுச்சு. பாப்பா பசி தாங்காம அழுவுது. எனக்குப் பசி கொலை சுருட்டுது.

பாப்பா இந்த வருஷம் இஸ்கூல் போக வேண்டாம்னு அம்மா நிறுத்திட்டாங்க. எனக்கு இஸ்கூலுக்கு போட்டுக்கிட்டு போக ஒரு யூனிபாரம் சட்டைதான் இருக்கு. அதுவும் கிழிஞ்சு போச்சு. பசங்க என்னை கேலி செய்யுறாங்க. எனக்கு இன்னும் நோட்டுப் புத்தகம் வாங்கல. அதனால இஸ்கூல்ல வெளிய முட்டி போட வெக்குறாங்க. எனக்கு அழுகையா வருது. எனக்கு இஸ்கூல் போகவே புடிக்கல.

பொங்கலுக்கு மெட்ராஸ்லேருந்து நீ இங்க வந்தப்ப, ஓட்டல்ல வேலை செய்யிறன்னு சொன்னியே. என்னையும் அங்க வேலைக்கு சேர்த்து விடுறயா? நான் அங்க வரணுமுன்னா டிக்கெட்டுக்கு காசு இல்ல. அதனால சீக்கிரமா வந்து என்னைய கூட்டிட்டுப் போயி ஏதாவது வேலையில சேர்த்து வுடணும்னு சொல்லுறேன்.

இப்படிக்கு,
முத்து.


படிப்பகம்

www.padippakam.com



# கட்டுப்பாடற்றக் கொள்ளைக்கு நீதிமன்ற அங்கீகாரம்

சுயநிதி கலை - அறிவியல் கல்லூரிகளை வரன்முறைப்படுத்தப் போவதாகக் கூறி, தமிழக அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையை ஏற்க மறுத்து, சுயநிதி கலை அறிவியல் கல்லூரி நிர்வாகிகள் நீதிமன்றம் சென்றனர். மாணவர் சேர்க்கையை நிறுத்தி வைத்து, ஐம்பதாயிரம் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுவர் எனக் கல்லூரி நிர்வாகிகள் 'கண்ணீர்' வடித்தனர்.

தமது பகற்கொள்ளையில் அரசின் தலையீடு வெறும் எழுத்து வடிவில் கூட இருக்கக் கூடாது என சுயநிதிக் கல்லூரி நிர்வாகிகள் உயர்நீதி மன்றம் சென்று, பணத்தை வாரியிறைத்து, அரசாணை செல்லாது எனத் தீர்ப்பும் பெற்றுவிட்டனர்.

கடந்த ஆண்டே சுயநிதிக் கல்லூரிகளின் கொள்ளையைக் கட்டுப்படுத்த அரசு முயன்றபோது, நீதிமன்றம் சென்று கல்லூரி நிர்வாகிகள் தடையுத்தரவு பெற்றனர். இதன்பின், தமிழக அரசு முன்னாள் மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆளுடையபிள்ளை தலைமையில் குழு ஒன்று அமைத்து, இதுபற்றி பரிசீலித்தது. குழு பரிந்துரையின்படி, தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்தில் திருத்தம் செய்து, அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த அரசாணையின்படி, சுயநிதி கலை - அறிவியல் கல்லூரிகளின் 50 சதவீத இடங்களை அரசு நிரப்பும். அந்த மாணவர்களுக்கு குறைந்த கட்டணமும், மீதி 50% இடங்களை நிர்வாகம் நிரப்ப அதற் [illegible] ன கட்டணமாக அதிக பட்சமாக ஒ[illegible] தொகையும் நிர்ணயித்தது. பல்கலை[illegible] கழக மானியக் குழு வரையறுத்த தகுதியிலும், சம்பளத்திலும் ஆசிரியர்களை நியமிக்கவும், வசூலிக்கும் பணத்தை கணக்குக் காட்டவும் அரசாணை முறைப்படுத்துகிறது. இவற்றைத்தான் நிர்வாகிகள் எதிர்த்தனர்.

சுயநிதி கலை - அறிவியல் கல்லூரியில், வணிகவியல் (பி.காம்.) பட்டப் படிப்பில் சேர, தமிழக அரசின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 50 சதவீத மாணவர்கள்; ஆண்டு கல்விக் கட்டணம் ரூ. 5,000 கட்ட வேண்டும்; அரசு கல்லூரிகளின் கட்டணத்தை ஒப்பிடும்பொழுது இதுவே அதிகம்தான்! மீதி 50 சதவீத இடங்களை, தலா இருபதாயிரம் ரூபாய்க்கு விற்றுக் கொள்ள கல்லூரி நிர்வாகத்திற்கு அரசு அனுமதித்தது. இது போல், கணனி விஞ்ஞானத்தை (கம்ப்யூட்டர் சயன்ஸ்) எடுத்துக் கொண்டால், தமிழக அரசின் மூலம் சேரும் மாணவர் ரூ. 6,000-ம், நிர்வாகம் மூலம் சேரும் மாணவர் ரூ. 24,000-ம் கட்டணமாகக் கட்ட வேண்டும்.

இப்படித்தான், சுயநிதி கலை - அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்படும் ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் இரண்டு விதமாகக் கட்டணங்களை நிர்ணயித்து, அரசாணை மூலம் வரன்முறைப்படுத்த எண்ணியது, தமிழக அரசு.

ஆனால், கல்லூரி நிர்வாகங்களோ, 'இதன் முன் நாங்கள் வணிகவியல் பாடப் பிரிவில் சேரும் எல்லா மாணவர்களிடமும் கட்டணமாக ரூ. 5,000/- வசூலித்தோம்; இப்பொழுது நிர்வாகம் மூலம் சேரும் மாணவர்களிடமும் ரூ. 20,000/- கட்டணம் செலுத்தச் சொல்லுவது அதிகம்; அதுபோல்தான், கணனி விஞ்ஞானத்திற்கு முன்பு ரூ. 15,000/- கட்டணம் வசூலித்தோம்; இப்பொழுது 50 சதவீத மாணவர்களுக்கு ரூ. 24,000/- கட்டணமாக நிர்ணயம் செய்திருப்பதும் கூடுதலானதுதான். இதன் காரணமாக, இப்பாடப் பிரிவுகளில் மாணவர்கள் சேர மாட்டார்கள்; ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதுகூடப் பிரச்சினையாகிவிடும் எனப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுத்தன; அரசாணையை எதிர்த்து வழக்கும் தொடுத்தன.


நிர்வாகங்களைப் பொருத்தவரை கட்டணம் அதிகம் என்பது பிரச்சினையில்லை; தங்களது வசூல் வேட்டையில் அரசு தலையிடுவதுதான் பிரச்சினை.

வணிகவியல் பாடப் பிரிவில் 40 மாணவர்கள் பயிலுவதாக வைத்துக் கொள்வோம்; அரசாணைக்கு முன்பு, இந்த 40 மாணவர்களிடம் இருந்து ஆண்டு கல்விக் கட்டணமாக (40 X 5,000) இரண்டு இலட்சத்தை நிர்வாகம் வசூலிக்கும்; அரசாணை நடைமுறைக்கு வந்திருந்தால், இரண்டு பிரிவு மாணவர்களிடம் இருந்தும், நிர்வாகம் கல்விக் கட்டணமாக ஐந்து இலட்ச ரூபாய் கறந்திருக்கும்.

உண்மையிலேயே நிர்வாகங்கள் அரசு நிர்ணயித்த கட்டணம் அதிகம் என எண்ணியிருந்தால், நிர்வாகம் மூலம் சேரும் மாணவர்களிடம் கல்விக் கட்டணத்தைக் குறைத்து வாங்கியிருக்க முடியும். ஆனால், அவை கட்டணத்தைக் குறைத்து வசூலிக்கத் தயாரில்லை. மாறாக, அரசாணையைக் குழி தோண்டி புதைப்பதில்தான் தீவிரம் காட்டின.

சுயநிதிக் கல்லூரிகள் அனைத்துமே, கணனி விஞ்ஞானம், "மைக்ரோ பயாலஜி", "பயோ கெமிஸ்ட்ரி" போன்ற சந்தையில் போட்டியுள்ள, விற்பனையாகும் பாடப் பிரிவுகளை மட்டுமே நடத்துகின்றன. எனவே, அரசு நிர்ணயித்துள்ள கூடுதல் கட்டணத்தால் இவர்களின் பணப் பெட்டி நிரம்பி வழிவதற்குதான் வாய்ப்பிருக்கிறதேயன்றி, குறைந்து போவதற்கே வாய்ப்பில்லை; மேலும், ஒவ்வொரு வகுப்பிலும் இவர்கள் ஆட்டு மந்தைகள் போல் மாணவர்களைச் சேர்ப்பதையும், அவர்களிடமிருந்து வேறு பல வழிகளில் கட்டணங்கள் வசூலிப்பதையும் இந்த அரசாணைத் தடுக்கவில்லை. எனவே, இந்த அரசாணை நடைமுறைக்கு வந்திருந்தாலும் கூட, சுயநிதிக் கல்லூரி நிர்வாகங்கள் எள்ளளவு நட்டமடைவதற்கும் வாய்ப்பில்லை. ஆனாலும், தங்களது கொள்ளையை அரசு எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது என எதிர்த்து, நீதிமன்றத்தின் மூலம் தமிழக அரசின் அரசா

அரசாணையை எதிர்த்து சுயநிதிக் கல்லூரிகள் கூட்டமைப்பு வெளியிட்ட விளம்பரம்.


TUCMA

பொதுமக்களுக்கு சுயநிதிக் கல்லூரி நிர்வாகிகளின் பணிவான வேண்டுகோள்

[illegible]



படிப்பகம்

www.padippakam.com

னையைத் தடுத்து விட்டனர்.

பல சுயநிதிக் கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் எவ்வித் தொழிற்சங்க உரிமைகளும் இன்றி நடத்தப்படுகின்றனர். குறைந்த சம்பளம். ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி என எந்த அரசு விதியும் கடைப்பிடிப்பதில்லை. தகுதியானவர்களையும் ஆசிரியராக நியமிப்பதில்லை. இதுபற்றி, அதே நிர்வாகிகள், 'எல்லா ஆசிரியருக்கும் அரசு நிர்ணயிக்கும் சம்பளம், சலுகை தர முடியாது. ஆசிரியரின் வேலையைப் பொறுத்தே சம்பளம் தருவோம்' என்கின்றனர். இதில் அரசு தலையிடக் கூடாது என்கின்றனர். தரம் குறைந்து விடும் என்கின்றனர். தகுதியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என அரசு கூறுவது எப்படி கல்வித் தரத்தைக் குறைக்கும் எனத் தெரியவில்லை.

இப்படி, புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில், கல்வியை தனியார் கொள்ளையிட அனுமதித்துள்ள அரசு, மறுபுறம் கட்டுப்படுத்துவது என நாடகமாடுகிறது.

ஏற்கனவே, பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகளுக்கான சுயநிதிக் கல்லூரிகளில் 50% இடங்களை அரசு நிரப்பும். அதற்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்த கட்டணம் செலுத்தினால் போதும். மீதி 50% இடங்களை நிர்வாகம் விற்கும். இதில் அரசின் கட்டுப்பாட்டை எந்தவொரு கல்லூரியும் மதிப்பதில்லை.

அரசு நிரப்பும் இடங்களில் சேரும் மாணவர்களிடமும் அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச கட்டணத்திற்கும் கூடுதலாகவே வசூலிக்கின்றனர். இப்படி வசூலித்ததால் கல்லூரியில் சேரவே முடியாமற் போன மாணவர்களின் அவலம் பற்றிய செய்திகள் கடந்த ஆண்டுகளில் பத்திரிக்கைகளில் வந்தன.

உச்சநீதி மன்றத்தின் உத்தரவை மீறிய எந்தவொரு பொறியியல், மருத்துவக் கல்லூரியின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுமில்லை. தமிழக அரசின் அரசாணை நடைமுறைக்கு வந்திருந்தாலும், அதற்கும் இந்தக் கதிதான் ஏற்பட்டிருக்கும்.

கடந்த காலங்களில் பல தொழில் நுட்பக் கல்லூரிகளில் எந்த அடிப்படை வசதியுமில்லை என அனுமதி ரத்து செய்யப்பட்டன. அப்படி ரத்து செய்ததில் தம்பி துரையின் கல்லூரியும் ஒன்று. அதே தம்பிதுரை (இன்றைய மத்திய சட்ட அமைச்சர்) மேலும், புதிதாக இரு பொறியியற் கல்லூரிகளைத் தொடங்கி நடத்திக் கொள்ளையடிக்க முடிகிறது.

''மக்களின் தேவையை அரசினால் மட்டும் நிறைவேற்ற முடியாது. அதற்கு சுயநிதிக் கல்லூரிகளின் சேவையும் தேவை. கல்வி என்பது இலவசம் என்ற நிலை மறைந்து, கட்டணமாகச் செலுத்திப் படிக்கலாம் என்ற சூழ்நிலை வந்துள்ளது'' எனக் கல்வி அமைச்சர் அன்பழகன் கூறுகிறார். அரசின் இந்த புதிய கல்விக் கொள்கையால் தான் சுயநிதிக் கல்லூரி நிர்வாகிகள் கொட்டமடிக்கின்றனர்.

யார் இந்த நிர்வாகிகள்? நேற்று வரை கள்ளச் சாராயம் காய்ச்சி விற்று ஆயிரக்கணக்கான தாய்மார்களின் தாலியறுத்த சாராய உடையார், மாவீரன் ஜேப்பியார் போன்ற சமூக விரோதிகள்; ஓட்டுப் பொறுக்கி, மக்கள் வரிப்பணத்தில் கோடி கோடியாகக் கொள்ளை அடித்து ஊதாரி - உல்லாச - வக்கிர வாழ்க்கை வாழும் முன்னாள், இன்னாள், 'மாண்புமிகு' மக்கள் பிரதிநிதிகளான ஜெயமோகன், தண்டாயுதபாணி, பொன்னுச்சாமி, கே.வி. தங்கபாலு, முனிரத்தினம், ஜெகத்ரட்சகன், தம்பிதுரை போன்றோர். கள்ள நோட்டுப் பேர்வழி பங்காரு அடிகள், திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளாக தமிழகத்தையே மொட்டையடித்த திவாகரன் போன்றோர். இன்னும் கருப்பு பண முதலைகளும், மக்கள் விரோத அதிகார வர்க்கங்களுமாவர்.

இவர்கள்தான் அரசின் ஆணையால் ஏழைகளுக்குக் கல்வி சென்றடையாமற் போய்விடும் என அறிக்கை விடுகிறார்கள். பேப்பரில் கூட எந்தக் கட்டுப்பாடும் இருக்கக் கூடாது எனக் கல்வியிலும் தாராளமயத்தைக் கோரும் இவர்கள், கோடி கோடியாகக் கொள்ளையடிப்பதற்காகவே கல்லூரி நடத்துகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது.

மக்களை அடக்கி ஒடுக்கும் போலீசு, இராணுவத்திற்குச் செலவிடுவதைக் குறைத்து, கல்விக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கினாலே, அரசே எல்லா வசதிகளும் நிறைந்த தரமான கல்வியைத் தர முடியும். இதைச் செய்யாமல், சுயநிதிக் கல்லூரி நிர்வாகங்களைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வருவதால் எந்தப் பயனுமில்லை.

• முத்து

## இந்து வெறியர்களின் ஏவல் நாய்களாக விழுப்புரம் போலீசு

இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகளை எதிர்த்து மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை வீச்சுடன் நடத்தி வருகின்றன. இதையொட்டி விழுப்புரம் நகரிலும் பெரிய அளவில் சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்யப்பட்டு, மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது. இந்நிலையில் இந்து முன்னணியின் மாநில அமைப்பாளரான இராம. கோபாலன், தனது 70-ஆவது பிறந்த நாள் விழாவிற்கு விழுப்புரத்துக்கு வந்து சென்றார். அதைத் தொடர்ந்து, கடந்த ஜூலை 6-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை இரு சுவர்களைத் தவிர, மற்ற முக்கியமான இடங்களிலுள்ள சுவரெழுத்துக்கள் அனைத்தையும் விழுப்புரம் போலீசார் அழித்து வெள்ளையடித்துள்ளனர். இராம. கோபாலனின் உத்திரவுக்கு அடிபணிந்து, சுவரெழுத்துக்களைக் கண்டு பீதியடைந்து, சுண்ணாம்புச் சட்டியுடன் திரிந்த போலீசாரின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தி, நகரெங்கும் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகளுக்கு எதிராகப் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

— ம.க.இ.க. - பு.மா.இ.மு.
- வி.வி.மு., தமிழ்நாடு.




படிப்பகம்

www.padippakam.com

## புதிய மாநிலங்கள் உருவாக்கம்:

# ஜனரஞ்சகத் திட்டமா? நயவஞ்சக மோசடியா?

உத்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து உத்தராஞ்சல், பீகாரிலிருந்து வனாஞ்சல், மத்தியப் பிரதேச மாநிலத்தைப் பிரித்து சட்டீஸ்கர் என மூன்று புதிய மாநிலங்களை உருவாக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து விட்டது. இனி ஜனாதிபதி ஒப்புதல் பெற்று, பிறகு சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்பி சட்டமன்ற ஒப்புதல் பெறப்பட்ட பின், புதிய மாநிலமாக செயல்படத் தொடங்கும்.

இவற்றுடன் தில்லி, மற்றும் பாண்டிச்சேரியையும் முழு மாநிலமாக அங்கீகரிக்கத் திட்டமிட்டது பா.ஜ.க. அரசு. தில்லியை மாநிலமாக்குவது என்பதுதான் பா.ஜ.க.வின் நோக்கம். ஆனால் மாநில எல்லைகள் வரையறுப்பது உட்பட சில பிரச்சினைகளாலும், ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள தேர்தலை ஒட்டியும் பா.ஜ.க. கட்சியிலேயே இதற்கு எதிர்ப்பு வரவே தில்லியை முழு உரிமை பெற்ற மாநிலமாக்காமல் கைவிட்டது. எனவே, பாண்டிச்சேரி மாநிலமாக்குவதையும் கிடப்பில் போட்டு விட்டது.

மற்ற மூன்று மாநிலங்கள் உருவாவதிலும் பிரச்சினை எழுந்துள்ளது. குறிப்பாக உத்தராஞ்சல் மாநிலம் உருவாக்குவதை ஒட்டி கூட்டணியிலுள்ள அகாலிதளம் கட்சி வெளியேறுவதாக மிரட்டுமளவு பிரச்சினை எழுந்துள்ளது. இப்படி உடனடி அபாயம் இல்லை எனினும் வனாஞ்சல், சட்டீஸ்கர் மாநிலங்கள் ஏற்படுத்துவதிலும் சிக்கல் இல்லாமல் இல்லை.

**உத்தராஞ்சல்:** உத்திரப்பிரதேச மாநிலத்தின் வடக்கு, வடமேற்கிலுள்ள குமாவும், கார்வால் மலைப் பகுதிகளின் 12 மாவட்டங்களைக் கொண்டு உத்திராஞ்சல் மாநிலம் அமைக்கத் திட்டம். இதில் உத்தம்சிங் நகர் என்று 1995-இல் மாயாவதி அரசால் உருவாக்கப்பட்ட புதிய மாவட்டத்தைச் சேர்ப்பது பற்றிதான் பிரச்சினை.

இந்த உத்தம்சிங் நகர் மாவட்டம், பழைய நைனிடால் மாவட்டத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்டது. இது மலையடிவாரத்திலுள்ள பகுதி. இந்த உத்தராஞ்சல் பகுதியின் வரி வசூல் ரூ. 180 கோடியில், உத்தம்சிங் நகர் மாவட்டத்தில் மட்டும் ரூ. 85 கோடி வரி வசூலிக்கப்படுகிறது. தவிர, மலை மாவட்டங்களில் நில உச்சவரம்பு 1.8 ஏக்கரிலிருந்து 4 ஏக்கர் வரைதான். இப்போதுள்ள உத்தம்சிங் நகர் மாவட்ட நில உச்சவரம்பு 18 ஏக்கர் வரை இருக்கலாம். உத்தம்சிங் நகர் உத்தராஞ்சல் மாநிலத்தில் சேர்ந்தால், சட்டப்படி நிலம் பறி போய் விடும் எனப் பணக்கார விவசாயிகள் பயப்படுகின்றனர். இவர்கள் எல்லோரும் பெரும்பாலும் சீக்கியர்களும், சிறிதளவு வங்காளிகளும் தான்.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் போது இன்றுள்ள உத்தம்சிங் நகர் அடர்ந்த காடாக, கொடிய விலங்குகளின் வாழ்விடமாயிருந்தது. அங்கு கொடிய கொள்ளை நோய்கள் தோன்றி மக்கள் மடிந்து வந்தனர். இதை வளமிக்க விளைநிலமாக்க, அன்றைய உ.பி. முதல்வர் பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக வந்த சீக்கியர்களையும் வங்காளிகளையும் இங்கு குடியமர்த்தி, நிலமும் கொடுத்தார்.


அரசின் ஆதரவு, உதவியுடன் இயற்கையை எதிர்த்துப் போராடி இப்பகுதியை உ.பி.யின் தானியக் களஞ்சியமாக்கிய இவர்கள், அரசு நிலத்தோடு மட்டுமின்றி பூர்வகுடிகளான ஆதிவாசிகள் நிலங்களையும் மோசடி மூலம் அபகரித்தனர். 18 ஏக்கர் என நில உச்சவரம்பு இருக்கையிலேயே, பல நூறு ஏக்கர் நிலங்களை ஒரு சிலர் ஆக்கிரமித்தனர். ஆதிவாசிகள் இருந்ததையும் இழந்து பஞ்சைப் பராரிகளாயினர்.

இன்றைய பஞ்சாப் முதல்வரிலிருந்து எல்லா ஓட்டுக் கட்சித் தலைவர்கள், அதிகாரிகள், சினிமாக்காரர்கள் என ஓர் ஓட்டுண்ணிக் கூட்டம் பலநூறு ஏக்கர் நிலங்களுக்கு உரிமை பெற்றுள்ளனர். இவர்கள் விவசாயத்தோடிணைந்து 10 சர்க்கரை ஆலைகள், 400 அரிசி மில்கள், எண்ணற்ற சிறு தொழில்கள் எனத் தொழிலும் அப்பகுதியில் முதலீடு செய்துள்ளனர்.

அரிசி மில்கள், சர்க்கரை ஆலைகளுக்கான மூலப் பொருட்கள் பிற உ.பி. மாவட்டங்களிலிருந்து வரவேண்டும். உத்தம்சிங் நகர் புதிய மாநிலத்தில் சேர்ந்தால், மூலப் பொருட்களுக்கு கூடுதல் வரி கட்ட நேரிடும் என்பதால், இப்புதுப் பணக்கார கும்பல் உ.பி.யிலேயே இருப்போம் எனப் போராடுகின்றனர். பஞ்சாப் முதல்வரிலிருந்து சிபிஎம் செயலர் ஹரிகிஷன் சுர்ஜித் சிங் வரை அனைவரும் இதை வலியுறுத்துகின்றனர்.

மற்ற 11 மாவட்டங்களில் விவசாயமுமில்லை, தொழில்துறை முற்றிலுமில்லை. உத்தம்சிங் நகர் மாவட்டம் உத்தராஞ்சல் மாநிலத்தில் இல்லை எனில் உணவுக்கு கூட வெளி மாநிலத்திடம் கையேந்த வேண்டும் என்பதுதான் நிலைமை. எனவே இந்த 11 மாவட்ட மக்கள் உத்தம்சிங் நகர் உத்தராஞ்சலில் இருக்க வேண்டும் எனப் போராடுகின்றனர்.

**உருவாகவுள்ள ஜார்கண்ட் மாநிலத்தில், ஜார்கண்ட் ஆதிவாசி மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுமா?**



இந்த உத்தராஞ்சல் மாநிலப் பிரிவுக்கு வித்திட்டதே பாரதீய ஜனதா கட்சிதான். இங்கு பெரும்பகுதி மக்கள் பார்ப்பனர்களும் பிற மேல்சாதியினரும் தான். கடந்த தேர்தலில் எல்லா எம்.பி. தொகுதிகளையும் பா.ஜ.க. மட்டுமே வென்றது.

1994-இல் முலயாம் சிங் முதல்வராயிருந்த போது மண்டல் கமிசன் பரிந்துரைப்படி பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இட ஒதுக்கீடு தர சட்டமியற்றினார். உத்தராஞ்சல் பகுதியிலோ 3% பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டோர். 80% பேர் பார்ப்பனர்களும்



படிப்பகம்

www.padippakam.com

பிற மேல்சாதியினரும். எனவே பா.ஜ.க. மேல் சாதி வெறியைத் தூண்டி, தனிமாநில கோரிக்கைக் கலவரத்தில் இறங்கியது.

இன்று உத்தம்சிங் நகர் மாவட்டப் பணக்கார விவசாயிகளும் ஆலை முதலாளிகளும் தமது சுரண்டலும் வர்க்க நலனும் பாதிப்பதால், உத்தம்சிங் நகர் மாவட்டத்தை உத்தராஞ்சல் மாநிலத்தில் சேர்க்கக் கூடாது எனப் போராடுகின்றனர்.

இவர்களை திருப்திப்படுத்த மலைப் பகுதி உச்சவரம்பு உத்தம்சிங் நகருக்குப் பொருந்தாது என பா.ஜ.க. மைய அரசு அறிவித்தும், அதை இவர்கள் ஏற்க வில்லை.

பாபர் மசூதி அருகே கரசேவை மட்டும் எனக் கூறி ஏமாற்றி, மசூதியை இடித்த கும்பலைப் பற்றி கூட்டணி கட்சிக்காரர்களுக்கு நன்றாகவே தெரியும் தானே! எனவே அகாலிதளம் கட்சியும் எதிர்க்கிறது, பணக்கார விவசாயிகள், ஆலை அதிபர்கள் சார்பாக.

**வனாஞ்சல்:** இந்தியாவிலுள்ள ஏழ்மையான மாநிலம் பீகார். அதன் கனிவளமிக்க பகுதி ஜார்கண்ட். 50 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகுதி ஆதிவாசி மக்கள் தனி மாநிலம் கோரிப் போராடி வந்தனர். பீகார் மட்டுமின்றி, மேற்கு வங்கம், ஒரிசா, மத்தியப் பிரதேச மாநிலங்களிலுள்ள சில மாவட்டங்களையும் இணைத்து ஜார்கண்ட் மாநிலமாக்கு என்பதே இம்மக்கள் கோரிக்கை.

ஜார்கண்ட் மாநில கோரிக்கைக்கு போராடிய ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி பிளவுண்டு செயலற்ற நிலைக்குப் போய்விட்டது. 75 ஆண்டுகளுக்கு முன் பெரும்பான்மையாயிருந்த ஆதிவாசிகள், இன்று மூன்றில் ஒரு பங்கினராக சிறுபான்மையாகிவிட்டனர். இங்குள்ள 14 எம்.பி. தொகுதிகளில் 11-ஐ பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது.

பீகாரில் இருந்து ஜார்கண்ட் பகுதியைத் தனியே பிரிப்பது மூலம், அப்புதிய மாநில அரசியலில் செல்வாக்குப் பெறலாம் என்றுதான் தனி மாநிலமாக்குகிறது பா.ஜ.க. பீகாரின் மொத்த வருவாயில் 70% இப்பகுதியிலிருந்துதான் கிடைக்கிறது. இதற்கு நட்ட ஈடாக ரூ. 50,000/- கோடி பீகாருக்குத் தரவேண்டும் என ரயில்வே அமைச்சரே கோரிக்கை வைத்துள்ளார். இப்போதைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத லல்லு, நேரம் வரும்போது பார்ப்பேன் எனப் பேசியுள்ளார்.

**சட்டீஸ்கர்:** இப்பகுதியிலும் பெரும்பான்மையாயிருந்தவர்கள் ஆதிவாசி, பழங்குடி மக்களே. 1956-லேயே தனி மாநிலக் கோரிக்கை வந்தபோது, அன்றைய மாநில மறு ஒழுங்கமைப்புக் கமிசன் இதை நிராகரித்தது. மத்தியப் பிரதேசின் வருவாயில் 44% சட்டீஸ்கர் பகுதியினுடையது.

இன்று ஆதிவாசி, பழங்குடி மக்கள் தொகையை விட குடியேறிய பிற மக்கள் தொகை மிக அதிகம். இப்பகுதியில் 11 எம்.பி. தொகுதிகளில் 7 தொகுதியை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது. இதை தனி மாநிலமாக்குவதன் மூலம், அங்கும் தனது அரசியல் செல்வாக்கை மேலும் வலுப்படுத்துகிறது பா.ஜ.க. இப்புதிய மாநிலத்தின் தலைநகர் ராய்ப்பூரா, பிலாஸ்பூரா என்ற சர்ச்சை எழுந்துள்ளது. முடிவு செய்யப்படவில்லை.

பூர்வகுடி மக்களை சிறுபான்மையாக்கிய பின் மாநிலத் தகுதி வழங்கி, இவர்களையும் சேர்த்து அப்பகுதி மக்களிடம் பா.ஜ. கட்சி தனது செல்வாக்கை உறுதிப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கிறது. இதை எதிர்த்தால் மக்கள் மத்தியில் செல்வாக்குப் போய் விடுமோ என்ற பயத்தில் காங்கிரசு உட்பட எல்லா கட்சிகளும் இதை ஏற்கின்றன.

ஏற்கனவே போடோலாந்தை அச்சாமிருந்து பிரித்து தனி மாநிலமாக்கக் கோரி 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர் போடோ தேசிய இன மக்கள். இவர்கள் கோரிக்கை பற்றி பா.ஜ.க. வாய் திறக்கவில்லை. ஏற்கனவே மே.வங்கத்தில் கோர்காலாந்து தனி மாநில கோரிக்கை எழுந்த போது, சுயாட்சிப் பகுதி என சில உரிமைகளை வழங்கி, தனி மாநில கோரிக்கையை கைவிட வைத்தனர்.



தனி மாநிலம் கோரிப் போராடி வரும் போடோ இனப் போராளிகள்.

ஆந்திராவில் 'தெலுங்கானா' கோரிக்கை, மகாராட்டிரத்தில் 'விதர்பா' கோரிக்கை, மத்தியப் பிரதேசத்தில் 'விந்திய பிரதேஷ்' கோரிக்கை கர்நாடகத்தில் குடகு எனத் தனி மாநிலக் கோரிக்கைகள் உள்ளன. புதிதாக 3 மாநிலங்கள் உருவாவதால் இக்கோரிக்கைகள் வலுப்பெறலாம்.

வனாஞ்சல், சட்டீஸ்கர் பகுதி முழுக்க ஆதிவாசி - பழங்குடி மக்களுக்குச் சொந்தமானது. இவர்களின் ஆரம்பகால தனி மாநிலக் கோரிக்கையை நிராகரித்தனர், 'தேசிய' வாதிகள். இன்று அப்பூர்வகுடிகளுக்குச் சொந்தமானவற்றை அபகரித்து, அவர்கள் வாழ வழியின்றி ஓட்டாண்டியாக்கி, அப்பகுதியில் அவர்களையே சிறுபான்மை ஆக்கிய பின் தனி மாநில தகுதி தருவது, அப்பூர்வகுடி மக்களுக்கு எவ்வகையிலும் பலன் தரப் போவதில்லை. அவர்களுக்காக தலைமை தாங்கிச் செல்ல அரசியல் இயக்கமும் இல்லை. ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா போன்ற கட்சிகளும் பிளவுண்டு, தமக்குள் மோதி, செயலாற்று உள்ளனர்.

உத்தரகாண்ட் மாநில பிரிப்போ முழுக்கவும் பாரதீய ஜனதாவின் சதியால் உருவாவது. இங்குள்ள மலைமக்கள் தொகையோ வெறும் 15% தான். இவர்கள் பெயரால் இது முழுக்க பார்ப்பன, மேல் சாதி நலனுக்காக உருவாகிறது. எனவே தான் கூட்டணி கட்சியான அகாலிதளம் எதிர்த்தாலும், வளமான உத்தம்சிங் நகர் மாவட்டத்தை உத்தராஞ்சலில் சேர்ப்பதில் உறுதியாக நிற்கிறது பா.ஜ.க.

இப்படி ஆதிவாசி - பழங்குடி - மலைவாழ் மக்களை ஒடுக்கி தனி மாநிலம் உருவாவது மேலும் அதிகார வர்க்கமும், ஓட்டுப் பொறுக்கிகளும் மக்கள் வரிப் பணத்தை சூறையாடவே உதவும்.

இந்த ஒவ்வொரு மாநிலத்திற்கும் கவர்னர், தலைமைச் செயலர், அரசுச் செயலர்கள் என அதிகார வர்க்கக் கும்பல் ஊதிப் பெருகும். இவர்களுக்கான அலுவலகங்கள், சட்டமன்றங்கள் புதிதாகக் கட்ட வேண்டும். தவிர தனி முதல்வர், மந்திரிகள் என ஓட்டுப் பொறுக்கிக் கும்பல் இன்னொருபுறம் தின்று கொழுக்கும். சிறு மாநிலங்களாக்குவது நிர்வாக வசதிக்காக என்று புளுகும் இவர்கள், எல்லா தனி மாநில கோரிக்கைகளையும் ஏன் ஏற்பதில்லை?

எப்போதுமே பாசிஸ்டுகள் தமது ஆட்சியைத் தக்க வைக்கவும், மக்களை ஏய்க்கவும் கவர்ச்சித் திட்டங்களை அள்ளி வீசுவர். பாசிச இந்திரா அவசர நிலைக் காலத்தில் 20 அம்சத் திட்டம் உட்பட ஜனதா சாப்பாடு வரை, அறிவிக்காத கவர்ச்சித் திட்டம் என்ன இருந்தது? வடகிழக்குப் பகுதி யூனியன் பிரதேசங்களை தனிமாநிலங்களாக்கி அரசியல் ஆதாயம் தேடினாரே!

அதே போல இன்று அணுகுண்டு வெடிப்பு முதல் பல விசயங்களை கையிலெடுத்து, தேசிய வெறியூட்டும் அதே நேரம், அரசியல் ஆதாயத்திற்கான தொலை நோக்கோடுதான் இப்போது மாநிலப் பிரிப்பையும் செய்துள்ளது பா.ஜ.க. அரசு.

இந்த மாநிலப் பிரிப்பால் இம்மக்கள் மேலும் ஓட்டாண்டியாக்கப்படுவது மட்டுமே மிச்சம். பா.ஜ.க. அரசு எரியும் கொள்ளியை எடுத்து தலையைச் சொரிந்துள்ளது.

• வேந்தன்

www.padippakam.com

# இந்துவெறியர்கள் ஆட்சியில் தொழிலாளர் மீதான தாக்குதல்

பகவத் - அவர் 45 வயதான சிமெண்ட் ஆலைத் தொழிலாளி. உத்திரப் பிரதேசத்தி லுள்ள சுனார் அரசு சிமெண்ட் ஆலையில் உழைத்து ஓடாகிப் போனவர். அவர் பணி யாற்றிய ஆலையோடு தலா, சுர்க் ஆகிய அரசு சிமெண்ட் ஆலைக ளும் நட்டத்தில் இயங் குவதாகக் கூறி, நலிவ டைந்த ஆலைகளாக அரசு அறிவித்தது. ஆலை எப்போது மூடப்படுமோ, நமது வாழ்வு என்னவாகுமோ என்று பகவத் தைப் போன்றே ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்கள் கவலையில் ஆழ்ந்தனர். "நட்டக் கணக்கு காட்டி ஆலையை மூடாதே! தொழிலாளர் களை வேலையிலிருந்து விரட்டாதே! இதர அரசு நிறுவனங்களில் தொழிலாளர் களை வேலைக்கு அமர்த்து!" என்ற கோரிக்கைகளுடன் அவர்கள் போராடி வந்தனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொழிலாளர்களுக்கு சம்ப ளம் வழங்கப்படவில்லை. அரசு கருவூலத்திலிருந்து இன்னும் காசோலை வர வில்லை என்று காரணம் கூறி யது நிர்வாகம். அடுத்த மாதம் வந்தது. அப்போதும் சம்பளம் தரப்படவில்லை. இப்படியே கடந்த 10 மாதங்க ளாக தொழிலாளர்களுக்கு ஒரு பைசா கூட சம்பளம் தரா மல் அரசு வஞ்சித்தது. அதே சமயம் ஆலையும் மூடப்பட வில்லை. கதவடைப்பும் அறி விக்கப்படவில்லை. சம்ப ளம் தராததை எதிர்த்து தொழிலாளர்கள் போராடி யும் அரசு செவிசாய்க்க வில்லை.

பத்து மாதங்களாக சம்ப ளம் இல்லாத நிலையில் தொழிலாளர் குடும்பங்கள் பரிதவித்தன. பல தொழிலா ளர்கள் அருகிலுள்ள நகரங்க ளில் அற்பக் கூலிக்கு உழைத்து, அரைப் பட்டினி யோடு தமது குடும்பத்தைக் காப்பாற்ற முயன்றனர். பக வத்துக்கு நகரத்திலும் வேலை கிடைக்கவில்லை. நீண்ட காலமாக சிமெண்ட் ஆலையில் பணியாற்றி வந்த தால் அவர் நுரையீரல் பாதிக் கப்பட்டு எலும்பும் தோலு மாக இருந்ததால் யாரும் வேலை கொடுக்கவில்லை.

விவசாயக் கூலி வேலைக்குச் சென்று மனைவி வாங்கி வரும் கூலியை வைத்து, அவரது குடும்பம் ஒருவேளை கஞ்சிகூட குடிக்க முடியவில்லை. போதாக் குறைக்கு மூச்சிரைப்பு நோயும் அவரைத் தாக்கியது.

சோத்துக்கே வழியில்லாத போது அவரால் எப்படி மருத்துவம் பார்க்க முடி யும்? நாட்கள் நகர்ந்தனவே ஒழிய ஆலை யில் சம்பளம் தரப்படவில்லை. எத்தனை நாட்கள்தான் பானைத் தண்ணீரைக் குடித் துக் கொண்டு உயிர் வாழ முடியும்? கடந்த ஜூலை 7-ந் தேதி ஆலையிலிருந்து வீட் டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பகவத் சுருண்டு விழுந்து மாண்டு போனார்.

பகவத் பட்டினி யால் மாண்டதைக் கண்டு குமுறிய தொழி லாளர்கள், தமது குடும் பத்தினருடன் ஊர்வலமாக தலை நகர் லக் னோவுக்கு வந்து மாநில சட்ட சபையை முற்றுகையிட்டனர். "மாண்டு போன தொழிலாளியின் சாவுக்கு சட்டப்படியும் தார்மீக ரீதியாகவும் உ.பி. மாநில அரசு தான் பொறுப்பு" என்று முழங்கிய அவர் கள், ஜூலை 9-ந் தேதியிலிருந்து தொடர்ந்து 4 நாட்கள் சட்டமன்ற வளாகத் திலேயே தங்கி தமது ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தனர்.

"தினமும் 100 பேர் சாகிறார்கள். இதற்கெல்லாம் அரசு எப்படி பொறுப்பாக முடியும்?" என்று சட்டமன்ற விவகார அமைச்சர் தொழி லாளர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி திமிராகப் பேசினார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிகள் கூச்சலிட்டு ஜூலை 13-ஆம் தேதியன்று அவையை இருமுறை ஒத்தி வைத்தன. இதனால் அரண்டு போன முதல்வர், மாண்டு போன தொழிலாளியின் குடும்பத்துக்கு ஒரு லட்ச ரூபாய் நிவாரணம் அளிப்ப தாகவும், தொழிலாளிக ளுக்கு உடனடியாக 4 மாத சம்பளத்தை வழங்குவதாக வும், மீதிச் சம்பளத்தை இன் னும் ஒரு மாதத்திற்குள் கொடுப்பதாகவும் உறுதி அளித்து உத்திரவிட்டார். அதன் பின்னரே தொழிலா ளர்களின் முற்றுகைப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

பத்து மாதங்களாக சம்ப ளம் இன்றி பரிதவித்து, சக தொழிலாளி பகவத்தைப் பலிகொடுத்து, நீண்ட போராட்டத்துக்குப் பிறகு கொடுபடாத சம்பளத்தைப் பெற்றுள்ள சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்கள் இனி ஒரு முடிவுக்கு வர வேண்டும் — இத்தகைய தொழிலாளர் விரோத இந்து வெறியர்களின் ஆட்சி இன் னும் நீடிக்க வேண்டுமா,

தலைநகர் தில்லியில் சுகாதாரத் துறை ஊழியர்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது தடியடித் தாக்குதல் நடத்தி விரட்டும் போலீசு.




படிப்பகம்

www.padippakam.com

நீடிக்க அனுமதிக்கலாமா என்பதைப் பற்றி.

★☆★

**சரண்தாஸ்** - உ.பி. மாநில மின்துறையில் பொறியியலாளராகப் பணியாற்றிவரும் அவருக்கு வயது 53. நாளும் அதிகரித்து வரும் விலைவாசியோடு, தனது ஊதியத்தைக் கொண்டு போட்டி போடும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் அவர். ஊதிய உயர்வு கோரி இதரப் பொறியியலாளர் சங்கங்களுடன் இணைந்து நடந்த போராட்டங்களில் அவர் ஊக்கமுடன் பங்கேற்றார். ஆனாலும் எந்தப் போராட்டத்துக்கும் அரசு அசைந்து கொடுப்பதாக இல்லை.

இறுதியாக, கடந்த ஜூலை 20-ந் தேதியிலிருந்து மின்துறை பொறியியலாளர்களும் தொழில்நுட்ப ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். அத்தியாவசியப் பணித்துறை சட்டத்தை ஏவி முன்னணியாளர்களைக் கைது செய்தும், இராணுவத்திலுள்ள பொறியியலாளர்களைக் கொண்டு மின் நிலையங்களை இயக்கியும், அச்சுறுத்தியும்கூட அவர்களின் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. ஆத்திரமடைந்த இந்து வெறி ஆட்சியாளர்கள், சரண்தாஸ் உட்பட 50-க்கும் மேற்பட்ட பொறியியலாளர்களை திடீரென வேலை நீக்கம் செய்தனர். இன்னமும் போராட்டம் நீடித்தால் அனைத்து ஊழியர்களையும் வேலை நீக்கம் செய்வோம் என்று எச்சரித்தனர்.

இத்தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நிலையில், போராட்டத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புவது, கோரிக்கைகளுக்காக ஆட்சியாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்துவது என்று தொழிற்சங்கக் கூட்டமைப்பு முடிவு செய்தது. ஆனால் ஆளும் இந்து வெறியர்களோ, வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் பணியில் அமர்த்த முடியாது என்று கொக்கரிக்கின்றனர். இதனால் சரண்தாஸ் இன்று வேலையிழந்து வீதியில் நிற்கிறார்.

இனி, சரண்தாஸ்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டும் மிகச் சாதாரண தொழிற்சங்க - ஜனநாயக உரிமைகளைப் பறித்து, கூலி உயர்வுக்கான போராட்டம் நடத்தினாலே வேலை நீக்கம் செய்யும் தொழிலாளர் விரோத இந்து வெறியர்களின் ஆட்சி இன்னும் நீடிக்க வேண்டுமா, நீடிக்க அனுமதிக்கலாமா என்பதைப் பற்றி.

★☆★

**ராம்சிங்** - தலைநகர் தில்லியின் புறநகர் மருத்துவமனையில் பணியாற்றும் 46 வயதான சுகாதார ஊழியர். டெல்லி மாநில அரசின் கீழும், மத்திய அரசின் கீழும் டெல்லியில் 70,000-க்கும் மேற்பட்ட மருத்துவ - சுகாதாரத் துறை ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். நீண்ட காலமாக அவர்கள் ஊதிய உயர்வு, பதவி உயர்வு, சலவைப்படி, வீட்டு வாடகைப் படி ஆகிய கோரிக்கைகளை முன் வைத்துப் போராடியும் இதுவரை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சுகாதாரத்துறை அமைச்சருடன் பலமுறை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்திய போதிலும், அவர்களது கோரிக்கை ஏற்கப்படவில்லை.

இறுதியாக ஜூலை 19-ந் தேதியிலிருந்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். அதன் பின்னரும் சுகாதாரத் துறை அமைச்சரான பா.ம.க.வின் தலித் எழில்மலை அவர்களின் கோரிக்கைகளை ஏற்க மறுத்து, அத்தியாவசியப் பணித்துறைச் சட்டத்தின்படி முன்னணியாளர்களைக் கைது செய்ய உத்திரவிட்டார். அதைத் தொடர்ந்து கடந்த ஜூலை 23-ந் தேதியன்று போராடும் ஊழியர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி ஊர்வலமாகச் சென்றபோது, போலீசார் கண்மூடித்தனமாக தடியடி நடத்தினர். கண்ணீர் புகைக் குண்டு வீசி, ஊர்வலத்தைக் கலைத்து, சிதறி ஓடிய ஊழியர்களை மிருகத்தனமாகத் தாக்கினர். இந்த ஊர்வலத்தில் பங்கேற்றுப் படுகாயமடைந்த ராம்சிங், கை எலும்பு முறிந்து இன்று மருத்துவமனையில் கிடக்கிறார்.



இந்து வெறியர்களின் அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மட்டுமல்ல, உழைக்கும் மக்கள் அனைவருமே இத்தொழிலாளர் விரோத, மக்கள் விரோத இந்துவெறி பாசிச ஆட்சியை வீழ்த்தி விட்டு, புதிய ஜனநாயக அரசை புரட்சியின் மூலம் நிறுவும் அவசியம் பற்றி முடிவுக்கு வரவேண்டும்.

அடுத்த நாள் வந்த செய்தி அவரை அதிர்ச்சியடையச் செய்தது. அவரோடு சேர்த்து 200-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். போராட்டம் நீடித்தால், மேலும் பலரை வேலை நீக்கம் செய்வோம் என்று மிரட்டியது இந்து வெறியர்களின் அரசு. கோரிக்கைகளைப் பரிசீலித்து விரைவில் தீர்வு காண்பதாக ஆட்சியாளர்கள் அளித்த வாக்குறுதியை நம்பி, ஒரு வார கால போராட்டத்துக்குப் பிறகு சுகாதாரத் துறை ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர். அதே சமயம், வேலை நீக்கம் செய்து பழிவாங்கப்பட்ட ஊழியர்களை மீண்டும் பணியில் அமர்த்த முடியாது என்று திமிராக மறுக்கிறது, இந்து வெறியர்களின் அரசு.

இனி ராம்சிங்குகள் ஒரு முடிவுக்கு வர வேண்டும், - கூலி உயர்வுக்கான போராட்டம் நடத்தினாலே குண்டாந்தடி தாக்குதல் நடத்தி வேலை நீக்கம் செய்யும் தொழிலாளர் விரோத இந்து வெறியர்களின் ஆட்சி இன்னும் நீடிக்க வேண்டுமா, நீடிக்க அனுமதிக்கலாமா என்பதைப் பற்றி.

★☆★

**ரா**ம்சிங்குகளும் சரண்தாஸ்களும் மறந்து போயிருக்கலாம். தொழிற்சங்க - ஜனநாயக உரிமைகளுக்கு இந்து வெறியர்கள் என்றும் எப்போதும் எதிரிகள்தான். உ.பி.யில் மூன்றாண்டுகளுக்கு முன்பு அரசு சிமெண்ட் ஆலைகளை தரகுப் பெரு முதலாளி டால்மியாவுக்குத் தாரை வார்ப்பதை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, நால்வரைக் கொன்றொழித்தது இந்து வெறியர்களின் அரசு.

பம்பாயில் நலிவடைந்த ஜவுளி ஆலைகளையும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களையும் காப்பாற்ற முன் வராத மகாராஷ்டிர இந்து வெறிக் கூட்டணி அரசு, ஆலை நிலங்களை வீட்டு மனைகளாக்கிக் கொள்ளையடிக்கும் மாஃபியா கும்பலுக்குத் துணையாக நின்று தொழிலாளர்களை ஒடுக்கியது. ஆலைகளிலிருந்தும், ஆலையை ஒட்டிய குடியிருப்புகளிலிருந்தும் தொழிலாளர்களை குடும்பத்துடன் வெளியேற்ற இந்துவெறிக் குண்டர்கள், மாஃபியாக்களுடன் சேர்ந்து கொண்டு தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். இதை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்களும் தொழிற்சங்க முன்னோடிகளும் இரகசியமான முறையில் கொன்றொழிக்கப்பட்டனர்.

பம்பாயில் ஊதிய உயர்வு கோரி மாநகரப் பேருந்து தொழிலாளர்கள் போராடிய போது, தொழிலாளர்களின் வீடுகளுக்குள் புகுந்து, ஆயுதங்களைக் காட்டி மிரட்டி அவர்களை வேலைக்கு இழுத்து வந்து, இந்துவெறிக் குண்டர்கள் போராட்டத்தை ஒடுக்கினர்.

இரு மாதங்களுக்கு முன்பு தில்லியில் மருத்துவமனை செவிலியர்கள் கூலி உயர்வு - பதவி உயர்வு கோரி போராடிய போது கூட, முன்னணியாளர்களைக் கைது செய்தும், வேலை நீக்கம் செய்தும், அச்சுறுத்தியும் அப்போராட்டத்தை ஒடுக்குவதில் இந்துவெறி அரசு தீவிரமாகச் செயல்பட்டது.

இப்படி பல நூறு சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொன்னால், இந்து வெறியர்களுக்குத் தொழிலாளர் நலனிலோ, மக்கள் நலனிலோ என்றைக்குமே அக்கறை கிடை

www.padippakam.com

யாது. அதற்கான கொள்கை எதுவும் அவர்களிடம் மருந்துக்குக் கூட கிடையாது.

தனியார்மயம் - தாராளமயம் என்னும் நாட்டை மறுகாலனியாக்கும் கொள்கையின் விசுவாசிகளான அவர்கள், 'ஏகாதிபத்திய வல்லரசுகளின் கட்டளைப்படி, ஊதிய வெட்டு, வேலை நீக்கம், ஆலை மூடல் முதலானவற்றைத் தயக்கமின்றி செயல்படுத்துவது, தொழிற்சங்க - ஜனநாயக உரிமைகளைப் பறித்து, கருப்புச் சட்டங்களைக் கொண்டு பாசிச அடக்குமுறையை நிறுவுவது என்ற நோக்கத்தில்தான் உள்ளனர்.

இப்படி பலநூறு தொழிலாளர் போராட்டங்கள் பெருகியும், நாடு தழுவிய மகத்தான ரயில்வே தொழிலாளர் போராட்டமும் நடந்தபோது, அவற்றை மிருகத்தனமாக ஒடுக்கி, அதன் தொடர்ச்சியாகவே அவசர நிலை பாசிச ஆட்சியை 1975-இல் இந்திரா நிறுவினார். அதேபோல, இன்று தன்னெழுச்சியாகப் பெருகி வரும் தொழிலாளர் போராட்டங்களும், அவற்றை நசுக்க இந்துவெறி ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிடும் அடக்கு முறையும் கருப்புச் சட்டங்களும் அத்தகைய பாசிசக் கொடுங்கோலாட்சியை நிறுவும் திசையிலேயே செல்கின்றன.

"பேச்சைக் குறை; உற்பத்தியைப் பெருக்கு" என்று பாசிச இந்திரா தொழிலாளர் உரிமைகளைப் பறித்து, போராட்டங்களைத் தடை செய்தார். அதே பாணியில், "நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், வேலை நிறுத்தங்கள், பணி வேகக் குறைப்பு, விதிப்படி வேலை போன்றவற்றை அனுமதிக்க முடியாது" என்று இந்து வெறி பாசிச ஆட்சியாளர்கள் மிரட்டத் தொடங்கி விட்டனர்.

பாதிக்கப்பட்ட ராம்சிங்குகளும் சரன்தாஸ்களும் மட்டுமல்ல; இந்தியாவின் கோடிக்கணக்கான தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் இனி ஒரு முடிவு செய்ய வேண்டும் - இத்தகைய தொழிலாளர் விரோத - மக்கள் விரோத இந்துவெறி பாசிச ஆட்சியாளர்களை வீழ்த்திவிட்டு, ஒரு புதிய ஜனநாயக அரசை நிறுவிக் கொள்ள புரட்சிக்கு அணி திரள வேண்டிய அவசியம் பற்றி!

• மனோகரன்

# வாண்டையார் கும்பலின் ரவுடி இராச்சியமும் ஓட்டுக்கட்சிகளின் பம்மாத்தும்

சிதம்பரம் நகரில் பா.ம.க. பிரமுகர் பழனிவேலு கொலைக்குப் பின், வாண்டையார்களின் ரௌடி ராச்சியம் பற்றி பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதுகின்றன.

இந்திய அரசியல் சட்டம், இதை நடைமுறைப் படுத்தும் அதிகாரிகள், போலீசு, நீதிமன்றம் இவை அனைத்தும் சிதம்பரம் வாண்டையார்கள் முன் கைகட்டிச் சேவகம் செய்த மர்மத்தைப் பற்றி, ஒரு வரி, ஒரே ஒரு வரி எந்தப் பத்திரிக்கையும் வெளியிடவில்லை.

பழனிவேலு கொலைக்குப் பின் சிதம்பரத்தில் அனைத்துக் கட்சியினர் கண்டனக் கூட்டம் நடத்துகிறார்கள். இதே வாண்டையார்கள் மிக நீண்டகாலம் காங்கிரசு, பின் அதிமுக, திமுக கட்சிகளின் செல்லப் பிள்ளைகளாக உலா வந்தார்களே, இதற்கு என்ன செய்யலாம்?





ஓட்டுக் கட்சிகள் - அதிகார வர்க்கத்தின் ஆதரவுடன் தனி இராச்சியம் நடத்திய வாண்டையார் சகோதரர்கள்.

ஏதோ வாண்டையார்கள் இத்தனை நாளும் இவ்வளவு மர்மமாக, இரகசியமாக சிதம்பரத்தில் ஆட்சி நடத்தியதாகவும், பழனிவேலு கொலைக்குப் பின்தான் இவர்களின் அக்கிரமங்கள் எல்லாம் வெளியே தெரிய வந்தது. போலவும் பத்திரிகைகள் காதில் பூ சுற்றுகின்றன.

போலீசின் கூட்டணி இன்றி கள்ளச்சாராயம் விற்பவன் கிடையவே கிடையாது.

சுங்கத் துறை, கடற்படை அதிகாரிகள் உதவியின்றி கடத்தல் செய்பவன் கிடையாது.

இப்படி கோடிக்கணக்கில் கொள்ளையிட்டு குபேரனாகியுள்ள மா∴பியா - கிரிமினல் கும்பலை ஆதரிக்காத ஓட்டுக் கட்சிகள் கிடையாது.

சிதம்பரத்தில் வாண்டையார்கள் வளர்ந்ததும் இப்படித்தான். உடனே இந்த கிரிமினல் - மா∴பியா குண்டர்களுக்கு சாதிச் சங்கப் பாதுகாப்பும் கிடைக்கிறது.

தேவர் பேரவை, பழனிவேலு கொலைக்கும் வாண்டையார்களுக்கும் சம்பந்தமில்லை என அறிக்கை விட்டு களத்தில் இறங்கியுள்ளது.

சிதம்பரத்திலுள்ள மக்கள் வாண்டையார்கள் கைது செய்யப்படவேண்டும் என உறுதியாக உள்ளனர். உள்ளூர் கட்சியினர் வாண்டையார்களுக்கு எதிராக ஓரணியில் உள்ளனர். வாண்டையார்களின் கிரிமினல் - மா∴பியா நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்துக் கட்சி கூட்டம் நடந்த போது சிபிஎம் தலைவர் சங்கரய்யாவின் காரை வாண்டையார்களின் அடியாள் படை காவல் நிலையம் அருகிலேயே கத்தி, அரிவாள், இரும்புத் தடிகளால் தாக்கியது. இதுவரை ரௌடி கும்பல் பகிரங்கமாக உலவவும், தாக்கியபின் தப்பிக்கவும் முடிந்ததே, எப்படி?

இன்னும் இத்தனை நாளாகியும், போலீசின் தீவிர தேடலுக்குப் பிறகும் வாண்டையார்களைக் கைது செய்ய முடியவில்லை என்பது அதிகாரிகள் - போலீசு - ஓட்டுப் பொறுக்கிகள் கூட்டை, நட்பை மேலும் உறுதிப்படுத்தவே செய்கிறது.

கிரிமினல்களும் அதிகாரிகளும் ஓட்டுக் கட்சிகளும் ஒன்றாகிவிட்டதை வோரா கமிட்டி அம்பலப் படுத்தியது. இதற்கான மேலும் ஒரு ஆதாரம்தான் வாண்டையார்களின் ரவுடி இராச்சியம்.

பழனிவேலு கொலையில் கூட, தனக்கு எதிராக இன்னொருவனா? என்ற போட்டிதான் கொலைக்கு அடிப்படையாயிருந்துள்ளது. இதிலே வன்னியர் - தாழ்த்தப்பட்டோர் சாதி வெறியைத் தூண்டி திசை திருப்ப முயல்கின்றனர் வாண்டையார்கள். பத்திரிகைகள் துணை போகின்றன.

உழைக்கும் மக்கள் விழிப்போடிருந்து இச் சமூக விரோதிகளை முறியடிக்க வேண்டும். வாண்டையார் போன்ற கிரிமினல் - மா∴பியா கும்பல்களை எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் ஊட்டி வளர்க்கின்றனர். உழைக்கும் மக்கள் இவற்றையும் முறியடிக்க வேண்டும். ஓட்டுக் கட்சிகள் கிரிமினல்களை எதிர்ப்பதாகப் பேசும் மாய்மாலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

# தீண்டாமைக் கொடுமைக்கெதிரான போராட்டம்: ஆதிக்க சாதி வெறியர்கள் அடிபணிந்தனர்

நாய்களும் பன்றிகளும் நடமாடும் மேல் சாதியினர் தெருக்களில் தாழ்த்தப்பட்டோர் செல்ல உரிமையில்லை; ஊருக்குள்ளே தாழ்த்தப்பட்டோர் செருப்பைக் காலில் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது; கைகளிலே தூக்கிச் செல்ல வேண்டும்; மிதிவண்டியில் ஓட்டிச் செல்லத் தடை; இளைஞர்கள் பேண்ட் - சட்டை அணிந்து செல்லக் கூடாது; தனித் தேநீர் குவளை வைத்து அவமானப்படுத்தும் அயோக்கியத்தனம்.

— இவை எங்கோ, வட இந்திய குக்கிராமத்தில் நடக்கும் சாதியக் கொடுமை அல்ல. தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கோட்டாநத்தம் ஊராட்சியிலுள்ள கம்பிளியம்பட்டி, சேர்வைக்காரன்பட்டி, சத்திரப்பட்டி, கொல்லப்பட்டி, குமரம்பட்டி ஆகிய ஆறு பட்டிகளிலும் இத்தீண்டாமை தொடர்ந்து வந்தது. தாழ்த்தப்பட்டோர் ஊரில் செருப்புப் போட்டு நடந்ததற்காக, ராசு செட்டியார் என்ற ஆதிக்க சாதி வெறியன் ஊர்க் கூட்டம் போட்டு, சவுக்கடி தண்டனை கொடுத்துள்ளான்.

இக்கொடுமையை எதிர்த்து இப்பகுதியில் செயல்படும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் மூலம் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டதோடு, அரசு உயரதிகாரிகளுக்கும் மனுவின் மூலம் தெரியப்படுத்தினர். அதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில், தீண்டாமை ஒழிப்புப் பிரிவு போலீசு ஆய்வாளர் முன்னிலையில் இருதரப்பினரையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

கம்பிளியம்பட்டி உட்பட சுற்றிலுமுள்ள ஆறு பட்டிகளிலும் தாழ்த்தப்பட்டோருக்கு இனி தனிக்குவளை வைக்கக் கூடாது; சமமாக நடத்த வேண்டும்; மிதிவண்டியில் செல்ல, செருப்பு போட்டு நடக்க, பேண்ட் - சட்டை அணிய எந்தத் தடையும் விதிக்கக் கூடாது; மீறினால் தீண்டாமை ஒழிப்பு, வன்கொடுமை சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதர பிற கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்றும் ஊர் பொது மக்கள் முன்னிலையில் பஞ்சாயத்து தலைவர் தங்கராசு, ஊராட்சி உதவித் தலைவர், கவுன்சிலர் மற்றும் பு.மா.இ.மு. தோழர்கள் ஒப்புக் கொள்ள பேச்சு வார்த்தை முடிக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோரின் உயிருக்கும் உடமைக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படக் கூடாது; அப்படி நடந்தால் அதற்கு ஆதிக்க சாதியினர்தான் பொறுப்பு என்ற நிபந்தனையும் பேச்சு வார்த்தையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தீண்டாமைக் கொடுஞ் செயலில் ஈடுபட்ட மேல் சாதி வெறியர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 10,000 கொடுக்க வேண்டும் என்று பு.மா.இ.மு.வினரால் விதிக்கப்பட்ட அபராதம் ஏற்கப்பட்டு, அதன்படி கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதிக்க சாதி வெறியர்கள் அடிபணிந்த போதிலும், பேச்சு வார்த்தையில் ஒப்புக் கொண்டதை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. இன்னமும் சில பட்டிகளில் தனித் தேநீர் குவளை அகற்றப்படவில்லை. இதனை மக்களுக்கு உணர்த்தி போராட்டத்திற்கு பு.மா.இ.மு. அணிதிரட்டி வருகிறது.

தகவல்:
புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி,
கரூர் - திண்டுக்கல்.

# தொழிற் பயிற்சி நிலையமா? கொள்ளையர் கூடாரமா?

தேனி மாவட்டத்தில் ஒரேயொரு அரசினர் தொழிற் பயற்சிப் பள்ளி (I.T.I.) மட்டுமே, மாவட்டத் தலைநகரில் உள்ளது. இதில் 420 மாணவ, மாணவியர் பயிற்சி பெறுகின்றனர். இத்தொழிற் பயிற்சிப் பள்ளியின் முதல்வர் பாலகிருஷ்ணன் மாணவர்களிடம் அடிக்கும் கொள்ளைக்கு அளவே இல்லை. இப்பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு இட ஒதுக்கீடோ, தகுதியோ தேவையில்லை. என்ன பிரிவுக்கு எவ்வளவு லஞ்சம் என்ற பட்டியலின்படி மாணவர்கள் பணத்தைக் கொட்டினால், தாராள மனதுடன் முதல்வர் சேர்த்துக் கொள்வார். இல்லையேல், இடம் கிடைக்காது. இக்கொள்ளையருக்கு இடது, வலதுகரமாக ஜெயபால், கலைச் செல்வன் ஆகிய ஆசிரியர்கள் செயல்படுகின்றனர்.

இப்பயிற்சிப் பள்ளியில் சேர வரும் தகுதியுள்ள மாணவ, மாணவியரிடமிருந்து தொழிற் பிரிவுகளுக்கு ஏற்ப ரூ. 1000 முதல் ரூ. 5000 வரை இலஞ்சமாகப் பறிக்கின்றனர். பள்ளியில் சேர்ந்தபின் புத்தகம், செய்முறை ஏடுகளுக்கு என ரூ. 100 பிடுங்குகின்றனர். அவசரத் தேவைக்காக பள்ளி மாற்றுச் சான்றிதழ் கேட்டு வரும் மாணவர்களிடம் ரூ. 100 முதல் ரூ. 500 வரை கப்பம் வசூலிக்கின்றனர். பயிற்சி முடிந்து உண்மைச் சான்றிதழ் பெற ரூ. 500 செலுத்தினால்தான் கிடைக்கும்.

மாணவர்களை மட்டுமல்ல; அலுவலகப் பணியாளர்களையும் இக்கொள்ளையர்கள் விட்டு வைக்கவில்லை. இப்பயிற்சிப் பள்ளியில் கருவேல் நாயக்கன் பட்டியைச் சேர்ந்த பெத்தணன் என்பவர் பணியில் இருக்கும் போது இறந்து விடவே, வாரிசு அடிப்படையில் அவரது மகன் முருகனை பணியில் சேர்ப்பதற்கு ரூ. 15,000 இலஞ்சம் வாங்கினார், முதல்வர். மறைந்த பெத்தணனின் மனைவி சீனியம்மாளுக்குச் சேர வேண்டிய குடும்ப நல நிதி ரூ. ஒரு லட்சத்தில், ரூ. 15,000-த்தை கமிசனாகச் சுருட்டிக் கொண்டார். சுருளியம்மாள் என்ற உடல் ஊனமுற்ற பெண் ஊழியரிடம் ரூ. 40,000 கட்டாயமாகப் பறித்துக் கொண்டு பணியில் அமர்த்தினார், இந்தப் பரோபகாரி!

இந்த ஊழல் - கொள்ளையை அம்பலப்படுத்தியும், முதல்வர் மற்றும் அவரது கைத்தடிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் இப்பகுதியில் செயல்பட்டு வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி எனும் புரட்சிகர அமைப்பினர் பிரசுரம் வெளியிட்டு மாணவர்களிடம் விநியோகித்தனர். இதைக் கண்டு அரண்டு போன முதல்வர், நுழைவாயிலிலேயே நின்று கொண்டு மாணவர்களை மிரட்டி பிரசுரங்களைப் பறித்துக் கொண்டார். பின்னர் சில இடைத் தரகர்களைக் கொண்டு வி.வி.மு.வுடன் பேச்சு வார்த்தை நடத்தக் கெஞ்சினார்.

மறுபுறம், வி.வி.மு.வின் ஆண்டிப்பட்டி வட்டச் செயலாளர், பயிற்சிப் பள்ளியல் தமது சிபாரிசுப்படி இரண்டு மாணவருக்கு இடம் கேட்டதாகவும், தான் கொடுக்க மறுத்து விட்டதாகவும், அதனால்தான் இவ்வமைப்பினர் பிரசுரம் வெளியிட்டுள்ளதாகவும் கூசாமல் புளுகினார். அதே சமயம் இப்பிரசுரத்தால், 20.7.98 அன்று மாணவர்களிடம் லஞ்சம் கேட்காமல் தேர்வுக்கான அனுமதிச் சீட்டை (ஹால் டிக்கெட்) முதல்வர் கொடுத்தார்.

பின்னர், 22.7.98 அன்று, முதல்வர் வி.வி.மு. பிரதிநிதிகளிடம் பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தார். கடந்த கல்வியாண்டில் (97-98) மாணவர்களிடம் இலஞ்சமாகக் கொள்ளையடித்த பணத்தை அவர்களிடம் திருப்பித் தர வேண்டும்; நடப்புக் கல்வியாண்டில் ('98 ஆகஸ்ட் முதல் சேர்க்கை நடக்கிறது) எந்த மாணவரிடமும் எந்த வடிவிலும் இலஞ்சம் வாங்கக் கூடாது - எனும் இரு நிபந்தனைகளை ஏற்றால் மட்டுமே பேச்சு வார்த்தைக்கு வர முடியும் என்று வி.வி.மு. அறிவித்தது. இந்நிபந்தனைகளை ஊழல் முதல்வர் ஏற்க மறுத்து விட்டார்.

இவற்றை விளக்கி, மாணவர்கள் - ஆசிரியர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் ஆதரவுடன் ஊழல் கொள்ளையருக்கு எதிரான போராட்டத்தை வி.வி.மு. தீவிரப்படுத்தி வருகிறது.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
தேனி.

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, 11 floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA...

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/MS(S) 622 / 98

# இதுதான் இன்றைய இந்தியா

மதுரைக்கு அருகேயுள்ள திருமங்கலத்திற்கு அப்பால் 6 கி.மீ. தொலைவில், தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ள முதல் சமத்துவபுர நகரமிது. இதனை ஆகஸ்டு 17-ந் தேதியன்று கருணாநிதி திறந்து வைக்க இருக்கிறார்; தாழ்த்தப்பட்டோர் தொடங்கி பார்ப்பனர் முடிய பல்வேறு சாதிகளைச் சேர்ந்த 100 குடும்பங்கள் இச்சமத்துவபுரத்தில் குடியேற உள்ளனர்.




கடந்த ஆண்டில், தமிழகத்தின் தென் மாவட்டங்களில், தேவர் சாதியினரின் ஆதிக்கத்தையும், ஒடுக்குமுறையையும், வன்முறைத் தாக்குதலையும் எதிர்த்து தாழ்த்தப்பட்டோர் தன்னெழுச்சியாகப் போராடிய பொழுது, வடமாநிலங்களுக்கு இணையாகவே தமிழகத்தின் கிராமங்களிலும் தனி தேநீர்க் குவளையும், தனிக் கிணறும், மேல்சாதி வெறியர்களின் கொட்டமும் கொடி கட்டி பறந்து வருவது அப்பட்டமாக வெளியுலகுக்குத் தெரிய வந்த பொழுது, கருணாநிதி அறிவித்த திட்டம் தான் சமத்துவபுரம்.

''சாதி, மத பேதமின்றி அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு வழி காட்டும் சமத்துவபுரம்'' என விளம்பரப்படுத்துகிறது, தமிழக அரசு. ரொம்ப சரி! சமத்துவபுரத்தில் மலம் அள்ளுவதற்கும், தெருக் குப்பையை வாரிக் கொட்டுவதற்கும் ஆட்களைப் போடுவதில் இந்த சமத்துவத்தை கடைப்பிடிக்க தி.மு.க. அரசிற்கு நேர்மையும், துணிவும் உண்டா? இட ஒதுக்கீடு, சமபந்தி விருந்து, வன்கொடுமை தடுப்புச் சட்டம்... இந்தப் பட்டியலில் இப்பொழுது மு.க.வின் சமத்துவபுரம். உண்மையைச் சொன்னால், சாதி - தீண்டாமை ஒழிப்புப் பற்றி பேசும் அருகதைகூட கருணாநிதிக்கு கிடையாது!



மதுரை மாவட்டம் - மேலூருக்கு அருகேயுள்ள மேலவளவு கிராமத்தின் தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவரை, ஓராண்டுக்கு முன்பு வெட்டிக் கொன்ற சாதி வெறியர்களுக்கு நீதிமன்றம் வழங்கிய பிணையை ரத்து செய்யக் கோரி, புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்தவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம் இது. பல்வேறு தாழ்த்தப்பட்ட அமைப்புகளும், கடந்த பல மாதங்களாகவே, இந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் போராடி வருகின்ற பொழுதும், தமிழக அரசு இந்தப் பிணையை ரத்து செய்யக் கோரி வாதாட முன் வரவில்லை.

தென் மாவட்டக் கலவரத்தையடுத்து, சென்ற ஆண்டு ஆகஸ்டு 15 அன்று கருப்புக் கொடி ஏற்ற முயன்ற தாழ்த்தப்பட்ட அமைப்புகள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டு ஒடுக்கியவர், கருணாநிதி.

தீண்டாமைக்கு எதிராகப் போராடுபவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயும் என மேல்சாதி வெறியர்களின் அடியாளாக மாறி, தாழ்த்தப்பட்டோரை மிரட்டியவர் தான் கருணாநிதி.

மதுரை மாவட்டம் பண்ணைப்புரத்தில் தனி தேநீர்க் குவளையை எதிர்த்துப் போராடிய விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பாளர் மீது ராஜ துரோக வழக்குப் போட்டு, பண்ணைப்புரத்தில் தீண்டாமை தொடர உத்தரவாதம் ஏற்படுத்திக் கொடுத்தவர், கருணாநிதி.

பார்ப்பன ஜெயாவுக்கு கொடியங்குளம் என்றால், 'சூத்திர' கருணாநிதிக்கு குண்டுபட்டி, தூத்துக்குடி - சிலோன் காலனி.

சாதிய அமைப்பு முற்றிலும் தகர்ந்துவிடாமல் காப்பதற்காகவே சமூக நீதி என்ற பெயரில் அறிவிக்கப்படும் கவர்ச்சிவாதத் திட்டங்கள் ஒருபுறம்; இந்தக் கவர்ச்சிக்கெல்லாம் மயங்காது, தீண்டாமையை ஒழித்தே தீருவது எனத் தாழ்த்தப்பட்டோர் போராடும் பொழுது, அவர்கள் மீது ஏவிவிடப்படும் அரசு ஒடுக்குமுறை மறுபுறம். இந்த மோசடித்தனமான சமூகநீதி தொடர இனியும் அனுமதிக்கலாமா?

படிப்பகம்